ஆதித்யாய ச ஸோமாய மங்களாய புதாய ச
குரு ஸுக்ர சநிப்யஸ்ச ராஹவே கேதவே நம:

ஸ்வஸ்தி ஸ்ரீ

பிலவ வருஷ

பஞ்சாங்கம்

(ஸூர்ய ஸித்தாந்த - த்ருக்கணித (இந்திய அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட சித்ர பக்ஷ அயனாம்ஸ) முறையில் மிகத்துல்லியமாகக் கணிக்கப்பட்டது).

2021 - 2022

கணித்தெழுதியவர் :

ஜோதிஷ ப்ருஹஸ்பதி, பஞ்சாங்கக் கணிதக் கலாநிதி

பராசரம் பாலசுப்ரமணியம், எம்.ஏ.,

திருச்சானூர் - திருப்பதி ஆ.பி.

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.

2021

ஈசாநாம் ஜகதோஸ்ய, வேங்கடபதே: விஷ்ணோ: பராம் ப்ரேயஸீம்
தத்வக்ஷஸ்தலநித்யவாஸரஸிகாம் தத்க்ஷாந்திஸம்வர்த்திநீம்
பத்மாலங்க்ருதபாணிபல்லவயுகாம் பத்மாஸநஸ்தாம் ச்ரியம்
வாத்ஸல்யாதி குணோஜ்வலாம் பகவதீம் வந்தே ஜகந்மாதரம்

நித்யாய நிரவத்யாய ஸத்யானந்த சிதாத்மனே
ஸர்வாந்தராத்மனே ஸ்ரீமத் வேங்கடேசாய மங்களம்

ச்ரிய: காந்தாய கல்யாண நிதயேநிதயேர்திநாம்
ஸ்ரீவேங்கடநிவாஸாய ஸ்ரீநிவாஸாய மங்களம்

பொருளடக்கம்

பக்க எண்.

ஆனந்தமாக வாழ எளிய பரிகாரங்கள் – சிறப்புத் தலையங்கம்..... V-X

வர்த்தமானம் – வருஷ ஜாதகம் – ஜகத் ஜாதகம் – பலன்கள் – நவநாயகர்களின் பலன்கள்,
மகர சங்கராந்தி – மழை யோகம் – மழையளவு, காற்றினளவு, அப்தயோகப் பலன்கள் –
ஆருத்ரா பிரவேச ரவி பலன் – கிரஹணங்கள்–குரு–சுக்ர மௌட்யம்–பெயர்ச்சி, வருஷ தான்யாதிகள்....

ஆதாய–விரய–கந்தாய பலன்கள்..... 1–9

கிரக சஞ்சாரப்பலன்கள், சித்திரை முதல் பங்குனி ஈறாக..... 10–13

முக்கிய பண்டிகைகள்..... 14

விவாஹ சுபமுகூர்த்த நாட்கள் சித்திரை முதல் பங்குனி ஈறாக, மற்றும் ப்லவ வருஷ சுபமுகூர்த்தங்கள். 15–18

பொதுவான சுபநாட்கள், கடன் தீர்க்க ஏற்ற நாட்களும் நேரங்களும்..... 19–22

கிரக பாத சாரங்கள்..... 23–34

சந்திராஷ்டம நாட்கள்..... 35

திருமலையில் செய்யக்கூடியன செய்யக்கூடாதன 36

கிரகங்களின் நிரயண சுத்த ஸ்புடங்கள்..... 37–49

திதி–நட்சத்திரம்–யோகம்–கரணம் முதலியன (சித்திரை முதல் பங்குனி ஈறாக)..... 50–73

சூரிய உதயாஸ்தமனம் – பன்னிரண்டு லக்ன ஆரம்ப காலங்கள் (ஜனவரி முதல் டிசம்பர் வரை)..... 74–85

சுபநாட்களை நீங்களே தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம்..... 86–89

குடும்பத்தலைவர் / தலைவியின் கவனத்திற்கு..... 90–93

வதுவரன் குணமேளன சக்கரம், திருமணப் பொருத்தங்கள்..... 94–98

ஜென்ம நட்சத்திரத்தோஷமும் பரிகாரங்களும்..... 99–101

ஏகவிம்சதி (21) மஹாதோஷங்களும் அவற்றின் பரிகாரங்களும்..... 102–103

விவசாயிகள் கவனத்திற்கு..... 104–105

வியாபாரிகள் கவனத்திற்கு..... 106–107

வெற்றி தரும் நேரங்கள் – துர்முகூர்த்தங்கள்..... 108

ஸ்ரீ சுக்ராச்சாரியாரின் அஷ்ட சித்தாந்த சாரம்..... 109–115

மேல்நோக்கு நாள், கீழ்நோக்கு நாள், சமநோக்கு நாள், வெள்ளி (சுக்ரன்) எதிரில் இருப்பது –
ஆடி 5–ம் தேதி, சகுன பலன்கள், தனிஷ்டா பஞ்சமியும் பரிகாரமும்..... 116

பக்க எண்.

பஞ்சபட்சி சாஸ்திரம்..... 117–120

ஆனந்தாதி யோகங்கள்..... 121

கிருகப்பிரவேசம், கிருக ஆரம்பம், பிரயாணம், கிணறுவெட்ட, ஏர்உழ, கூடாத நாட்கள், ருது பலன்கள்,

தாரா பலன்கள்..... 122

பல்லி விழும் பலன் – கனவுகளுக்குப் பலன்கள், பஞ்சாங்கக் குறிப்பு எழுத்துக்கள்,

அமிர்த–சித்த – மரண யோகங்கள் 123–124

கோதூளி லக்னம், தோஷமற்ற காலம், கரிநாள், கர்ப்போட்ட நாட்கள், அபிஜித், காலற்ற, உடலற்ற,

தலையற்ற நாட்கள் விஷமல மாதங்கள், சந்த்ராஷ்டம விளக்கம்,அர்தோதய–மகோதயம்

சித்திரைப்பிறப்பு, வாஸ்து புருஷன் விழித்திருக்கும் நாட்களும் நேரமும், பஞ்சகம் அறிய.....125–126

இராகு, எமகண்ட, குளிகாதி காலங்கள், ஜென்ம நட்சத்திரத்தில் செய்யத்தக்கவை, செய்யத்தகாதவை,

சங்ரமண புண்யகாலம்..... 127

தமிழ் வருடங்களும் அவற்றிற்குரிய ஆங்கில வருடங்களும்..... 128

கிரக ஆதிபத்திய – உச்ச–நீச வீடுகள், நவரத்தினங்கள்..... 129

நவகிரக குணங்கள் – விளக்கம்..... 130

தசா–புக்தி–அந்தரம்.....131–139

மகாதசை – புக்திகள்..... 140

ஹோரை – கௌரி பஞ்சாங்கம்..... 141–142

நவக்ரஹங்களின் ஸ்தோத்திரங்கள், வழிபாட்டு ஸ்தலங்கள்–வாஸ்து விஷயங்கள்.....143–145

மணி நிமிடங்களை நாழிகை வினாடியாக மாற்ற..... 146

சூரிய உதய அஸ்தமன சுதேச நேரங்கள்..... 147

தமிழ்நாட்டிலுள்ள முக்கிய ஊர்களின் அட்சரேகை, தீர்க்க ரேகை..... 148

நாயன்மார்கள், ஆழ்வார்கள், மத்வாச்சாரியார் திருநட்சத்திரங்கள் முதலியன.....149–150

வருட இராசிப்பலன்கள்..... 151–156

திருமலை திருப்பதி தேவஸ்தான உத்ஸவாதி பட்டியல்.....157–181

ஆனந்தமாக வாழ எளிய பரிகாரங்கள்

பேரன்புடையீர்! வணக்கம்.

வாழ்க்கை ஏதோ போய்க்கொண்டிருக்கிறது என்பது வேறு. வாழ்க்கையை அனுபவித்து வாழ்வது வேறு. முன் கூறியது, பல பிரச்சனைகளுக்கிடையே உழலும் மனிதன் விரக்தியில் கூறுவது.

தன் போக்கில் வாழ்க்கையை நடக்கவிடாமல் சிந்தித்து வாழ்வதே வாழ்க்கை.

மனிதனுக்கு இருவகையான தேவைகள் உள்ளன. உணவு, உடை, தங்குமிடம் ஆகியன முதல் வகையான அடிப்படையான தேவைகள். இவற்றால் மட்டுமே அவன் திருப்தியடைந்து வாழ இயலாது. அன்பு வேண்டும், அறிவு வேண்டு, இன்பம் வேண்டும், ஆற்றல் வேண்டும், இவற்றை எல்லாம் விட நோயற்ற ஆரோக்கியமான உடலும், மன அமைதியும் வேண்டும். இவ்வாறு எத்தனையோ வேண்டியுள்ளன. ஒரு கோணத்தில் பார்க்கும்போது அடிப்படைத் தேவையான உணவு, உடை, உறையுள் ஆகியவற்றுடன் மற்ற தேவைகளும் இன்றியமையாதனவாகும். அவையும் வாழ்க்கைத் தேவைகளே (Essense of needs). இந்த இரண்டு வகையான வாழ்க்கைத் தேவைகளையும் பூர்த்தி செய்வதற்குத் துணை செய்வது கல்வியேயாகும். அது முழு கல்வியாக இருத்தலவசியம்.

ஒரு காலத்தில் நமது நாட்டில் வாழ்க்கைக் கல்வி முழுமையாகவும், சிறந்த முறையிலும் இருந்து வந்தது.

நமது பாரத நாட்டில் ஆன்மீகத்தில் உச்சங்களைக் கண்ட உபநிஷத் முனிவர்களைப் போலவே உலகியல் துறைகளிலும் மாமேதைகளை உருவாக்கியது பாரதம்.

மருத்துவத்தில் சரகர், சுருதர், வானவியலில் ஆர்யபட்டர், வராஹமிஹிரர், பாஸ்கரர், காளிதாஸர், பராஸரர், கணிதத்தில் பாஸ்கரர், லீலாவதி, அரசியலில் சாணக்கியர் என்று நீள்கிறது அத்தகைய மேதைகளின் பட்டியல்.

பொருளாதாரத்திலும், வாணிபத்திலும் ஈடுயிணையற்று திகழ்ந்தது நமது பாரதம். இவற்றிற் கெல்லாம் அடிப்படையாகத் திகழ்ந்தது அக்காலத்தில் நடைமுறையில் இருந்து வந்த வாழ்க்கைக்கல்வி முறை.

சமீபகாலத்தில் அத்தகைய கல்விமுறையை வற்புறுத்தியவர் சுவாமி விவேகானந்தர்.

"அனைவருக்கும் கல்வி அளிப்பதன் மூலம் தான் இந்தியாவின் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணமுடியும்" என்ற முதல் குரல் அவரிடமிருந்துதான் எழுந்தது.

மேலும், அவர் கூறுவதாவது :

தற்போதைய பல்கலைக் கழகங்களில் நிலவுகின்ற கல்வி கல்வியே அல்ல. உண்மையான கல்வி என்பது தகவல்களைச் சேகரிப்பதல்ல; அது மனதின் இயல்பை, ஆற்றலை வளரச் செய்வதாக இருத்தல் வேண்டும். மனிதனைச் சரியாக சிந்திக்கவும், மன ஆற்றலை வெளிப்படுத்தும் விதமாகவும், அதற்கான பயிற்சிகளை அளித்து மன ஆற்றல்மிக்க மனிதனாக பயிற்றுவிக்கும் கல்வியே உண்மையான கல்வியாகும்.

சிந்தித்து வாழ்வதே சரியான உண்மையான வாழ்க்கையாகும். அவ்வாறு சிந்திக்க மனப்பயிற்சி அவசியம்.

மேலும், சுவாமி விவேகானந்தர் பின்வருமாறு கூறுகிறார். "என்னைப் பொறுத்தவரையில் கல்வியின் சாரம் மன ஒருமைப்பாடே தவிர தகவல்களைச் சேகரிப்பதல்ல. நான் மீண்டும் படிக்க நேர்ந்தால் ஒரு போதும் தகவல்களைச் சேகரிக்கமாட்டேன். முதலில் மன ஒருமைப் பாட்டையும், பற்றின்மையும் வளர்த்துக் கொண்டு, பின்னர் பரிபூரணமான பக்குவபட்ட மனதைப் பெற்று, விரும்பும் போது தகவல்களைச் சேகரித்துக் கொள்வேன். குழந்தையை வளர்க்கும்போது இந்த இரு ஆற்றலையும் வளர்க்க வேண்டும்" என்பர்.

மன ஒருமைப்பாட்டின் மூலம் எதையும் சாதிக்க முடியும். மலையைக் கூட அணுஅணுவாக உடைத்தெறிய முடியும். மன ஒருமைப்பாடே எல்லா அறிவின் சாரமாகும். மனம் குவியாமல் எதுவும் செய்ய முடியாது.

சாதாரண மனிதனில் தொண்ணூறு சதவீதம் 'எண்ண ஆற்றல்' வீணாகிறது. ஆகையால் தான் அவன் அடிக்கடி தவறு செய்கிறான். பயிற்சி பெற்ற மனமோ, மனிதனோ தவறு செய்வதில்லை.

மனம் ஒருமைப்பட்டு தன்னை (ஆத்மாவை) நோக்கித் திரும்பும்போது நம்முள் உள்ள எல்லாமே நமது பணியாளர்களாகி விடுகின்றன. நமது எஜமானர்களாக இருப்பதில்லை. எனவே வாழ்க்கையில் எதையாவது சாதிக்க வேண்டுமானால், பிரச்சனைகளைத் தீர்க்கவேண்டுமானால் துன்பங்கள், துயரங்கள் ஆகியவற்றை அடியோடு நீக்கவேண்டுமானால், அமைதியாக வாழவேண்டுமானால் மனதை ஒருமைப்படுத்த வேண்டும். இதுதவிர்க்கவொண்ணாதது.

ஆனால், எடுத்த எடுப்பில் மனதை ஒருமைப்படுத்த இயலாது. அப்படியே முயன்றாலும் அது பொதுவாகத் தோல்வியிலேயே முடியும். ஒருமைப்பாடு என்பது படிப்படியாக மனதை சிறு எல்லைக்குள் கட்டுப்படுத்துதல் ஆகும்.

ஒரு சமயம் மகாராஷ்டிரத்திலிருந்து ஓர் அன்பர் திருவண்ணாமலையில் உள்ள ரமணாஸ்ரமத்தில் தங்கி இருந்து, பகவான் ஸ்ரீரமணரிடம் சில ஐயங்களைக் கேட்டுத் தெளிவு பெற்றார். அந்த ஐயங்கள் ஆசைகளால் சஞ்சரிக்கும் மனதை எப்படி கட்டுப்படுத்துவது என்பதைப் பற்றியதாகும்.

அதற்கு பகவான் ஸ்ரீரமணர் தியானத்தைப் பற்றியும், அதன் சிறப்பையும், எவ்வாறு தியானிக்கவேண்டும் என்பது பற்றியும் பகவத் கீதை ஆறாவது அத்தியாயத்தில் உள்ள சில சுலோகங்களை விளக்கிக் கூறி, அவற்றின் பொருளைத் தெளிவுபடுத்தி வழிகாட்டினார்.

பகவான் எடுத்து விளக்கிய சுலோகங்களில் சிறப்பான ஒன்றை கீழே காணலாம்.

யதோ யதோ நிச்சரதி மனச் சஞ்சல மஸ்திரம் !
ததஸ்ததோ நியம்யை தத்தாமந்யேவ வசம் நயேத் !!

– கீதை 6 – 26

மனம் எதிலும் நிலைகொள்ளாது. மிகவும் சஞ்சலமானது. அது இயல்பாகவே ஒருகணம் கூட ஒரு விஷயத்தில் இருக்க விரும்புவதில்லை. அதுவும் புதிய பயிற்சியிலிருந்து தப்பி ஓடிக்கொண்டே இருக்கும். சாதகன் முழுமுயற்சி செய்து மனதைப் பரமாத்மாவிடம் கொண்டு நிறுத்துவான். அது அங்குதான் இருக்கிறது என்று நினைப்பான். அடுத்த கணம் பார்த்தால் அது அங்கு இருக்காது. எவ்வளவு தூரம் ஓடி விட்டது என்பதைக் கூட கண்டுபிடிக்க முடியாது. இதைத்தான் முன் சுலோகத்தில் (6–25) சாதகன் மிகவும் கவனமாக இருந்து பரமாத்மாவைத் தவிர வேறு எதைப்பற்றியும் மனதில் சிந்தனை எழாமல் பார்த்துக் கொள்ளவேண்டும் என்று சொன்னார். அந்த சுலோகம் பின்வருமாறு.

சநை: சநைரு பரமேத் புத்த்யா த்ருதிக்ருஹீ தயா !
ஆத்ம ஸம் ஸ்தம் மந: க்ருத்வா ந கிஞ்சிதபி சிந்தயேத் !!

– கீதை 6–25

படிப்படியாக மனதை உலகியலிலிருந்து ஒதுங்கச் செய்வது எப்படி? உறுதி கொண்ட புத்தியினால் மனதைப் பரமாத்மாவில் நிலைபெறச் செய்வது எப்படி?

புலன்களை வெளிப் பொருட்களிலிருந்து முழுமையாக மீட்க வேண்டும். மனம் போக விஷயங்களைப் பற்றிச் சிந்திக்கும் வரை அது பரமாத்மாவில் ஒரு முனைப்புடன் ஈடுபடாது. புலன்களையும் அத்தகைய போக விஷயங்களிலிருந்து முற்றிலும் மீட்கவும் முடியாது.

போக விஷயங்களைச் சிந்திப்பது மனதிற்கு அநாதிகாலமாக ஏற்பட்டவழக்கம். வெகு நாட்கள் பழக்கமான போக சிந்தனையிலிருந்து மனதை மீட்டு, பரமாத்மாவில் இணைய வைக்க வேண்டும்.

மனதிற்கு ஒரு சுபாவம் உண்டு. எதை பற்றிக்கொள்ளும் பழக்கம் உள்ளதோ அதுவாகவே ஆகிவிடும். பிறகு அதிலிருந்து எளிதாக மீட்க முடியாது. அதை மீட்பதற்குரிய உபாயம் இதுதான்.

முதலில் ஏற்பட்ட பழக்கத்தை மாற்றி புது பழக்கத்திற்குத் தீவிரமான பயிற்சி அளிக்கவேண்டும். சிறிதளவும் சோர்வு அடையக்கூடாது. எடுத்துக் கொண்ட இலக்கில் திடமான, உறுதி படைத்த புத்தியைக் கொண்டு மனதைத் திருத்தித் தடுத்து, அறிவுறித்திப் புது பழக்கத்தில் ஊன்ற வைக்க வேண்டும். சிறிதளவு உறுதி தளர்ந்தாலும் அவசரப்பட்டாலும் காரியம் கைகூடாது. புத்தி திடமாகவும், பயிற்சி இடைவிடாதும், தொடர்ந்தும் இருந்தால் சில நாட்களில் மனம் பழைய விஷயங்களிலிருந்து முழுமையாக விலகி புது விஷயத்தில் லயித்து அதுவாகவே ஆகிவிடும். அதாவது இங்கு மனம் ஆத்மாவுடன் இணைந்து ஒன்று பட்டுவிடும். பிறகு அதிலிருந்து நழுவுவது இல்லை. இப்பொழுது உள்ளது போல் அதிலேயே லயிக்கும். இதைத் தான் பகவான் ஸநை: ஸநை: ப்ரடிப்படியாக மனதை உலகியலிலிருந்து ஒதுங்கச் செய்ய வேண்டும் என்றும், உறுதி பூண்ட பக்தியுடன் பரமாத்மாவிடம் இணைய வைக்க வேண்டும் என்றும் கூறுகிறார்.

சிறு குழந்தை கத்தியையோ, கூறான பொருளையோ எடுத்துக் கொண்டுவிட்டால் அதனைக் கண்ட தாயார் பயந்து கடிந்து, அவசியமானால் அச்சுறுத்தி மெல்ல, மெல்ல அக்கத்தியைப் பறித்து விடுவது போல் விவேகமும், வைராக்யமும் புத்தியின் துணைக்கொண்டு உலகியல் போகங்கள் அநித்யம் என்றும், நொடியில் அழியும் என்றும் மனதிற்கு அறிவுறித்தி அவற்றில் ஈடுபட்டால் ஏற்படும் பந்தத்தையும், துன்பத்தையும் சுட்டிக் காட்டி மோகப்பொருட்களின் நினைவுகளை மனதிலிருந்து முழுமையாக அகற்றவேண்டும். மனதில் போகப்பொருட்களின் சிந்தனைகள் இல்லாததாகச் செய்யவேண்டும். அந்த நினைவுகளை முற்றிலும் துறக்கும்வரை சாதகன் தியானத்தில் ஈடுபடவேண்டும்.

தியானத்தால் எல்லா எண்ணங்களும் ஒழிந்து மனம் காலியாகிறது (empty mind). எண்ணங்களற்ற மனம் அமைதியை அடைகிறது. அமைதி ஆற்றலை அதிகரிக்கச் செய்கிறது. எந்த ஒரு செயலையும் நுட்பமாகவும், நேர்த்தியாகவும், அழகாகவும், விரைவாகவும், மிக்கத் திறமையுடனும் செய்து வெற்றியை ஈட்டித்தரும்.

எனவே வாழ்க்கைக் கல்விக்கு தியானப்பயிற்சி இன்றியமையாதது.

நன்றி வணக்கம்.

ஜோதிஷ ப்ருஹஸ்பதி, பஞ்சாங்கக் கணிதக் கலாநிதி

பராசரம் பாலசுப்ரமணியம்,

நெ. 1, அலுமேலுமங்கா அபார்ட்மெண்ட்ஸ்,
எஸ்.வி.பி. காலனி, திருச்சானூர்-517503. ஆ.பி.
செல் : **91-99499 22677**
e.mail : parasaram9@gmail.com

வாசகப் பெருமக்களுக்கு.

சென்ற ஆண்டு (சார்வரி - 2020-2021) பஞ்சாங்கத்தில் குறிப்பிட்டவையும் நடந்தவையும் சிலவற்றை கீழே காணலாம்.

சித்திரை **பக்கம் -10**	**அரசு கொண்டு வரும் நலத்திட்டங்களுக்கு எதிர்க்கட்சிகள் ஒத்துழைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.** Corona Lock down - அறிவிக்கப்பட்டது. ஊரடங்கு நாடு முழுவதும் அனுசரிக்கப்பட்டது
வைகாசி **பக்கம் -10**	**நிலநடுக்கம், பெருங்காற்று, பெருமழையும் உண்டு** 17.05.2020 ஆம்பன் புயல் உருவானது. ஒடிஸா, மேற்கு வங்கம் பாதிப்புக்குள்ளானது. குஜராத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்திய வங்கதேச எல்லையில் நிலநடுக்கம் ஏற்பட்டது. **எதிர்க்கட்சிகளின் செல்வாக்கு குறையும்** தி.மு.க. வைச் சேர்ந்த மக்களவை உறுப்பினர் கைது செய்யப்பட்டார்.
ஆனி **பக்கம் - 10**	**வெள்ளப் பெருக்கு நில நடுக்கம்** 24.06.2020 அஸ்ஸாமில் பெரும்வெள்ளம் ஏற்பட்டது. நான்கு மாவட்டங்களில் பெரும் பாதிப்பு ஏற்பட்டது. **நாகலாந்தில் பெரும் பாதிப்பு ஏற்பட்டது** 15.07.2020 அஸ்ஸாம் வெள்ளத்தால் 13 லட்சம்பேர் பாதிக்கப்பட்டனர். மும்பையில் பெருமழை. 17.07.2020 காஷ்மீரில் நில நடுக்கம் ஏற்பட்டது. 20.07.2020 ஆப்கானிஸ்தானில் நிலநடுக்கம். 20.07.2020 ஹிமாச்சல் பிரதேஷம் சிம்லா அருகில் நிலச்சரிவு ஏற்பட்டது.
ஆடி **பக்கம் - 11**	**இயற்கைச் சீற்றமும் உயிர்ச் சேதமும்** ஆகஸ்ட் முதல் வாரத்தில் (அஸ்ஸாம், பீஹார், மும்பை, டெல்லி) பெருமழை வெள்ளப்பெருக்கு 05.08.2020 பீருட்டில் எரிமலை வெடிப்பு. 07.08.2020 கோயமுத்தூரில் வீடுகளில் வெள்ளம் புகுந்தது. 08.08.2020 கோழிக்கொட்டில் விமான விபத்து, இடுக்கி நிலச் சரிவு.

ஆவணி **பக்கம் - 11**	**பெண்ணொருவர் பாராட்டப்படுவார்** அமெரிக்காவில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த கமலாஹாரிஸ் என்பவர் துணை அதிபர் பதவிக்குத் தேர்வு செய்யப்பட்டார். ஆகஸ்ட் மாதம் ஆரம்பம் முதல் இறுதி வாரம் வரையில் வட இந்தியாவில் நல்ல மழையும், வெள்ளப் பெருக்கமும் ஏற்பட்டது. ஆகஸ்ட் 24,25 உத்தரகாண்டில் பெரும் வெள்ளம். ரிஷிகேஷ், கங்கோத்ரியில் வெள்ளத்தால் சாலைகள் துண்டிப்பு. செப்டம்பரில் மேசக் புயல் ஜப்பானைப் பெருமளவில் தாக்கியது.
புரட்டாசி **பக்கம் - 11**	**இயற்கைச் சீற்றம் ஏற்படும்.** 13,14-10-2020 -ல் ஐதராபாத்தில் பெருமழை வெள்ளம் ஏற்பட்டது.
ஐப்பசி **பக்கம் - 12**	**நிலநடுக்கம் ஏற்படும்.** 30.10.2020 -ல் துருக்கியில் நிலநடுக்கம் ஏற்பட்டது. 01.11.2020 -ல் காஷ்மீரில் நிலநடுக்கம் ஏற்பட்டது. பிலிப்பைன்ஸ் நாட்டில் பெரும் புயலால் மக்கள் அவதி.
கார்த்திகை **பக்கம் - 12**	**வெள்ளப்பெருக்கு, இயற்கை பாதிப்பு ஏற்படும்** 24,25-11-2020 நிவர் புயல் தமிழ் நாட்டையே உலுக்கியது. எல்லா ஏரிகளும் நிரம்பின, வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு மக்கள் அவதியுற்றனர்.



ஸ்வஸ்திஸ்ரீ பிலவ வருஷ வர்த்தமானம்

கலியுகாப்தம்	: 5122	ஆங்கிலம்	: 2021-2022
சகம்	: 1943-44	கலிசுத்த தினம்	: 18,70,852 நாட்கள்.

நவநாயகர்கள்				உபநாயகர்கள்
ராஜா	–	செவ்வாய்	–	குதிரைகளுக்கதிபதி.
மந்திரி	–	புதன்	–	யானைகளுக்கதிபதி.
ஸேனாதிபதி	–	செவ்வாய்	–	பசுக்களுக்கதிபதி.
ஸஸ்யாதிபதி	–	சனி	–	பிரஜைகளுக்கதிபதி
மேகாதிபதி	–	செவ்வாய்	–	ஒட்டகங்களுக்கதிபதி.
அர்க்காதிபதி	–	செவ்வாய்	–	மரம், செடி, மூலிகைகளுக்கதிபதி
தான்யாதிபதி	–	குரு	–	பறவைகளுக்கதிபதி
ரஸாதிபதி	–	சந்திரன்	–	சர்ப்பங்களுக்கதிபதி.
நீரஸாதிபதி	–	சுக்ரன்	–	கிரஹங்களுக்கதிபதி
பசுநாயகர்	–	யமன்	–	கால்நடைகள், காடுகளுக்கதிபதி.

வருஷ ஜாதகம் :

சலிதாசல ஸங்காஸை பயோதராவ்ருதம் ஸப: ।
திவ்யந்திதம் யாப: ப்ளவாப்தே ப்ளவகாசன: ॥

சந்திரன் புதன் சூரியன்	யுரேனஸ் சுக்ரன்	செவ்வாய் (ல) ராகு	
நெப்ட்யூன் குரு	வருஷ ஜாதகம் 12- 04-2021 கா.08மி.01நி. (யுகாதி)		
சனி ப்ளூட்டோ			
	கேது		

பிலவ வருஷத்தில் மலை போன்ற பெரிய அளவில் மேகங்கள் தோன்றி மழை பெய்விக்கும். மக்கள் சுகமாக இருப்பர். லக்னத்தில் செவ்வாயும், ராகுவும் அமர்ந்துள்ளதால் வன்முறை, கிளர்ச்சி, அராஜகம், விபத்துக்கள், திருடு, கொள்ளை, போர் பதட்டநிலை, வேலை நிறுத்தம், அமைதியின்மை அதிகரிக்கும். எனினும் சங்கடராசிச் சக்கரப்படி அவர்களுக்கு குருவின் சுபவேதை ஏற்படுவதால் அரசாங்கம் காவல் மற்றும் ராணுவத்தின் உதவியுடன் அவற்றை வெற்றிகரமாக அடக்கிச் சமாளிக்கும். ஏழில் கேது உள்ளதால் விவாகரத்து வழக்குகள் பெருகும். **ஒன்பதில் ப்ளூட்டோ உள்ளதால் பெரும் மாற்றத்திற்கு நாடு தன்னைத் தயார்ப் படுத்திக்கொள்ளும். கலையுலகைச் சேர்ந்தவர் அல்லது பெண்ணொருவருக்கு மிக உயர்ந்த பதவி கிட்டும்.** ஒன்பதில் சனி அமர்ந்துள்ளார். கப்பல் போக்குவரத்து பாதிக்கப்படும். மத – இன போராட்டம் வலுக்கும். பத்தில் குரு நெப்ட்யூன் பாரதத்திற்கு உலகளாவிய ஆதரவும், பாராட்டும் கிடைக்கும். பதினொன்றில் சந்திரன், நாடாளும் மன்றத்தில்

முன்னேற்றத்திற்குரிய நல்ல பல திட்டங்கள் நிறைவேறும். கல்வி, பாடதிட்டங்களில் பெரும் மாற்றங்கள் உருவாகும். தொழிற் கல்விக்கும் கணினி சம்பந்த பாடங்களுக்கும் பள்ளிகளிலேயே முன்னுரிமை வழங்கப்படும்.

பன்னிரண்டில் சுக்ரன் யுரேனஸ் : இசை, சினிமா, நாடகம், நாட்டியம் போன்ற கலைகள் நல்ல வளர்ச்சி பெறும். பெண்கள் கௌரவிக்கப்படுவர். சிறைச்சாலை மற்றும் மருத்துவச் சாலைகள் சம்பந்தமான சட்டத்திருத்தங்கள் கொண்டு வரப்படும்.

சாந்த்ர ஆஷாட மாஸம் (10.07.2021 முதல் 08.08.2021 வரை) மற்றும் மார்கசிரமாஸம் (05.12.2021 முதல் 02.01.2022 வரை) சத்ர பங்கம் என்னும் அசுப யோகம் உருவாகிறது, இதனால் சில மாநில அரசுகள் ஆட்சியை இழக்கக்கூடும்.

ராஜ்யஸ்தானம் என்னும் பத்தாம் வீட்டில் குரு அமர்ந்துள்ளதால் மத்தியில் ஆட்சி நிலையாக இருக்கும்.

நவம்பர் மாதம் 20 ஆம் தேதி குரு பகவான் கும்பராசியில் பிரவேசிக்கிறார். பீம ரதிபுஷ்கரம் ஆரம்பமாகிறது.

ஜகத் ஜாதகம் :

பிலவத்தின்மாரி கொஞ்சம் பீடைமிகும்
ராசர்சல மிகுதிதுன்பம்பெருகும் - நலமில்லை
நாலு காற்சீவனெல்லாம் நாசமாம்
வேளாண்மை பாலுமின்றி செய் புவனம்பாழ்.

<table>
<tr><td>புதன்</td><td>யுரேனஸ்
சுக்ரன்
சூரியன்
சந்திரன்</td><td>ராகு</td><td>செவ்வாய்</td></tr>
<tr><td>நெப்ட்யூன்
குரு</td><td colspan="2" rowspan="2">ஜகத் ஜாதகம்
தமிழ் வருடப்பிறப்பு</td><td></td></tr>
<tr><td>(ல)
சனி
ப்ளூட்டோ</td><td></td></tr>
<tr><td></td><td>கேது</td><td></td><td></td></tr>
</table>

ராஜ்யஸ்தானம் என்னும் பத்தாம் இடத்தை சனி, குரு, சூரியன், சந்திரன் மற்றும் சுக்ரன் ஆகியோர் நோக்குவதாலும், நான்காமிடத்தில் சூரியன் உச்சம் பெற்றுள்ளதாலும், பொதுமக்களிடையே அரசுக்கு ஆதரவு பெருகும். ஆட்சிமாற்றம் ஏற்படவாய்ப்பில்லை.

சட்டம் ஒழுங்கு சிறப்பாக இருக்கும். வணிகம், பக்தி, ஆன்மீகம் பெரும் வளர்ச்சிகாணும். தேச பக்தி அபிவிருத்தியடையும். எழுத்தாளர்கள், கவிஞர்கள், பதிப்பகத்தார் பாராட்டப்படுவர். கல்வி, விவசாயம், சுற்றுலாத்துறை ஆகியன நல்லமுன்னேற்றமடையும். இரும்பு, எஃகு, தாதுப்பொருட்களின் உற்பத்தி பெருகும். இரண்டில் குரு உள்ளதால் நாடு பொருளாதாரத்தில் தன்னிறவை எட்டும். புதிய தொழிற்சாலைகள் தோன்றும். வேலைவாய்ப்புகள் பெருகும்.

ஆறாமிடத்தில் செவ்வாய் அமர அவரை குருநோக்குவதால் கொரோனாத் தொற்று சென்ற ஆண்டு இருந்த அளவிற்கு அதன் தீவிரம் இருக்காது. நிர்வீர்யமடையும்.

பல்வேறு நாடுகள் பாரதத்துடன் நட்பு ஏற்படுத்திக்கொள்ளும். ஆதரவும், பாராட்டும் கிடைக்கும், மருந்து உற்பத்தித் தொழிற்சாலைகள் மற்றும் மருத்துவச் சாலைகளும் பெருகும். எனினும் அரசியல் கொந்தளிப்பு, அராஜகம், வன்முறை, கலகம் மற்றும் பொது சொத்துக்கள் சேதாரம் அதிகரிக்கவேச் செய்யும். சில அரசியல் பிரமுகர்கள் ஊழல் குற்றச்சாட்டிற்கு ஆளாகி சிறைச் செல்வர்.

ஜகத் ஜாதகப்படி செவ்வாயைத்தவிர மற்ற கோள்கள் யாவும் ராகு - கேதுவிற்கிடையில் வருவதால் நில நடுக்கம், குண்டு வெடிப்பு, நிலச்சரிவு, பெருவெள்ளம் ஆகியவற்றால் பாதிப்புகள் ஏற்படும்.

குரு சஞ்சார பலன்கள் :

வருட ஆரம்பத்தில் கும்பத்தில் உலவுகிறார். ஜூன் 21-ல் வக்ரகதியை அடைந்து செப்டம்பர் 14-ல் மகரத்திற்குப் பின்னோக்கிச் செல்கிறார். பின்னர் அக்டோபர் 18-ல் வக்ரநிவர்த்திப் பெற்று நவம்பர் 21-ல் மீண்டும் கும்பராசிக்கு பிரவேசிக்கும் குருபகவான் வருடம் முடிய கும்பத்திலேயே சஞ்சரிப்பார். பெருமளவில் உயிர்ச் சேதம், நில நடுக்கம் ஏற்படும். கும்ப குருயாதி குரு தே அல்ப்ப வ்ருஷ்டிம், என்று சொல்லப்பட்டிருப்பினும் குரு திருவோணம் மற்றும் அவிட்ட நட்சத்திரங்களில் சஞ்சரிக்கும் காலத்தை ச்ராவணவருஷம் என்பர். நல்ல மழை, நல்ல விளைச்சல் உண்டு என கார்க்க மகரிஷி கூறுகிறார். **பீமரதி புஷ்கரம் (20-11.2021-ல்)**

22-11-2021-ல் அஸ்தமனமாகும் குரு 20.03.2022 -ல் உதயமாகிறார். இக்காலத்தில் பலவகையான நோய்கள் தோன்றும்.

சனி சஞ்சார பலன்கள் : சனி வருட ஆரம்பத்தில் மகர ராசியில் உலவிடுகிறார். மே மாதம் 23-ல் வக்ரகதியை அடைந்து அக்டோபர் 11-ல் வக்ர நிவர்த்தி பெறுகிறார். ஜனவரி 2022-18ஆம் தேதி அஸ்தமனம் அடையும் சனி பிப்ரவரி 22-ல் உதயமாகிறார்.

சனிபகவான் மகர ராசியில் வக்ரமாக சஞ்சரிக்கும் காலத்தில் அரசியலில் பிரபலமானவர்களுக்கு ஆபத்து ஏற்படக்கூடும். பாதுகாப்புப் பலப்படுத்துவது அவசியமாகும்.

ராகு கேது சஞ்சாரப் பலன் : ராகு வருட ஆரம்பம் முதல் இறுதி வரை ரிஷப ராசியிலேயே சஞ்சரிப்பார். கேது விருச்சிகத்தில் சஞ்சரிப்பார். சுதந்திர இந்தியாவின் ஜன்ம லக்னம் ரிஷபமாகும்.

சுதந்திரம் அடைந்தபின் டிசம்பர் 1947-ல் வன்முறை, மத-இன கலவரத்தால் துன்பகரமான விளைவுகள் ஏற்பட்டது.1965-ல் பாகிஸ்தான் கச்ரன் பகுதியிலும் காஷ்மீரிலும் தாக்குதல் நடத்தியது.1983-1985-ல் ராகு ரிஷபத்தில் சஞ்சரித்தபோது (Operation Blue Star) என்று அழைக்கப்படும் கலவரம் அமிர்தசரசில் பொற்கோயில் தாக்கப்பட்டது. 1984-ஜூன் மாதம் ராகு ரிஷபத்திலும், கேது விருச்சிகத்திலும் சஞ்சரித்துக் கொண்டிருந்தபோது திருமதி இந்திராகாந்தி அம்மையார் அவரது மெய்க்காப்பாளரால் படுகொலை செய்யப்பட்டார். எனவே, ராகு-கேது சஞ்சாரம் துன்பகரமான விளைவுகளைக் கொடுக்கும்.

நவநாயகர்களின் பலன்கள் :

ராஜா - செவ்வாய் : பொதுமக்களிடையே விரோதமும், காழ்ப்புணர்ச்சியும் அதிகரிக்கும். தீ, சாலை விபத்துக்கள், திருடு, கொள்ளை பெருகும். புதிய இரத்தசம்பந்தமான நோய்கள் தோன்றும். விளைச்சல் குறையும். ஸர்ப்பங்கள் (பாம்பு) அதிகரிக்கும். போர்பதட்ட நிலை தொடரும். வன்முறை, கலவரம், அராஜகம், குற்றங்கள் பெருகும்.

மந்திரி - புதன் : பெரும்புயல்காற்றால் பாதிப்புகள் ஏற்படும். சராசரி மழையுண்டு. பார்லி, பயறு வகைகளின் விளைச்சல் கூடும். கல்வி நிறுவனங்கள் அதிகரிக்கும். நாட்டில் எல்லா விதமான முன்னேற்றமும் ஏற்படும். எழுத்தாளர்கள், கவிஞர்கள் போற்றப்படுவார்கள். வியாபாரம், வர்த்தகம் நன்கு அபிவிருத்தியடையும். யோகா மற்றும் ஆன்மீகக் கல்வி தொடர்பான சீர்த்திருத்தங்கள் கொண்டு வரப்படும். நீர் நிலைக்கருகிலும், மலைப்பிரதேசங்களிலும் வாழும் மக்களின் நிலை உயரும். மூலிகைச் செடிகள் நன்கு வளரும். பத்திரிகை, ஊடகங்கள் தொடர்பான சட்டத்திருத்தங்கள் வரும்.

சேனாதிபதி - செவ்வாய் : சில வதந்திகள் பரவுவதன் மூலம் வியாபாரிகள் பெரும் லாபம் பெறுவர். பொதுமக்கள் பல்வேறு விதமான பாதிப்புக்களை எதிர்க்கொள்ள வேண்டி வரும். புதுவகையான காய்ச்சல் வரும். விளைச்சல் எதிர்ப்பார்த்த அளவு இராது. கடலை, துவரை போன்ற பருப்பு வகைகள் நன்கு விளையும். செம்பு உற்பத்தி பெருகும்.

ஸஸ்யாதிபதி - சனி : கரிசல் நிலங்கள் நல்ல மகசூல் கொடுக்கும். எள்ளு, உளுந்து, கடுகு, கொள்ளு நன்கு விளையும். இரும்பு, எஃகு, தோல் சம்பந்த பொருட்களின் உற்பத்தி அதிகரிக்கும். குளிர்சாதனப் பெட்டிகள், கருவிகளின் உற்பத்தி அதிகரிக்கும். பூமிக்கடியில் விளையும் கிழங்கு வகைகள், பெட்ரோல், டீசல் உற்பத்தி அதிகரிக்கும்.

தான்யாதிபதி - குரு : நல்லமழையுண்டு. விளைச்சல் கூடும். பசுக்கள் நிறைய பால் கொடுக்கும். கடலை, மொச்சை, மஞ்சள் நன்கு விளையும்.

மேகாதிபதி - செவ்வாய் : மழைக் குறைவு, பெருங்காற்றால் விளைச்சல் பாதிக்கும்.

அர்க்காதிபதி - செவ்வாய் : மழைக் குறைவு. காற்றினால் தோட்டப் பயிர் விளைச்சல் பாதிப்புக்குள்ளாகும்.

ரஸாதிபதி - சந்திரன் : மலர்கள், எண்ணெய், வெல்லம், தேன், தயிர் விலை கூடும்.

நீரஸாதிபதி - சுக்ரன் : கற்பூரம், அகரு, ஸ்ரீகந்தம், முத்து, ஆடைகள் விலை ஏறும்.

பசுநாயகர் - யமன் : கால்நடைகளுக்கு நோய் தாக்கும்.

பாவக் கோள்களின் ஆதிபத்தியம் அதிகம் வந்துள்ளதால் அராஜகம், வன்முறை அதிகரிக்கும். அதிகாரிகளுக்கிடையே பொறுப்பு உணர்வு குறையும். குற்றங்கள் அதிகரிக்கும். இராணுவத்திற்கு அதிகம் செலவு செய்ய வேண்டி வரும்.

ஸஸ்ய ஜாதகம்

குளிர்கால பயிர் விளைச்சல் (Winter crops)

		சூரியன் சுக்ரன் புதன் ராகு	செவ்வாய் சந்திரன்
குரு			
(ல) சனி			
	கேது		

லக்னத்தில் சனி அமர சந்திரனை குரு நோக்குகிறார். சூரியனுக்குப் பத்தில் குரு வீற்றுள்ளதால் குளிர்கால பயிர் விளைச்சல் நன்றாக இருக்கும்.

கோடைக்காலப் பயிர் விளைச்சல் (Summer crops)

சந்திரன்		ராகு	
(ல)			
குரு சனி			
சுக்கிரன்	சூரியன் கேது	புதன் செவ்வாய்	

சூரியன் மற்றும் சந்திரன் இருவரும் ஜலராசிகளில் வீற்றுள்ளனர். மழைக் கோளான சுக்ரன் லக்னத்திற்கு லாபஸ்தானத்தில் உள்ளார். நான்காம் வீட்டை குரு நோக்குகிறார். எனிலும் நான்கில் ராகு உள்ளதால் கோடைக் கால பயிர்விளைச்சல் காற்று, மழை, வெள்ளத்தால் விளைச்சல் பாதிப்புக்குள்ளாகும்.

ஸ்தம்பாயனம் :

ஸ்தம்பாயனக் கணிதப்படி இவ்வருடம் ஜலஸ்தம்பம், த்ருணஸ்தம்பம் ஆகியன குறிப்பிடும்படியாக வரவில்லை.

வாயுஸ்தம்பம். 16.74.% வந்துள்ளது. எனினும் அன்னஸ்தம்பம் 80.20 % வந்துள்ளதால் எல்லா தானியங்களும் அமோகமாக விளையும். விலைவாசி குறையும்.

மகர சங்கராந்தி

தை மாதம் 1 ஆம் தேதி வெள்ளிக்கிழமை (14-01-2022) பகல் 02.ம.29நி. வ. துவாதசி ரோகிணி நட்சத்திரம், பிராம்ய யோகம், பாலவகரணம். ரிஷபராசி, ரிஷப லக்னம்.

பெயர் – மிஸ்ரா – சௌக்யம்.
ஸ்நானம் – தயிர் – எருமைகளுக்குப் பீடை.
சாமரம் – ஸ்படிகம் – நிருப பீடை.
குடை – பொற்குடை – ஸ்வர்ணபீடை.
வாத்யம் – வேணி – சுகம் குறைவு.
வாகனம் – புலி – மிருகபயம்.
வஸ்த்திரம் – சிகப்பு – பயமதிகம்.
ஆபரணம் – வைடூர்யம் – கலகம் மகாபயம்.
கந்தம் – குங்குமம் – சௌக்யம்.
புஷ்பம் – செண்பகம் – விப்ர சுகம்.
பாத்திரம் – தாமிரம் – சுபிட்சம்.
போஜனம் – பாயசம் – வியாதி.
முகம் – குரோதம் – தான்ய விருத்தி.
ரோகிணி – மூலிகைச் செடிகள் அபிவிருத்தி.
சுக்ல பட்சம் – சுபிட்சம்.
துவாதசி – நன்மை, திக்கு – வடக்கு.
வெள்ளிக்கிழமை – நல்ல மழையுண்டு.
ரிஷப ராசி. சுபிட்சம். ரிஷப லக்னம். விளைச்சல் குறைவு.
மத்யான்னம். விலை குறையும்.

மழை வளம்

இவ்வருடம் வருஷ தான்யாதிகளின் கணிப்பின் படி மழை 78.9% வருகிறது :

நாகாயனம் :

இவ்வருஷம் 'ஸுபுத்னன்' என்னும் நாகம் வருகிறது. இதனால் மக்கள் நல்ல தர்ம சிந்தனையுள்ளவர்களாகவும், அறிவாற்றல் மிக்கவர்களாகவும் இருப்பார்கள். விளைச்சலுக்கேற்ற நல்ல மழைபெய்யும்.

வர்ஷப்ரமானம் (மழையின் அளவு) : மேருவின் மேற்குப் பகுதியில் உற்பத்தியாகும் மேகமானது கடலில் 7 பாகமும், மலைகளில் 10 பாகமும், நிலத்தில் 4 பாகமும் மழைப் பெய்யும்.

யோக பஞ்சக:

ஜ்யேஷ்டசுத்த பிரதமை யுக்த வாரம் : வெள்ளி. ஸுபிக்ஷம், க்ஷேமம். ஸஸ்ய விவர்த்தனம். நல்ல விளைச்சல்.

ஆஷாட சுத்த பஞ்சமி : வியாழன் – பசு அபிவிருத்தி விளைச்சல் கூடும்.

ஆஷாட சுத்த நவமி : ஞாயிறு – விலைவாசி ஏறும்.

ஆஷாட சுத்த தசமி - ரோகிணி : எல்லா வகையிலும் அபி விருத்தி ஏற்படும்.

புஷ்யத அமாவாசை : திங்கள் – பெண்கள் பாராட்டப்படுவர், விளைச்சல் அதிகரிக்கும்.

ஆருத்ரா பிரவேச ரவி பலன்

(தென்மேற்குப் பருவமழை)



22.06.2021 புதன் கிழமை ப.05ம. 39நி. வ. திரயோதசி அனுஷம், சாத்ய யோகம், கரஜி.

		(ல) ராகு புதன்	சூரி சுக்
(குரு)	22.06.2021 ப.05ம. 39நி.		செவ்வாய்
(சனி)			
	சந்திரன் கேது		

திரயோதசி – தேவைக்கேற்ற நல்லமழை.

நேரம் – உதயாத்பூர்வம் – மிகுந்த நோய்கள் தோன்றும்.

புதன் – விளைச்சல் அமோகமாக இருக்கும்.

அனுஷம் – அரசாளும் வர்க்கம் மற்றும் பொது மக்கள் திருப்தியாக இருப்பர். **தென் மேற்குப் பருவ மழை சிறப்பாக இருக்கும்.**

சாத்ய யோகம் : தடைபட்டிருக்கும் எல்லா நலதிட்டங்களும் நிறைவேறும்.

லக்னாதிபதி மழை கோளான சுக்ரன் இரண்டில் அமர, அவரை குரு நோக்குகிறார். சந்திரன் ஜல ராசியில் உள்ளார். நான்காமிடத்தையும், நான்காம் வீட்டிற்குரிய சூரியனையும் குரு நோக்குவதால் விளைச்சலுக்கேற்ற நல்ல மழை பெய்யும்.

மேலும் பிலவ வருடம் (35) ஏழாவது வியாழ வட்டத்தில் வருவதால் தேவைக்கேற்ற நல்ல மழை பெய்யும்.

கிரஹணங்கள் :

26-05-2021 புதன்கிழமை முழு சந்திர கிரகணம் : வைகாசி 12ஆம் தேதி பௌர்ணமி, அனுஷ நட்சத்திரம் கேது க்ரஸ்தும் பகல் 03ம 14நி 15வி. க்கு ஸ்பர்ஸம் மா.04ம 38நி 26வி. முழு கிரஹண ஆரம்பம். மா.04ம.48நி. 33வி. மத்திமம். மா.06ம.22நி. 50வி. மோக்ஷம்.

தமிழ் நாட்டில் இக்கிரஹணம் தெரியாது. தோஷம் இல்லை.

10-06-2021 வியாழக்கிழமை, கங்கண சூரிய கிரஹணம் : வைகாசி மாதம் 27ஆம் தேதி அமாவாசை மிருக சீர்ஷ நட்சத்திரம் ராகு க்ரஸ்தம், இந்தியாவில் தெரியாது.

19-11-2021 வெள்ளிக்கிழமை, பகுதி சந்திர கிரஹணம் : கார்த்திகை மாதம் 03ஆம் தேதி பௌர்ணமி கிருத்திகை நட்சத்திரம் ராகு க்ரஸ்தம், இந்தியாவில் தெரியாது.

04-12-2021 சனிக்கிழமை, முழு சூரிய கிரஹணம் : கார்த்திகை மாதம் 18ஆம் தேதி அமாவாசை கேட்டை நட்சத்திரம் இந்தியாவில் தெரியாது.

உதயாஸ்தமனங்கள்

குரு : 22-11-2021 - கா. 11ம. 27நி. அஸ்தமனம்.
20-3-2022 - க.7ம. 04நி. உதயம்.
20-11-2021 - இ.11ம. 31நி. கும்பம்.

சுக்ரன் : வருட ஆரம்பத்தில் அஸ்தம். 04-05-2021 உதயம்.

செவ்வாய் : 17-08-2021 - அஸ்தம். 19-11-2021 உதயம்.

சனி : 21-12-2021 - அஸ்தம் - 22-02-2022 - உதயம்.

கிரகப் பெயர்ச்சி

குரு : 18-08-2021 - கா. 6ம. 16நி. கும்பம்.
14-09-2021 - இ.11ம. 31நி. மகரம்.
18-10-2021 - கா. 10ம. 54நி. வ.நி.
14-11-2021 - ப.2ம. 20நி. மகரம் (வ).
20-11-2021 - இ.11ம. 31நி. கும்பம்.

வருஷ தான்யாதிகள்

(பூர்ண பலன் - 19)

வர்ஷம் - 15, தான்யம் - 13, சீதம் - 13, தாபம் - 7, உஷ்ணம் - 17, மாருதம் - 13, ப்ரஜாவிருத்தி - 15, ப்ரஜா க்ஷயம் - 15, ராஜவிட்டுரம் - 11, உக்த்ரம் - 5, புண்யம் - 5, பாவம் - 5, வியாதி - 13, வியாதி நிவாரணம் - 11, உக்ரம் - 5, புண்யம் - 5, பாவம் - 5, வியாதி - 13, வியாதி நிவாரணம் - 11, ஆசாரம் - 11, அனாசாரம் - 5, ஜனனம் - 15, மரணம் - 11, தேக உபத்ரவம் - 13, தேக சுகம் - 13, சோரபயம் - 9, சோர நாசம் - 3, அக்னிபயம் - 3, அக்னி சாந்தி - 3, பசி - 7, தாகம் - 7, நித்திரை - 7, சோம்பல் - 11, உத்யோகம் - 13, சாந்தம் - 15, குரோதம் - 13, டம்பம் - 05, மித்ருத்வம் - 3 மித்ர பேதம் - 15, ரஸநிஷ்பத்தி - 9, பலநிஷ்பத்தி - 13, உத்சாகம் - 11, நைஷ்டிகம் - 11, சிலாபாதம் - 11, துஷ்டநிக்ரஹம் - 11, சிஷ்டபரிபாலன - 11, பிராணி சுகம் - 11, பிராணி துக்கம் - 7, மஹோத்பாதம் - 11, மின்னல் - 7, சிலாபாதம் - 4, மேககர்ஜிதம் - 5, மிருகபாதை - 11, மிருக நாசம் - 09, அதி வ்ருஷ்டி - 9, அனாவ்ருஷ்டி - 3, எலி - 13, விட்டில் - 9, கிளி - 11, தற்கொலை - 11, பிறர்கொலை - 7, பொன் - 12, வெள்ளி - 10, தாமிரம் - 10, வெண்கலம் - 4, உருக்கு - 14 இரும்பு - 10, பித்தளை - 12, ஈயம் - 12, ரஸம் - 8, மாணிக்கம் - 15, வஜ்ரம் - 13, வைடூர்யம் - 13, மரகதம் - 7, நீலம் - 17, கோமேதகம் - 13, புஷ்பராகம் - 13, முத்து - 15 பவழம் - 11.

ராசிகளின் ஆதாய - விரய விபரம்

ராசி	ஆதாயம்	விரயம்
மேஷம்-விருச்சிகம்	8	14
ரிஷபம்-துலாம்	2	8
மிதுனம்-கன்னி	5	5
கடகம்	5	11
சிம்மம்	2	14
தனுசு-மீனம்	11	5
மகரம்-கும்பம்	14	14
மொத்தம்	**47**	**71**

பொருளாதார வளர்ச்சியும், செல்வ வளமும் :

இவ்வாண்டு ஆதாயத்தை விட விரயம் கூடுதலாக வந்துள்ளது. புதிய தொழில்கள் தொடங்கவும், வேலை வாய்ப்புகள் அதிகரிக்கவும் அரசு தேவையான சட்டத்திருத்தங்கள் செய்யும்.

கந்தாய பலன்கள்

நட்சத்திரம்	முதல்	இடை	கடை	நட்சத்திரம்	முதல்	இடை	கடை
அசுவினி	0	2	4	சுவாதி	2	1	1
பரணி	3	0	2	விசாகம்	5	2	4
கிருத்திகை	6	1	0	அனுஷம்	0	0	2
ரோகிணி	1	2	3	கேட்டை	3	1	0
மிருகசீர்ஷம்	4	0	1	மூலம்	6	2	3
திருவாதிரை	7	1	4	பூராடம்	1	0	1
புனர்பூசம்	2	2	2	உத்திராடம்	4	1	4
பூசம்	5	0	0	திருவோணம்	7	2	2
ஆயில்யம்	0	1	3	அவிட்டம்	2	0	0
மகம்	3	2	1	சதயம்	5	1	3
பூரம்	6	0	4	பூரட்டாதி	0	2	1
உத்திரம்	1	1	2	உத்திரட்டாதி	3	0	4
ஹஸ்தம்	4	2	0	ரேவதி	6	1	2
சித்திரை	7	0	3				

குறிப்பு : முதற் கந்தாயம் சித்திரை முதல் ஆடி வரை, நடுக்கந்தாயம் ஆவணி முதல் கார்த்திகை வரை, கடைக் கந்தாயம் மார்கழி முதல் வருடம் இறுதிவரை நடைபெறும்.

முதல் கந்தாயம் 0 வானால் வியாதி, இரண்டாவது கந்தாயம் 0 வானால் இன்னல்கள், மூன்றாவது கந்தாயம் 0 வானால் பணப் பற்றாக்குறை உண்டாகும்.

கிரக சஞ்சார பலன்கள்

சித்திரை :

மாத ஆரம்பத்தில் சூரியன் சந்திரன் சுக்ரன் ஆகியோர் மேஷத்தில் சஞ்சரிக்கின்றனர். புதன் மீனத்திலிருந்து மேஷத்திற்குப் பெயர்ச்சியாகிறார். செவ்வாய் ஏப்ரல் 25 முதல் மே 15 வரையில் திருவாதிரையில் சஞ்சரிப்பதாலும் மே மாதம் முதல் தேதி புதன் உதயமாவதாலும் மே 12 முதல் சுக்ரன் ரோகிணியில் உலவிடுவதாலும், புதனுக்கு முன்பாக சுக்ரன் உள்ளதாலும் நல்லமழையை எதிர்ப்பார்க்கலாம். விளைச்சலும் நன்றாக இருக்கும். செம்பு, இரும்பு, தாதுப்பொருட்களின் உற்பத்தி பெருகும். சட்டம், ஒழுங்கு சிறப்பாக இருக்கும். வங்கி, சட்டம் நீதி, கல்வி போன்ற துறைகள் முன்னேற்றமடையும். **ஆளும் வர்க்கத்திற்கு பொதுமக்கள் ஆதரவு பெருகும்.**

ராகு மற்றும் செவ்வாயின் நிலையால் அராஜகம், வன்முறை, கலகம், நாடாளுமன்ற உறுப்பினர்களின் இழப்பும் ஏற்படக்கூடும். பங்குச் சந்தை வீழ்ச்சி அடையும்.

புதனின் ரிஷப ராசிப் பிரவேசத்தால் பொது மக்களுக்கு, பய பீதி ஏற்படும். சுக்ரனின் கிருத்திகா சஞ்சாரமும், யுரேனஸின் நிலையும் நல்ல மழையைப் பெய்விக்கும். கால்நடைகள் பாதிப்புக்குள்ளாகும், புதிய மருந்துகள் புழக்கத்திற்கு வரும்.

மழை :ஏப்.- 16,-18, 21, 24-27, 29

மே : 1-5, 11-13-

வைகாசி :

நாடு நிலையான வளர்ச்சியை நோக்கிச் செல்லும், ஆட்சி ஸ்திரமாக இருக்கும். பொருளாதார வளர்ச்சிமிகும். வங்கி வணிகத்துறைகளில் வெற்றியும், அபிவிருத்தியும் உண்டு. வரிவிதிப்பில் மாற்றம் கொண்டுவரப்படும். செவ்வாயை குரு நோக்குவதால் அறக்கட்டளைகள், மருத்துவச் சாலைகள் பொதுமக்களின் கவனத்திற்கு வரும். சுகாதாரத்துறை மக்கள் சேவையில் முழுமையாக ஈடுபடும். திருவிழாக்கள் பெருகும். கல்வித்துறையில் புதிய மாற்றங்களும் சட்டத்திருத்தங்களும் கொண்டு வரப்படும். கலைத்துறை முன்னேற்றமடையும். பிரபலங்களின் உடல் நலம் பாதிக்கப்படும். பதினொன்றில் உலவிடும் கேதுவால் நாடாளுமன்ற உறுப்பினரின் இழப்பு ஏற்படும்.

மாத ஆரம்பத்தில் புதனும் சுக்ரனும் ரிஷபத்தில் உள்ளதாலும், சுக்ரன் திருவாதிரையில் உலவுவதாலும், காற்றுடன் பெருமழை எதிர்ப்பார்க்கலாம். செவ்வாய் ஜூன் 2-ல் கடகப்பிரவேசம் செய்வதால் இயற்கைப் பாதிப்புகள் உண்டு. இம்மாதத்தில் சூரிய, சந்திரகிரஹணங்கள் ஏற்படுகின்றன. தேர்தலில் ஆளும் கட்சிக்கு வெற்றி கிடைக்கும். சனி மகரத்தில் வக்ரகதியடைகிறார். அரசியல் பிரபலங்களின் இழப்பு ஏற்படும். செவ்வாய், புதன் - சனி - 6/8 ஆக உலவுவதால் நிலநடுக்கம் இயற்கைச் சீற்றம் ஏற்படும்.

மழை : மே 14,15,20,23,24,26-30

ஜூன் : 1-3,7,11,12(நிலநடுக்கம்)

ஆனி :

ஏற்றுமதி, இறக்குமதி தொடர்பான அயல் நாட்டு வாணிபம் நன்கு அபிவிருத்தியடையும். அரசுக்கு வருவாய் பெருகும். பொருளாதார வளர்ச்சிமிகும். சாலை போக்குவரத்து விபத்துக்கள் பெருகும். விவாஹரத்து வழக்குகள் அதிகரிக்கும். ஒற்றர்கள் மற்றும் தீவிரவாதிகளின் ஊடுருவல் கண்டுபிடிக்கப்பட்டு முறியடிக்கப்படும். புதனின் உதயம், வக்ரநிவர்த்தி நிகழ்கிறது. புதன் திருவாதிரையில் உலவிடுகிறார். பெருங்காற்றுடன் பெருமழை எதிர்ப்பார்க்கலாம். செவ்வாய் ஜூன் 2-ல் கடகத்தில் பிரவேசிக்கிறார். சனியும் செவ்வாயும் ஒருவருக்கொருவர் ஏழாவது ராசியில்

(ஸமஸப்தமம்) உள்ளதாலும், செவ்வாயின் பார்வை மகரத்தில் உலவிடும் சனிக்கு உண்டாவதால் (ஜூலை 1-ம் தேதி) நிலநடுக்கம் ஏற்படும். யுரேனஸுக்கு நான்கில் செவ்வாய் உள்ளதால் பங்குச்சந்தை இறக்கம் காணும். 29-06-2021 முதல் 19-07-2021 வரை செவ்வாய் ஸௌம்யமார்க்கத்தில் சஞ்சரிப்பதால் நல்ல மழையுண்டு.

மழை : ஜூன் : 19-24, 27,28

ஜூலை : 1 (நிலநடுக்கம்) 7,8,10,12,13

ஆடி :

சூரியன், சுக்ரன், செவ்வாய் கடகராசியில் சஞ்சரிக்க மாதம் தொடங்குகிறது. வியாபாரம், தொழில் பாதிக்கப்படக்கூடும். விலைவாசி உயரும். ராகுவின் ரிஷபராசி சஞ்சாரத்தால் வன்முறை, அராஜகம், மதக்கலவரம் அதிகரிக்கும். கேதுவின் விருச்சிக சஞ்சாரத்தால் நோய் பரவும். சுற்றுலாத்துறை பாதிக்கப்படும். ஜூலை 20-ல் செவ்வாய் சிம்மத்திற்குச் செல்கிறார். குருவும், செவ்வாயும் ஒருவருக்கொருவர் ஏழாவது ராசியில் உலவிடுகின்றனர். அனாவ்ருஷ்டி, சுக்ரன் ஜூலை 17 முதல் -27 ஜூலை வரை மகத்தில் உலவிடுகிறார். கால்நடைகளுக்கு நோய் தோன்றும். புதன் ஆகஸ்ட் 2 முதல் ஆகஸ்ட் 8 வரை ஆயில்யத்தில் சஞ்சரிப்பார். நல்ல மழையுண்டு. ஆகஸ்ட் 9 வரை சரிவை சந்திக்கும் பங்குச் சந்தை அதன் பின்னர் உயரும். பத்திரிகைத் துறையில் இழப்பு ஏற்படக்கூடும். விளைச்சல் நன்றாக இருக்கும்.

மழை :ஜூலை : 16-20, 21(கடல் சீற்றம்) 22, 24-26, 29, 30, 31.

ஆகஸ்ட் : 1-3, 5, 7-9, 11-12, 14

ஆவணி :

இம்மாதம் ஆரம்பத்தில் சூரியன், புதன், செவ்வாய் ஆகியோர் லக்ன கேந்திரம், சந்திர கேந்திரத்தில் உலவுவதுடன் அக்கோள்களை குரு நோக்குவதாலும் தேவைக்கேற்ற நல்ல மழைப் பெய்யும். விளைச்சல் அமோகமாக இருக்கும். செப்டம்பர் 14-ல் குரு மகரராசிக்கு வக்ரமாக பிரவேசிப்பதாலும், சனி ஏற்கனவே மகரத்தில் வக்ரியாகச் சஞ்சரித்து வருவதாலும் பயிர்கள், பழத்தோட்டங்கள் போன்றவற்றிற்கு அனுகூலமற்ற பருவநிலை உண்டாகிறது.

சுக்ரன் செப்டம்பர் 2 முதல் 10 வரை ஹஸ்தா நட்சத்திரத்தில் உலவிடும் போது பெருமழைப் பெய்யும்.

விருச்சிகத்தில் கேது சஞ்சரிக்க இம்மாதம் பிறப்பதால் பெண்களுக்கெதிரான குற்றங்கள் அதிகரிக்கும். இம்மாதம் புதன் உதயமும் செவ்வாய் அஸ்தமனமும் நிகழ்கிறது. பெருங்காற்றுடன் பெருமழை பெய்யும்.

மழை : ஆகஸ்ட் : 16, 17, 19, 20-22, 26, 28.

செப்டம்பர் : 1, 3, 6, 10, 11 (பேரலைகள்) 13, 14.

புரட்டாசி :

இம்மாதத் தொடக்கத்தில் சூரியன், புதன், செவ்வாய் கன்னி ராசியில் சஞ்சரிக்க அவர்களை குரு நோக்குகிறார். மழைக் கோளான சுக்ரன் துலாத்தில் வலிமையாக அமர, அவரை பாக்கியாதிபதி சனி பார்க்கிறார். அரசுக்கு பொது மக்களின் ஆதரவு பெருமளவில் பெருகும். விவசாயம் செழிக்கும். இரும்பு, எஃகு, தாதுப்பொருட்களின் உற்பத்தி அதிகரிக்கும். செவ்வாயின் சஞ்சாரத்தாலும் கேதுவின் நிலையாலும் தீவிபத்துக்கள், கலவரம், வன்முறை, சுங்கத் துறையிலும், துறைமுகத்திலும் வேலை நிறுத்தம் பொருட் சேதம் உண்டாகும். சட்டம், நீதி, மதம் சார்ந்த துறைகளில் உள்ள பிரபலங்களின் இழப்பு ஏற்படலாம். ஊழல்வாதிகளும் பிரிவினை வாதிகளும் சிறைதண்டனை பெறுவர். அக்டோபர்

4 ஆம் தேதி முதல் 16 ஆம் தேதி வரை உள்ள கிரகநிலைகளால் நிலநடுக்கம் ஏற்படும். செப்டம்பர் 22-க்கு மேல் பங்குச்சந்தை உயரும்.

ராகு ரோகிணி நட்சத்திர சஞ்சாரத்தால் அண்டை நாட்டு எல்லையில் போர் பதட்டம் அதிகரிக்கும். சில மாநில ஆளும் கட்சிகள் வலுவிழக்கும்.

மழை :செப்டம்பர். 17, 20, 21, 23-27

அக்டோபர் : 1-4, 5, 6-10, 14-16

ஐப்பசி :

தியான மையங்கள், யோகா போன்ற உடற் பயிற்சி கூடங்கள், வழிபாடுகள், திருவிழாக்கள் அதிகரிக்கும். வங்கித்துறையில் இழப்பு ஏற்படும். ராகுவின் சஞ்சாரத்தால் அரசியல் கலவரம், வன்முறை, குண்டு வெடிப்பு, போராட்டம் வலுக்கும். கலைத்துறை பாதிக்கப்படும். திடீர் விபத்துக்கள், ராணுவம் மற்றும் மருத்துவத் துறைகளில் இழப்பு ஏற்படும். அரசு பெரிய அதிகாரிகளின் ஊழல் வெளிப்படும். புயல், மழை, வெள்ளத்தால் விளைச்சல் பாதிக்கப்படும். அக்டோபர் 22-ல் செவ்வாய் துலா ராசிக்குப் பெயர்ச்சியாகிறார். சனியின் பார்வையைப் பெறுகிறார். செவ்வாயின் இத்துலாராசி சஞ்சாரத்தின் போது பெரும் உயிர்ச் சேதம் ஏற்படும்.

மழை :அக்டோபர் : 17-19, 20(பெருமழை) 21, 22, 25, 28, 30

நவம்பர் : 1-5, 8, 10-12

கார்த்திகை :

குரு கும்பராசிக்குப் பெயர்ச்சியாகிறார். பொருளாதார நிலையில் ஏற்றத்தாழ்வு ஏற்படக்கூடும். வங்கி இழப்பு ஏற்படும். நான்காமிடத்தில் (ரிஷபத்தில்) ராகு இருப்பது நல்லதல்ல. விளைச்சல் பாதிக்கும். நிலச்சரிவு, சுரங்கவிபத்துக்கள் ஏற்படக்கூடும். திடீர் கிளர்ச்சி, வன்முறைகள் தோன்றும். ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வணிகம், வியாபாரம் பாதிப்புக்குள்ளாகும். கப்பல், ஓடம், படகு விபத்துக்குள்ளாகும். சூரியனும் கேதுவும் இணைவதால் அரசு அதிகாரிகள், அரசியல் பிரபலங்களின் இழப்பு ஏற்படும். பெண்களுக்காதரவாக சட்டத்திருத்தம் கொண்டுவரப்படும். அறக்கட்டளைகள், திருவிழாக்கள் பெருகும். மருத்துவச் சாலைகளில் மாற்றங்கள் உருவாகும். நோய் அதிகரிக்கும். நில நடுக்கம், போர்பதட்டம் ஏற்படும். புதனின் கேட்டை நட்சத்திர சஞ்சாரத்தால் குதிரைகளுக்கு நோய்தோன்றும். கடல் சீற்றம் ஏற்படும். பொதுச் சொத்துக்களுக்குச் சேதாரம் ஏற்படும்.

மழை :நவம்பர். 17, 19-23, 25, 26, 29

டிசம்பர் : 1, 2, 4, 7, 8, 9, 11, 14

மார்கழி :

இலையுதிர்க்கால பயிர்கள் நன்கு விளையும். பனிப் பொழிவு அதிகமாக இருக்கும். வடநாட்டில் குளிர் உச்சகட்டத்தில் இருக்கும். புதிய கல்வி நிறுவனங்கள் தோன்றும். கலைஞர்கள் பாராட்டப்படுவர். புதிய தொழில்கள் தோன்றும். அந்நியமுதலீடு அதிகரிக்கும். வேலை வாய்ப்பு பெருகும். இரும்பு, எஃகு, தோல், கம்பளி சம்பந்தமான தொழில் வளர்ச்சியடையும். எண்ணெய், எண்ணெய் வித்துக்கள் பருத்தி விதை விலை கூடும். இரண்டில் செவ்வாயும் கேதுவும் உள்ளதால் கொள்ளை, திருடு, வழிப்பறி அதிகரிக்கும். புத்தகம், பத்திரிகை, ஊடகம், தொலைபேசி ஆகிய துறைகள் நல்ல முன்னேற்றம் காணும். பெண்ணொருவர் பெரும் விருதும் பாராட்டும் பெறுவார். அரசுக்கு ஆதரவு பெருகும். செவ்வாய் கேட்டை நட்சத்திரத்தில் சஞ்சரிப்பதால் நோய் பரவும். வெள்ளி விலை குறையும். தற்கொலைகள் பெருகும்.

மழை :டிசம்பர் : 19, 24, 26, 29

ஜனவரி : 3, 4, 5, 6, 9, 12.

மேஷ :

சந்திரனும் ராகுவும் லக்னத்தில் அமர இம்மாதம் தொடங்குவதால் பெண்கள், குழந்தைகள் விஷயத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். இன - மதக்கலவரம் வலுக்கும். பெரும் தீ விபத்து போர் பதட்டம், எல்லையில் வாழும் மக்களுக்கு மன அமைதியின்மை, அடிக்கடி குண்டு வெடிப்பு, துப்பாக்கிச் சண்டை ஏற்படும். குற்றங்கள் அதிகரிக்கும். தீவிரவாதிகளின் ஊடுருவல் உண்டு, எனினும் நமது ராணுவம் உஷார் நிலையிலிருந்து அவற்றை முறியடிக்கும். சுக்ரன் எட்டில் உலவிடுவதால் கலையுலகத்தைச் சேர்ந்தவரின் இழப்பு ஏற்படலாம். தொழில் வீட்டில் குருவின் சஞ்சாரம் தொடர்வதால் புதிய கல்வி நிறுவனங்கள் தோன்றும். வேலைவாய்ப்புகள் கூடும். மதவழிபாடுகள், கோயில் திருவிழாக்கள் அதிகரிக்கும். வர்த்தக ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். உச்சநீதிமன்றம் நல்ல தீர்ப்பை வழங்கி பொது மக்களின் பாராட்டுக்களைப் பெறும். செவ்வாய் உத்திராடத்தில் உள்ளபோது நல்ல மழையுண்டு.

மழை :ஜனவரி : 16, 17, 18, 23, 29, 30

பிப்ரவரி : 1, 2, 4, 8, 11.

ரிஷி :

செவ்வாய் லக்னத்தில் அமர இம்மாதம் பிறப்பதால் தீ மற்றும் சாலை விபத்துக்கள் அதிகரிக்கும். அராஜகம், வன்முறை, கலவரம் போன்றவற்றால் பொதுச் சொத்துக்களுக்குச் சேதாரம் உண்டாகும். தொழிலாளர்களுடன் சமாதானம் ஏற்படும். வேலை நிறுத்தம் வாபஸ் பெறப்படும். வியாபாரம், தொழில் நன்கு முன்னேற்றமடையும். அரசுக்கு வருமானம் அதிகரிக்கும். அரசு அதிகாரிகள் பொறுப்புடன் செயல்பட சட்ட திருத்தங்கள் கொண்டுவரப்படலாம். எழுத்து, பத்திரிகைத் துறையைச் சேர்ந்தவர் பாராட்டப்படுவார். கப்பல் போக்குவரத்தில் தகராறுகள் உருவாகும். நோய் பரவும். பருத்தி மற்றும் கனரக இயந்திர தொழிற்சாலைகள் பாதிப்புக்குள்ளாகும். பெண்ணொருவர் பாராட்டப்படுவார். குரு சூரியனுக்கு முன்பு உலவிடுவதால் கடலோரப் பகுதிகளில் பெருமழை பெய்யும். வேகமான காற்றும் வீசக்கூடும். பருவ நிலையில் மாற்றம் ஏற்படும். மலைச் சார்ந்த பிரதேசங்களில் குளிர் அதிகரிக்கும். செவ்வாய் சனி மகரத்தில் உள்ளபோது இடி, மின்னல், வெள்ளப் பெருக்கு, இயற்கைச் சீற்றம் உண்டாகும். செவ்வாய் பதங்கமார்க்கத்தில் உலவிடுவதால் நல்லமழையுண்டு.

மழை : பிப்ரவரி : 16, 17, 22, 26, 27, 28

மார்ச் : 1, 3, 6.

மிதுனம் :

லக்னாதிபதி செவ்வாய் உச்சஸ்தானத்தில் உலவிட இம்மாதம் ஆரம்பமாகிறது. சட்டம் ஒழுங்கு பிரச்சனைகளை உடனுக்குடன் அடக்கி அமைதி ஏற்படுத்தப்படும். ஊழல் அரசியல்வாதிகள் மற்றும் வெளிநாட்டில் பணத்தைப் பதுக்கி வைத்திருப்பவர்களுக்கு மிகுந்த பயபீதி உண்டாகும். சாலை விபத்துக்கள் அதிகரிக்கும். பத்திரிகைத் துறையைச் சார்ந்த பெண்ணொருவரின் இழப்பு ஏற்படக் கூடும். தொழில் வீட்டை குரு நோக்குகிறார். புதிய தொழில்கள் தோன்றும். கல்வி நிறுவனங்கள் நல்ல முன்னேற்றமடையும். மத வழிபாடுகள் அதிகரிக்கும். வியாபாரிகள் பெரிய அளவில் லாபம் ஈட்டுவர். கலையுலகம், திரையரங்குகள் முன்னேற்றமடையும். புதிய கல்விநிறுவனங்கள் தோன்றும். நவீன-விஞ்ஞான கண்டுபிடிப்புகள் வெளிச்சத்திற்கு வரும். ராகுவின் நிலையால் விவாகரத்து வழக்குகள் பெருகும். மார்ச் மாதம் செவ்வாய் சனி ஒன்று சேர்வதால் இடி மின்னல், வெள்ளப் பெருக்கு ஏற்படும். மார்ச் 22-ல் குரு புதனிடையே கிரக யுத்தம் ஏற்படுவதால் நில நடுக்கம் தோன்றும்.

மழை :மார்ச் : 17, 18, 21 (பெருமழை, நிலநடுக்கம்) 22,(நில நடுக்கம்) 28,30,31

ஏப்ரல் : 4 (இயற்கைச் சீற்றம்) 6 (இடி மின்னல் வெள்ளப்பெருக்கு), 7, 8.

ஸ்ரீ பிலவ வருஷ முக்கிய பண்டிகைகள்

ஏப்ரல்–2021

14. தமிழ் வருடப்பிறப்பு,
18. ஸ்ரீராமானுஜர் ஜயந்தி
21. ஸ்ரீராமநவமி

மே

14. அக்ஷயதிரிதியை
17. ஸ்ரீ சங்கர ஜயந்தி

ஜூன்

18 ஆனித் திருமஞ்ஞனம்

ஜூலை

16. தக்ஷினாயன புண்யகாலம்
24. குருபூர்ணிமா வ்யாஸ பூஜை.

ஆகஸ்ட்

2. ஆடி கிருத்திகை
3. ஆடிப்பெருக்கு
11. திருவாடிப்பூரம்.
12. நாக சதுர்த்தி
13. கருடபஞ்சமி
15. பகவான் ஸ்ரீ அரவிந்தர் ஜயந்தி
20. வரலக்ஷ்மிவிரதம்
21. ருக் உபாகர்மா
22. யஜீர் உபாகர்மா
23. காயத்ரி ஜபம்
30. கோகுலாஷ்டமி வைகானஸ ஸ்ரீ ஜயந்தி, முனித்ரய ஸ்ரீ ஜயந்தி
31. பாஞ்சராத்ர ஸ்ரீ ஜயந்தி

செப்டம்பர்

10. ஸ்ரீ விநாயக சதுர்த்தி
11. ரிஷிபஞ்சமி
21. மஹாளய பக்ஷம் ஆரம்பம்
24. மஹா பரணி

28. மஹா வ்யதீபாதம்
29. மத்யாஷ்டமி

அக்டோபர்

6. மஹாளய அமாவாசை.
7. நவராத்ரி ஆரம்பம்
12. சரஸ்வதி ஆவாஹனம்
14. மஹாநவமி ஆயுத பூஜை
15. விஜய தசமி

நவம்பர்

3. நாக சதுர்தசி ஸ்நானம்
4. தீபாவளி கேதார கௌரி விரதம்
18. திருவண்ணாமலை கார்த்திகை தீபம் பாஞ்சராத்ர தீபம் வைகானஸ தீபம்.
20. பீமரதி புஷ்கரம் ஆரம்பம்

டிசம்பர்

20. ஆருத்ரா தரிசனம்

ஜனவரி 2022

2. ஹனுமத் ஜயந்தி
12. வைகுண்ட ஏகாதசி
18. தைப் பூசம்

பிப்ரவரி

10. தை கிருத்திகை
21. ஸ்ரீஅரவிந்தர் அன்னை ஜயந்தி

மார்ச்

14. காரடையார் நோன்பு

ஏப்ரல்

2. யுகாதி
10. ஸ்ரீராம நவமி

ஸ்ரீ பிலவ வருஷம் விவாஹ சுபமுஹூர்த்தங்கள் (2021-22)

தேதி ஆங்	தேதி தமிழ்	கிழமை	பக்ஷம்	திதி	நட்சத்திரம்	யோகம்	லக்னம்	நேரம் மணி முதல்	நேரம் மணி வரை	புஷ்கராம்ஸம் ம	புஷ்கராம்ஸம் நி
ஏப்/சித்திரை											
22	9	வியா	வ	தசமி	மகம்	அமிர்த	மிதுன	9	10½	9	00
25	12	ஞாயிறு	வ	திரயோதசி	ஹஸ்தம்	சித்த	ரிஷபம்	8	9	8	09
29	16	வியாழன்	தே	திரி	அனு	சித்த	ரிஷபம்	7½	8½	7	43
மே/சித்திரை											
9	26	ஞாயிறு	தே	திரி	ரேவதி	அமிர்த	ரிஷப	9	7½	7	02
9	26	ஞாயிறு	தே	திரி	ரேவதி	அமிர்த	மிதுனம்	9	10½	10	35
மே/வைகாசி											
17	3	திங்கள்	வ	பஞ்சமி	புனர்	அமிர்த	ரிஷபம்	6	7½	6	34
17	3	திங்கள்	வ	பஞ்சமி	புனர்	அமிர்த	மிதுனம்	9	10½	9	33
28	14	வெள்ளி	தே	துவிதி	மூல	அமிர்த	ரிஷபம்	7	8½	7	38
ஜூன்/வைகாசி											
4	21	வெள்ளி	தே	தசமி	உத்ரட்டாதி	சித்த	ரிஷபம்	5½	6½	6	21
6	23	ஞாயிறு	தே	துவாதசி	அஸ்வினி	சித்த	மிதுனம்	7½	9	8	06
13	30	ஞாயிறு	வ	திருதியை	புனர்	சித்த	மிதுனம்	7	8	7	35
14	32	திங்கள்	வ	சதுர்த்தி	பூசம்	சித்த	மிதுனம்	7	8	7	32
14	32	திங்கள்	வ	சதுர்த்தி	பூசம்	சித்த	கடகம்	9	10	-	-
ஜூன்/ஆனி											
16	2	புதன்	வ	சஷ்டி	மகம்	சித்த	மிதுனம்	6	7½	7	23
21	7	திங்கள்	வ	ஏகாதசி	சுவாதி	அமிர்த	-	6	7½	7	03
23	9	புதன்	வ	திரயோதசி	அனுஷ	சித்த	மிதுனம்	6	7	7	35
27	13										
28	14	திங்கள்	தே	சதுர்த்தி	அவிட்டம்	சித்த	மிதுனம்	6	7	6	35
ஜூலை/ஆனி											
1	17	வியாழன்	தே	சப்தமி	உத்ரட்டாதி	சித்த	சிம்மம்	9	10½	10	25
7	23	புதன்	தே	திரயோதசி	ரோகிணி	சித்த	மிதுனம்	4½	6	5	10
7	23	புதன்	தே	திரயோதசி	ரோகிணி	சித்த	சிம்மம்	9	10½	10	21
11	27	ஞாயிறு	வ	துவிதி	பூசம்	சித்த	சிம்மம்	8½	10	9	46
16	32	வெள்ளி	வ	சஷ்டி	ஹஸ்த	அமிர்த	மிதுனம்	4	5½	5	05
ஆகஸ்ட்/ஆவ											
20	4	வெள்ளி	வ	திரயோதசி	உத்ராடம்	சித்த	கன்னி	8	9	8	46
26	10	வியாழன்	தே	சதுர்த்தி	ரேவதி	சித்த	கன்னி	7½	8½	8	18
27	11	வெள்ளி	தே	பஞ்சமி	அஸ்வினி	அமிர்த	கன்னி	7½	8½	8	14
செப்டம்பர்											
1	16	புதன்	தே	தசமி	மிருகசீர்	சித்த	சிம்மம்	5	6	5	56
1	16	புதன்	தே	தசமி	மிருகசீர்	சித்த	துலாம்	9½	11	10	41
8	23	புதன்	வ	துவிதி	உத்ரட்டாதி	அமிர்த	துலாம்	9	10½	10	14
9	24	வியாழன்	வ	திரிதியை	ஹஸ்த	சித்த	துலாம்	9	10½	10	10
9	24	வியாழன்	வ	திரிதியை	ஹஸ்த	சித்த	சிம்மம்	9½	6	5	56
அக்/ஐப்பசி											
24	7	ஞாயிறு	தே	சதுர்த்தி	ரோகிணி	சித்த	விருச்சி	8	8½	7	27
27	10	புதன்	தே	சஷ்டி	புனர்பூசம்	சித்த	துலாம்	6	7½	7	05
28	11	வியாழன்	தே	சப்தமி	புனர்பூசம்	அமிர்த	கன்னி	4	5½	4	11
10	25	வெள்ளி	வ	சதுர்த்தி	சித்திரை	சித்த	கன்னி	7	8½	7	50
16	31	வியாழன்	வ	தசமி	உத்ராடம்	சித்த	கன்னி	7	8½	7	27

தேதி ஆங்	தேதி தமிழ்	கிழமை	பக்ஷம்	திதி	நட்சத்திரம்	யோகம்	லக்னம்	நேரம் மணி முதல்	நேரம் மணி வரை	புஷ்கராம்ஸம் ம	புஷ்கராம்ஸம் நி
நவ / ஐப்பசி											
8	22	திங்கள்	வ	சதுர்த்தி	மூல	சித்த	துலாம்	6	7	6	20
10	24	புதன்	வ	சப்தமி	உத்ராடம்	சித்த	தனுசு	9	10½	10	13
15	29	திங்கள்	வ	ஏகாதசி	உத்ரட்டாதி	சித்த	தனுசு	9	10½	10	01
கார்த்திகை											
21	5	ஞாயிறு	தே	துவி	மிருகசீர்ஷம்	சித்த	தனுசு	8½	9½	9	30
25	9	வியாழன்	தே	சஷ்டி	பூசம்	சித்த	தனுசு	8½	9½	9	15
29	11	திங்கள்	தே	தசமி	உத்ரம்	சித்த	விருச்சி	4½	6	5	47
டிசம்பர்											
1	15	புதன்	தே	துவாதசி	சித்தி	சித்த	விருச்சி	5½	7	5	39
2	16	ஞாயிறு	தே	திரயோதசி	சுவாதி	அமிர்த	தனுசு	8½	9	5	46
2	16	ஞாயிறு	தே	திரயோதசி	சுவாதி	அமிர்த	மகரம்	9	10	9	53
5	19	ஞாயிறு	வ	துவிதி	மூல	அமிர்	மகரம்	9	10	10	05
8	22	புதன்	வ	பஞ்சமி	தி.ஒ.	சித்த	மகரம்	9	10	9	53
9	23	வியா	வ	சஷ்டி	அவிட்	சித்த	மகரம்	9	10	9	50
ஜனவரி / தை 2022											
23	10	ஞாயிறு	தே	பஞ்சமி	உத்ரட்டாதி	அமிர்த	கும்பம்	8½	9½	9	15
27	14	வியாழன்	தே	தசமி	அனுஷ	சித்த	மீனம்	9½	10½	11	03
பிப்ரவரி											
6	24	ஞாயிறு	வ	சஷ்டி	ரேவதி	கும்பம்	அமிர்த	7½	8½	8	19
6	24	ஞாயிறு	வ	சஷ்டி	ரேவதி	மீனம்	அமிர்த	9	10	9	59
7	25	திங்கள்	வ	சப்தமி	அஸ்வினி	சித்த	மீனம்	9	10	9	00
11	29	வெள்ளி	வ	தசமி	மிருக	சித்த	கும்பம்	7	8½	8	04
பிப் / மாசி											
14	2	திங்கள்	வ	திரயோதசி	புனர்	அமிர்த	மீனம்	4½	6	5	03
20	9	ஞாயிறு	தே	சதுர்த்தி	ஹஸ்த	சித்த	மீனம்	8	9½	9	28
மார்ச் / மாசி											
4	20	வெள்ளி	வ	துவிதி	உத்ரட்டாதி	சித்த	கும்பம்	6	7	6	38
4	20	வெள்ளி	வ	துவிதி	உத்ரட்டாதி	சித்த	மீனம்	7	8	7	22
6	21	ஞாயிறு	வ	சதுர்த்தி	அஸ்வினி	சித்த	மீனம்	7½	8½	8	14
9	24	புதன்	வ	சப்தமி	ரோகிணி	சித்த	மேஷம்	9	10	9	34
13	29	ஞாயிறு	வ	தசமி	புனர்பூஷம்	சித்த	மேஷம்	9	10	9	18
14	30	திங்கள்	வ	ஏகாதசி	பூசம்	சித்த	கும்பம்	5	6½	6	02
14	30	திங்கள்	வ	ஏகாதசி	பூசம்	சித்த	மீனம்	9	10	9	14
மார் / பங்குனி											
16	2	புதன்	வ	திரயோதசி	மகம்	சித்த	மீனம்	6½	7½	7	11
21	7	திங்கள்	தே	திரிதியை	சுவாதி	சித்த	மீனம்	6	7½	7	02
21	7	திங்கள்	தே	திரிதியை	சுவாதி	சித்த	ரிஷபம்	9	10½	10	18
23	9	புதன்	தே	சஷ்டி	அனுஷ	சித்த	மீனம்	6	7	6	54
23	9	புதன்	தே	சஷ்டி	அனுஷ	சித்த	ரிஷபம்	9	10½	10	08
27	13	ஞாயிறு	தே	தசமி	உத்ராடம்	அமிர்த	மேஷம்	7½	8½	8	23
27	13	ஞாயிறு	தே	தசமி	உத்ராடம்	அமிர்த	ரிஷபம்	9	10	9	54
28	14	திங்கள்	தே	ஏகாதசி	தி.ஒ.	சித்த	மீனம்	6	7	6	34
30	16	புதன்	தே	திரயோதசி	சதயம்	சித்த	மீனம்	4½	6	5	39
ஏப் / பங்குனி											
3	20	ஞாயிறு	வ	துவிதி	அஸ்வினி	சித்த	மேஷம்	7½	8½	7	55
3	20	ஞாயிறு	வ	துவிதி	அஸ்வினி	சித்த	ரிஷபம்	9	10	9	24
6	23	புதன்	வ	பஞ்சமி	ரோகிணி	சித்த	மீனம்	4½	5½	5	12
6	23	புதன்	வ	பஞ்சமி	ரோகிணி	சித்த	ரிஷபம்	9	10	9	32
13	30	புதன்	வ	ஏகாதசி	மகம்	சித்த	மேஷம்	6	7	7	18
13	30	புதன்	வ	ஏகாதசி	மகம்	சித்த	ரிஷபம்	9	10	9	32

ஸ்ரீ சுபக்ருது வருஷம் சித்திரை, வைகாசி, ஆனி கிரக சஞ்சாரம்

(2022-23)



சித்திரை

குரு	சூரி புத ராகு	லை	
சுக் செவ்	**ஏப்ரல்** 24- புதன்-ரிஷபம் 27-சுக்ரன்-மீனம் **மே** 2 - புதன் - மிதுனம்		
சனி			சந்திரன்
		கேது	

வைகாசி

சுக் குரு செவ்	ராகு லை	சூரி புத	
	மே 17 - சுக்ரன் - ரிஷபம் **ஜூன்** 27 - செவ்வாய் - மேஷம் **ஜூலை** 7 - புதன் - மிதுனம்		
			சந்திரன்
		கேது	

ஆனி

		சூரியன் ராகு (புதன்)	சுக்ரன்
குரு	**ஜூன்** 2 - செவ்வா - கடகம் 15 - சூரியன் - மிதுனம் 22 - சுக்ரன் - கடகம் 23 - புதன் - வ.நி. 20 - குரு - வ.ஆ. **ஜூலை** 7 - புதன் - மிதுனம்		செவ்வாய்
(சனி)			
	கேது		

ஸ்ரீ சுபக்ருது வருஷ விவாஹ சுபமுஹூர்த்த நாட்கள் (2022-23)

தேதி ஆங்	தமிழ்	கிழமை	பக்ஷம்	திதி	நட்சத்திரம்	யோகம்	லக்னம்	நேரம் மணி முதல்	வரை	புஷ்கராம்ஸம் ம	நி	
ஏப்/ சித்திரை												
15	2	வெள்ளி	வ	சதுர்தசி	உத்ரட்டாதி	சித்த	மேஷ	6	7½	7	10	
							ரிஷபம்	8	9	8	37	
21	8	வியாழன்	தே	பஞ்சமி	மூல	சித்த	ரிஷபம்	7½	9	8	14	
25	12	திங்கள்	தே	தசமி	அவிட்	சித்த	மிதுனம்	9½	11	11	00	
29	16	வெள்ளி	தே	சதுர்தசி	ரேவதி	சித்த	ரிஷபம்	7	8	7	42	
							மேஷம்	5	6	5	56	
மே												
15	1	ஞாயிறு	வ	சதுர்தசி	சுவாதி	சித்த	மிதுனம்	8½	10	10	01	
20	6	வெள்ளி	தே	பஞ்சமி	உத்ராடம்	சித்த	ரிஷபம்	6	7½	6	22	
25	11	புதன்	தே	தசமி	உத்ரட்டாதி	சித்த	கடகம்	9	10½	9	57	சனி 8-ல்
26	12	வியாழன்	தே	ஏகாதசி	ரேவதி	சித்த	மிது /கட	9	10	9	47	
27	13	வெள்ளி	தே	துவாதசி	அஸ்வி	அமிர்த	ரிஷபம்	5½	7	5	54	
							மிதுனம்	7½	9	8	46	
ஜூன்												
1	18	புதன்	வ	துவிதியை	மிருகசிர	சித்த	கடகம்	9	10	9	24	
3	20	வெள்ளி	வ	சதுர்தசி	புனர்	சித்த	மிதுனம்	7	8½	8	19	
9	26	வியாழன்	வ	தசமி	ஹஸ்த	சித்த	கடகம்	8½	9½	8	52	
10	27	வெள்ளி	வ	தசமி	சித்திரை	சித்த	மிதுனம்	7	8	7	51	
13	30	திங்கள்	வ	சதுர்தசி	அனுஷம்	சித்த	ரிஷபம்	4½	5½	4	47	
							கடகம்	8½	10	8	37	
ஜூன்/ஆனி												
17	3	வெள்ளி	தே	திரிதியை	உத்ராடம்	சித்த	ரிஷபம்	4	5½	4	32	
19	5	ஞாயிறு	தே	சஷ்டி	சதய	சித்த	கடகம்	7½	9	8	13	
23	9	வியாழன்	தே	தசமி	அஸ்வினி	அமிர்த	கடகம்	7½	9	7	57	
24	10	வெள்ளி	தே	ஏகாதசி	அஸ்வி	அமிர்த	ரிஷபம்	4	5½	4	08	
27	13	திங்கள்	தே	சதுர்தசி	ரோகிணி	அமிர்த	மிதுனம்	6	7	6	44	
ஜூலை/ஆனி												
11	27	திங்கள்	வ	துவிதியை	அனுஷம்	சித்த	மிதுனம்	4½	6	5	49	

சுபம்.

பொதுவான சுப நாட்கள்

பும்ஸவனம், சீமந்தம் (வளைகாப்பு), குழந்தையை தொட்டிலில் விட, காதுகுத்த முடியிறக்க, உபநயணம், வித்யாரம்பம், அன்னப்ராசனம், வாகனம் வாங்க, பயில கால்நடைகள் வாங்க, நிலம் மனை வீடு வாங்க, (பத்திரப் பதிவு செய்ய), கும்பாபிஷேகம், பிரயாணம் மேற்கொள்ள, கிருஹ ஆரம்பம், கிருஹப் பிரவேசம், நிச்சயதார்த்தம், தொழில், வியாபாரம் துவங்க, நிஷேகம் முதலியன.

குறிப்பு : ''மாஸ ப்ரோக்தேஷு கார்யேஷு மூடத்வம் குருஸுக்ரயோ: அதிமாஸாதி தோஷாஸ்ச ந ஸ்யு: காலவிதேர் பலாத்'' மாஸப்ரோக்தமான கார்யங்களில் (அதாவது இந்த மாதத்தில் இந்த கர்மா செய்ய வேண்டும் என்று சாஸ்திரத்தில் விதிக்கப்பட்ட கர்மாக்களில்) குரு, சுக்ர மௌட்யம், அதிக மாஸம், முதலான தோஷங்கள் கிடையாது.

-காலவிதானம்

ஏப்ரல் : 22 (கா.4½-5½, மா.4-5, 6-7), 25 (கா.7½-8½,) 27 (கா.9½-10½), 25 (கா.9-10), 29 (கா.7½-8½, 9-10, மா.6-7).

மே : 3 (மா.6-7, இ.9-10), 7 (கா.6½-7½, கா.4½-5½) 9 (கா.9-10), 10 (மா.5-6), 14 (கா.6-7, 8-9, மா. 5½-6½, இ.8-9), 16 (மா.6½-7½, இ.9-10), 17 (கா.4½-5½, 6-7, 9-10), மா. 6-7, இ. 8-9), 24 (மா.6-7, இ.9-10), 28 (கா.5-6, 7-8), (இ.9-10).

ஜூன் : 4 (கா.4½-5½, 6½-7½, 6 (கா.7½-8½, 9-10, மா.6-7, இ.9-10), 13 (கா.7½-8½), 14 (மா.4½-5½), 21 (கா.5½-6½, 6-7), 23 (கா.5½-6½), 27 (கா.7½-8½, 8-9, 9½-10½, மா.6-7), 28 (மா.4-5).

ஜூலை : 1 (கா.5½-6½, 6½-7½), 7 (கா.4½-5½, 9-10, மா.3½-4½, இ.10-11), 11 (கா.8½-9½, இ.7-8, இ.9-10), 13 (கா.7½-8½), 14 (மா.4½-5½), 16 (கா.4½-5½, இ.8½-9½), 22 (கா.4½-5½), 25 (வள.7½-8½), 28 (மா.4-5, இ.9½-10½), 29 (கா.4½-5½, 7½-8½, 9-10, மா.5-6, 6-7, இ.9½-10½), 30 (கா.4½-5½, 8½-9½, மா.5-6, இ.8-9).

லக்னத்திலிருந்தும், சுக்ரனிலிருந்தும், சந்திரனிலிருந்தும் செவ்வாய் 2,4,7,8 மற்றும் 12 ஆகிய இராசிகளில் அமர்ந்தால் தோஷமாகும். செவ்வாய் மேஷம் - விருச்சிகம் - மகரம் - கடகம் ஆகிய இராசிகளில் இருந்தாலும், குருவோடு சேர்ந்தாலும் அல்லது குருவினால் பார்க்கப்பட்டாலும், செவ்வாய் தோஷமில்லை.

ஷஷ்டாஷ்டக தோஷம் :

பெண்ணின் இராசி ஆணின் இராசிக்கு ஆறாவது இருந்தாலும், ஆணின் இராசி பெண்ணின் இராசிக்கு எட்டாவதாக வந்தாலும் - ஒற்றுமைக் குறைவுபடும்.

கிணறு வெட்டும் திசையின் பலன் :

வீட்டிற்கு கிழக்கு - விபத்து, தென்கிழக்கு - புத்திரநாசம், தெற்கு-மனைவிக்குப் பீடை கெண்டம், தென்மேற்கு-எஜமானனுக்கு ஆபத்து, மேற்கு-உடல் ஆரோக்கியம், வடமேற்கு -ஆயுத பயம், வடக்கு-செல்வம் சேரும், வடகிழக்கு-சுபீட்சமான வாழ்வு.

வாரசூலை : பிரயாணம் செய்யத்தகாதத் திக்குகள் :

"திங்க ளொடு சனியிரண்டுங் கிழக்கே யாகா
தெற்குமுகம் போக வென்றால் வியாழ னாகா
தங்குகின்ற விடமிருந்து மேற்கே போக
தம்பியடா வெள்ளி ரவி ஆகாதாகா
அங்கெனவே வடக்குமுகம் பிரயாணந்தான்
அப்பனே செவ்வாயும் புதனுமாகா
இங்கிவைகள் சிவனார்கைச் சூலமாகும்
ஏற்க நாள் போக வென்றால் சூக்ஷங்கேளே."

அந்தந்த வாரத்தில் இதில் குறிப்பிட்ட திசைகளில் பிரயாணம் செய்யக்கூடாது.



நட்சத்திரம்	மிருகம்	கணம்	மரம்	ரஜ்ஜு	வேதை	நாடி	பாதசார நாம எழுத்துக்கள்							
							1	2	3	4				
அசுவினி	ஆ.குதிரை	தேவ	எட்டி	பாதம்	கேட்டை	ஆதி	சு	சே	சோ	ல	CHU	CHE	CHO	LA
பரணி	ஆ.யானை	மனுஷ	நெல்லி	துடை	அனுஷம்	மத்ய	லி	லு	லே	லோ	LI	LU	LEY	LO
கிருத்திகை	பெ.ஆடு	இராக்ஷ	அத்தி	வயிறு	விசாகம்	அந்திய	அ	இ	உ	எ	AO	EE	U	A
ரோகிணி	ஆ.நாகம்	மனுஷ	நாவல்	கண்ட	சுவாதி	அந்திய	ஒ	வ	வி	வு	O	VA	VEE	VOO
மிருகசீர்ஷம்	பெ.சாரை	தேவ	சுருங்காலி	சிரசு	சித்திரை	மத்ய	வே	வோ	கா	கே	VAY	VO	KAA	KE
திருவாதிரை	ஆ.நாய்	மனு	செங்காலி	கண்ட	திருவோணம்	ஆதி	கு	கா	ங	ச	KOO	GHA	JNA	CHA
புனர்பூசம்	பெ.பூனை	தேவ	மூங்கில்	வயிறு	உத்திராடம்	ஆதி	கே	கோ	ஹ	ஹி	KAY	KO	HAA	HEE
பூசம்	ஆ.ஆடு	தேவ	அரசு	துடை	பூராடம்	மத்ய	ஹு	ஹே	ஹோ	ட	HOO	HAY	HO	DAA
ஆயில்யம்	ஆ.பூனை	இராக்ஷ	புன்னை	பாதம்	மூலம்	அந்திய	டி	டு	டே	டோ	DEE	DOO	DAY	DO
மகம்	ஆ.எலி	இராக்ஷ	ஆல்	பாதம்	ரேவதி	அந்திய	ம	மி	மு	மே	MAA	MEE	MOO	MAY
பூரம்	பெ.எலி	மனுஷ	பலாசு	துடை	உத்திரட்டாதி	மத்ய	மெ	ட	டி	டு	MO	TAA	TEE	TOO
உத்திரம்	பசு	மனுஷ	அலரி	வயிறு	பூரட்டாதி	ஆதி	டே	டோ	ப	பி	TAY	TO	PAA	PEE
அஸ்த்தம்	பெ.எருமை	தேவ	அத்தி	கண்ட	சதயம்	ஆதி	பூ	ஷ	ண	தா	PU	SHA	NA	THAA
சித்திரை	ஆ.புலி	இராக்ஷ	வில்வ	சிரசு	அவிட்டம்	மத்ய	பே	போ	ரா	ரி	PAY	PO	RAA	RI
சுவாதி	ஆ.எருமை	தேவ	மருத	கண்ட	ரோகிணி	அந்திய	ரு	ரே	ரோ	த	RU	REY	RO	TAA
விசாகம்	பெ.புலி	இராக்ஷ	விலா	வயிறு	கார்த்திகை	அந்திய	தி	து	தே	தோ	THEE	THU	THEY	THO
அனுஷம்	பெ.மான்	தேவ	மகிழ	துடை	பரணி	மத்ய	ந	நி	நு	நே	NA	NEE	NU	NAY
கேட்டை	ஆ.மான்	இராக்ஷ	புன்னை	பாதம்	அசுவினி	ஆதி	நோ	யா	யி	யு	NO	YAA	YEE	YOO
மூலம்	பெ.நாய்	இராக்ஷ	மாமாம்	பாதம்	ஆயில்யம்	ஆதி	யே	யோ	ப	பி	YAY	YO	BAA	BEE
பூராடம்	ஆ.குரங்கு	மனு	வஞ்சி	துடை	பூசம்	மத்ய	பூ	த	பி	டா	BU	DHA	BHI	DHA
உத்திராடம்	கீரி	மனு	பலா	வயிறு	புனர்பூச	அந்திய	பே	போ	ஜ	ஜீ	BAY	BO	JAA	JEE
திருவோணம்	பெ.குரங்கு	தேவ	எருக்கு	கண்ட	திருவாதிரை	அந்திய	ஜு	ஜே	ஜோ	கா	JU	JAY	JO	GHA
அவிட்டம்	பெ.சிங்கம்	இராக்ஷ	வன்னி	சிரசு	மிருகசீர்ஷ	மத்ய	க	கி.	கு	கே	GA	GEE	GU	GAY
சதயம்	பெ.குதிரை	இராக்ஷ	கடம்பு	கண்ட	அஸ்த்தம்	ஆதி	கோ	ஸா	ஸீ	ஸு	GO	SAA	SEE	SOO
பூரட்டாதி	ஆ.சிங்கம்	மனுஷ	தேமா	வயிறு	உத்திரம்	ஆதி	ஸே	ஸோ	தா	தி	SAY	SO	DAA	DEE
உத்திரட்டாதி	பசு, கீரி	மனுஷ	வேம்பு	துடை	பூரம்	மத்ய	து	த	ஸ	சீ	DHU	THA	SA	CHEE
ரேவதி	பெ.யானை	தேவ	இலுப்பை	பாதம்	மகம்	அந்திய	தே	தோ	ச	சி	DE	DO	CHAA	CHEE

ஜென்ம நட்சத்திரத்தோஷமும் பரிகாரங்களும்

அஸ்வினி, பரணி, கிருத்திகை, ரோகிணி, பூசம், ஆயில்யம், மகம், உத்திரம், அஸ்த்தம், விசாகம், கேட்டை, மூலம், பூராடம், பூரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தால் தோஷ சாந்திகள் செய்திடல் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அஸ்வினி : முதற்பாதத்தில் பிறந்த குழந்தையின் தந்தைக்கு மூன்று மாதங்களுக்கு இன்னல்களும், பொருள்நஷ்டமும் உண்டாகும். அதற்கு சொர்ண (பொன்) தானமளிக்க வேண்டும்.

மற்ற மூன்று பாதங்களில் பிறந்தால் சிறிதளவு தோஷமுண்டு. இதற்கு வஸ்த்திர தானம் செய்திடல் வேண்டும்.

இந்நட்சத்திரத்தில் உதித்தவர்கள் கூத்தனூரில் எழுந்தருளியுள்ள கலைவாணியை வழிபட்டு வந்தால் எல்லாச் சிறப்புகளையும் பெறலாம்.

பரணி : முதல் பாதம் தோஷமில்லை. இரண்டாவது பாதத்தில் பிறந்தால் தோஷமுண்டு. மூன்றாவது பாதம் மிகுந்த துன்பத்தைத் தரும். நான்காவது பாதம் முதல் எட்டு நாழிகைக்குள் பிறந்தால் தாயாரின் உடல்நிலை பாதிப்புக்குள்ளாகும். இதற்குச் சாந்தியாகத் துர்க்கை அல்லது காளிக்கு அபிஷேக ஆராதனைகள் செய்ய வேண்டும். பொன் அல்லது எருமை தானமளிக்கலாம். இந்த நட்சத்திரத்தில் பிறந்தோர் பட்டீஸ்வரம் சென்று துர்க்கையை வழிபட்டால் வளம் பெருகும்.

கிருத்திகை : முதலிரண்டு பாதங்கள் தோஷமில்லை. மற்ற இரண்டு பாதங்களில் பிறந்தால் பெற்றோர்களுக்கு இன்னல்களும் இடையூறுகளும் உண்டாகும். ஆடுதானம் சிறந்தது. சூரிய ஆராதனையும், திருவண்ணாமலையில் உள்ள அக்னி லிங்க வழிபாடுகளும் மன அமைதியையும் பொருள் வளமையையும் நல்கும்.

ரோகிணி : முதற்பாதம் அக்குழந்தைக்கும் மற்றும் அதன் தாய் மாமனுக்கும் இரண்டாம் பாதம் அதன் தந்தைக்கும், மூன்றாம் பாதம் அதன் தாயாருக்கும், தோஷம் விளைவிக்கும். நான்காம் பாதம் சாதாரணமானது. எனினும் நான்கு பாதங்களும் தோஷமுள்ளதே. அத்துடன் தாய்மாமனுக்கும் கண்டம் என நூல்கள் விவரிக்கின்றன. எனவே அவரவர்களின் சக்திக்கேற்ப சாந்தி ஹோமங்கள் செய்வதுடன் வெள்ளி தானமளிக்க வேண்டும். இந்த நட்சத்திரத்தில் பிறந்தோர், நான்முகனையும், திருவருணை கோவிலில் பிரம்மதீர்த்தம் எதிரில் உள்ள பிரம்மலிங்கத்தை வழிபட்டு வந்தால் திரண்ட செல்வமும் நிறைந்த ஞானமும் பெறலாம்.

மிருக சீர்ஷம் : நான்கு பாதங்களும் தோஷமில்லை. இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் பௌர்ணமி விரதமிருந்து சந்திரனை வழிபட்டால் சகல ஐஸ்வர்யங்களும் பெறலாம். திங்களூர் சென்று வழிபட்டால் தீராத குறைகளெல்லாம் தீரும்.

திருவாதிரை : முதல் மூன்று பாதங்கள் தோஷமற்றது. நான்காவது பாதத்தில் முதல் எட்டு நாழிகை வரையில் தாயாருக்கும் கண்டம். இதற்கு பசு நெய் தானமளித்திடல் வேண்டும். செவ்வாய் அல்லது வியாழக்கிழமைகளில் பிறந்தத் திருவாதிரை நட்சத்திரத்தைச் சார்ந்தவர்கள் விஷ்ணு ஸஹஸ்ரநாமம், ருத்ர ஜபம் செய்துவந்தால் நீண்ட ஆயுளைப் பெறலாம்.

புனர்வசு : நான்கு பாதங்களும் தோஷமற்றது. இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் சூரிய ஆராதனைச் செய்வது சாலச்சிறந்தது. திருவண்ணாமலையில் உள்ள சூரியலிங்க ஆராதனை மிகவும் புகழையும் பொருளையும் நல்கும்.

பூசம் : முதற்பாதம் தாய்மாமனுக்கும், இரண்டாவது பாதம் மத்திய (நடு) பாகம் மற்றும் மூன்றாம் பாதம் பெற்றோர்களுக்கும் துன்பமுண்டாகும். நான்காம் பாதம் தோஷமற்றது. இரண்டாம் பாதமும், கடகலக்னமும் கூடிய ஆண்குழந்தை தந்தைக்கு கண்டத்தை உண்டாக்கும். இரவு நேரங்களில் பிறந்தப் பெண்குழந்தையால் தாயாருக்குக் கெடுதி. இதற்குப் பரிகாரமாகப் பசுவை தானம் செய்திடல் வேண்டும். இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் தக்ஷிணாமூர்த்தியையோ, ஹயக்ரீவரையோ வழிபட்டு வருவது சிறந்ததாகும்.

ஆயில்யம் : முதற்பாதம் சாதாரணமானது. இரண்டாவது பாதம் அக்குழந்தைக்கும், அதன் தந்தைக்கும் தோஷம். மூன்றாவது பாதம் அதன் தாயாருக்குக் கெடுதி. நான்காவது பாதம் அச்சிசுவிற்கும் அதன் தந்தைக்கும் துன்பத்தைத் தரும். இதற்கு கிரக சாந்திகள், ஜபம், தானங்கள் அவசியம் செய்திடல் வேண்டும். நான்காம் பாதத்தில் பிறந்த குழந்தைக்கு ஆயுஷ்ஹோமம் செய்வதும், ஏழை எளியவர்களுக்கு வஸ்திரம், அன்னதானம் செய்வது மிகவும் அவசியம். இந்த நட்சத்திரத்தைச் சார்ந்தவர்கள் ஸர்ப்பேஸ்வரனை வணங்குவது நல்ல பலன்களை நல்கும். ஸ்ரீகாளஹஸ்தி மற்றும் திருநாகேஸ்வரம் சென்று வழிபாடு செய்வது சிறந்தது.

மகம் : முதல் பாதம், குழந்தையின் தந்தைக்கு தன நஷ்டத்தை அக்குழந்தைப் பிறந்தது முதல் ஐந்து மாதம் வரை உண்டாக்கும். இதற்குப் பரிகாரமாகக் குதிரை (அஸ்வம்) தானம் குறிப்பிடப்பட்டுள்ளது. ஈஸ்வரனுக்கு அபிஷேக ஆராதனைகள் – கிரக சாந்திகள் தானங்கள் செய்திடலாம். இரண்டு மற்றும் நான்காவது பாதம் சாதாரண அல்லது சிறிதளவு தோஷமுள்ளது. மூன்றாவது பாதத்தில் பிறந்தக் குழந்தை ஆண் ஆனால் தந்தைக்கும், பெண் ஆனால் தாயாருக்கும் தோஷத்தையுண்டாக்கும். இந்த நட்சத்திரத்தைச் சார்ந்தவர்கள் பித்ரு தேவதைகளை வழுவாது ஆராதனைச் செய்வது, திருக்கடையூர், ஸ்ரீவாஞ்சியம், திருமீயச்சூர், திருப்பைஞ்சீலி ஆகியத் திருத்தல வழிபாடுகளும் பெரும் நன்மையையளிக்கும்.

பூரம் : நான்கு பாதங்களும் சிறிதளவு தோஷமுள்ளது. இதற்குப் பரிகாரமாக ருத்ராபிஷேகம் செய்வது மிகச் சிறந்தது. இந்த நட்சத்திரத்தைச் சார்ந்தவர்கள் அருணம் அல்லது மஹாஸௌரம் பாராயணம் செய்வது மற்றும் ஆதித்ய ஹ்ருதயம் நாள்தோறும் படிப்பது, சூரியனை வழிபடுவது நன்மைப் பயக்கும். உமை அல்லது பாலாமந்திரஜபமும் சிறந்தது.

உத்திரம் : முதற்பாதம், முதலிரண்டு நாழிகைக்குள் பிறந்தக் குழந்தை ஆண் ஆயின் தந்தைக்கும், பெண்ணாயின் தாயாருக்கும் தோஷமுண்டாக்கும். இது இரண்டு மாதத்திற்குண்டு. இரண்டு மற்றும் மூன்றாம் பாதம் சாதாரணமானது. நான்காம் பாதம் தந்தையின் சகோதரர்களுக்கு தோஷமுண்டுபண்ணும். இதற்குப் பரிகாரமாக தைல (எண்ணெய்) தானம் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நட்சத்திரத்தைச் சார்ந்தவர்களும் பன்னிரண்டு ஆதித்யர்களைச் சேர்ந்த ஆர்ய மன் என்னும் சூரியனையே வழிபடல் வேண்டும்.

அஸ்தம் : ஒன்று இரண்டு மற்றும் நான்காம் பாதம் தோஷமற்றது. மூன்றாம் பாதத்தில் முதல் நான்கு நாழிகைக்குள், ஆண் ஆயின் தந்தைக்கும், பெண்ணாயின் அன்னைக்கும் தோஷமுண்டு. இது ஒன்பது மாதங்கள் நீடிக்கும். இத்தோஷத்தை ஸ்வர்ணம் என்று கூறப்படும். பொன் தானத்தால் நீக்கிக்கொள்ள முடியும். ஆதித்ய ஹ்ருதயம் பாராயணமும், சூரிய வழிபாடும் மேற்கொள்ள எல்லா நன்மைகளும் விளையும்.

சித்திரை : முதல் மூன்று பாதங்கள் தாயாருக்கு, தந்தைக்கு மற்றும் சகோதரர்களுக்குத் தோஷமுண்டாகும். இரண்டாவது பாதத்தில் முதல் ஆறு நாழிகைக்குள் எனின் குழந்தையின் அன்னைக்கு மிகவும் தோஷம். முதலிரண்டு பாதங்களுக்குரிய கன்னிராசியில் பகலில் ஜனிக்கும். ஆண் குழந்தைத் தந்தைக்கும் இரவில் பிறந்தப் பெண்குழந்தையினால் அதன் தாயாருக்கும் தோஷமுண்டாகும். இது பிறந்த ஆறுமாத காலத்திற்கு நீடிக்கும். நான்காம் பாதம் பிறந்த சிசுவினால் தந்தைக்குத் துயரமும் உண்டாகும். வஸ்த்திர தானம் ஏற்ற பரிகாரமாகும். இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் இந்திரனை வழிபடல் வேண்டும். திருவண்ணாமலையில் கிழக்கு திசையில் உள்ள அஷ்டலிங்கங்களில் முதல் லிங்கமான இந்திரலிங்க வழிபாடு. செல்வம், செல்வாக்கு, பதவி உயர்வு முதலியன நல்கும்.

சுவாதி : நான்கு பாதங்களும் தோஷமற்றது. இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் வாயுதேவனை வணங்குதல் நன்று. அருணையிலுள்ள வாயுலிங்க வழிபாடு சாலச்சிறந்தது. திருமகளையும் வணங்குவது ஏற்றது.

விசாகம் : நான்காம்பாதம் தோஷம். மற்ற பாதங்கள் தோஷமில்லை. நான்காம் பாதம் முதல் எட்டு நாழிகைக்குள் முதற்குழந்தையாக இருப்பின் தாயாருக்குக் கண்டமென்றும் கூறப்படுகிறது. செவ்வாய்க்கிழமை, சஷ்டி, கிருத்திகை போன்ற சுப்ரமண்யசுவாமிக்குரிய நாட்களில் செந்நிற ஆடைச்சாற்றி சிவப்பு மலர்கொண்டு அபிஷேக ஆராதனைகள் செய்வதும் துவரை மற்றும் கோதுமை தான்ய தானங்கள் செய்வதும் சிறப்பான பலன்களை நல்கும்.

அனுஷம் : நான்கு பாதங்களும் தோஷமற்றது. இந்த நட்சத்திரத்தில் ஜனித்தவர்கள் மித்ர என்னும் துவாதச ஆதித்யர்களில் ஒருவரான சூரியனை வழிபடல் வேண்டும். வருணனையும். திருவண்ணாமலையில் கிரிவலப்பாதையில் எழுந்தருளியிருக்கும் வருணலிங்கத்தை வழிபடுவதும் மிகவும் சிறந்தது.

கேட்டை : நான்கு பாதங்களும் தோஷத்தைத்தருவன. முதல்பாதத்தில் பிறந்த ஆண்குழந்தையாயின் மூத்த சகோதரனுக்கும், பெண் என்றால் மூத்த சகோதரிக்கும், இரண்டாம் பாதம் மற்றுமுள்ள சகோதரர்களுக்கும், உறவினர்களுக்கும், மூன்றாம் பாதம் அக்குழந்தையின் அன்னைக்கும், செல்வத்திற்கும், நான்காம் பாதம் அக்குழந்தை மற்றும் அதன் தாயாருக்கும் கண்டமாம். பசு அல்லது தங்கத்தால் செய்த பசுவினை தானமளிக்க வேண்டும். இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் தேவேந்திரனை வழிபடல் வேண்டும். இந்த நட்சத்திரப் பெண்கள் திருமணத்தடைநீங்கத் தூய வெண்மையான மலர்கொண்டு தேவேந்திரனை மனதில் தியானித்து வழிபாடு செய்தால், நல்ல கணவர் அமைவார். அருணையிலுள்ள இந்திரலிங்கப் பூஜையும் மிகவும் சிறந்த பலன்களை நல்கும்.

மூலம் : முதல் பாதத்தில் ஆண் குழந்தை பிறந்தால் தந்தைக்கு துன்பம். பெண் குழந்தையாயின் கால்நடைகள் (பசுக்கள்) நஷ்டமாகும். இரண்டாம் பாத ஆண் குழந்தையால் அதன் அன்னைக்குத் துன்பம், பெண்ணாயின் சுபம். மூன்றாம் பாத ஆண்குழந்தையினால் பொருள் நஷ்டம். சகோதரர்களுக்குத் துன்பம். மூன்றாம் பாத பெண்குழந்தையினால் தந்தையின் வமிசத்திற்கே நஷ்டம். மூன்றாம் பாதம் பகலில் பிறந்தால், அதன் தந்தைக்கும், மாலைப்பொழுது எனின் அக்குழந்தையின் தாய் மாமனுக்கும், இரவு எனின் அதன் தாய்க்கும், உதயவேளை அல்லது காலை எனின் உறவினர்கள், நண்பர்கள் ஆகியோருக்குத் தீங்கு. இந்த நட்சத்திரத்தில் எப்பாதத்தில் பிறந்திருப்பினும், மஹன்யாஸத்துடன் கூடிய ருத்ராபிஷேகம் செய்திடல் வேண்டும். இந்த நட்சத்திரத்தில் பிறந்தோர் பிரஜாபதியை வழிபட்டால் வாழ்க்கையில் எல்லா நலன்களும் பெறுவார்கள்.

பூராடம் : ஒன்று, இரண்டு மற்றும் நான்கு ஆகிய பாதங்களில் பிறந்தால் சிறிதளவும் தோஷம் உண்டு. மூன்றாம் பாதத்தில் புத்திரன் தந்தைக்கும், புத்ரியானால் தாய்க்கும், தோஷமாகும். இத்தோஷம் எட்டாம் மாதம் வரையில் இருக்கும். தனுர் ராசியில் உள்ள இந்த நட்சத்திரத்தில் சூரிய உதய வேளையிலும் அஸ்தமிக்கும் வேளையிலும், நடு இரவிலும் புத்ரஜனனமானது அதன் தந்தைக்கும் மற்றும் அச்சிசுவிற்கும் பெரும் தோஷமாகும். நவக்கிரகம் மற்றும் நட்சத்திர ஹோமம் செய்வதும், புனித கங்கை நீரினால் சிவபெருமானுக்கு அபிஷேகமும் செய்விக்கவும் வேண்டும். இந்த நட்சத்திரத்தில் உதித்தோர், திருவானைக்காவல் இறைவனையும் திருவண்ணாமலையில் உள்ள வருணலிங்கத்தையும் வழிபட்டால் நல்ல செல்வமும் செல்வாக்கும் பெறலாம். பௌர்ணமி விரதம் ஏற்றது. தேங்காய்-நெய்தீப வழிபாடு சாலச்சிறந்தது.

உத்திராடம் : நான்கு பாதங்களும், தோஷமில்லையாயினும், செவ்வாய்க்கிழமை, உத்திராட நட்சத்திரத்தில் பெண் குழந்தை பிறந்தால் விஷகன்னிகா யோகமேற்படும். அப்பெண் திருமணமாகி, கணவன் வீடு செல்லும் வரையில் பிறந்த வீட்டில் இன்னல்கள், இடையூறுகள் உண்டாகும். இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் விஸ்வதேவதைகளையும், விநாயகரையும் உள்ளன்புடன் வழிபட்டால் வாழ்க்கையில் வளம்பல பெறலாம். பாண்டிச்சேரி மனக்குள விநாயகர், திருப்பாதிரிப்புலியூர் பாதிரி விநாயகர், திருவண்ணாமலை ஆநிரை கணபதி ஆகியோரின் வழிபாடு மிக மிக உயர்ந்தது.

திருவோணம் : தோஷமில்லை. இந்த நட்சத்திரத்தில் பிறந்தோர் ஏகாதசி விரதம் இருந்து திருமாலை வழிபட்டாலும், சிரவண விரதமேற்கொண்டு திருவேங்கடமுடையானை ஆராதித்தாலும், லக்ஷ்மி குபேர திருவுருவப்படத்தை - குபேர யந்திரம் - மந்திரம் கொண்டு பூஜித்தாலும், திருவண்ணாமலையில் எழுந்தருளியுள்ள குபேரலிங்கத்திற்கு அபிஷேக ஆராதனைகள் செய்தாலும் பெரும்பொருளும் புகழும் பெறுவார்கள். வாகனப் பிராப்தியுண்டாகும்.

அவிட்டம் : தோஷமற்றது. இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் அஷ்ட வஸுக்களை ஆராதிக்க வேண்டும். பித்துரு முக்தி ஸ்தலங்களில் இராமேஸ்வரம், காசி, கயை, லால்குடி அருகிலுள்ள பூவாளூர் ஆகிய ஊர்களில் உள்ள இறைமூர்த்திகளை ஆராதனைச் செய்வதும் மிகுந்த நன்மைப் பயக்கும்.

சதயம் : தோஷமில்லாதது. இந்த நட்சத்திரத்தில் உதித்தோர் திருவானைக்காவல் இறைவனையே, திருமீயச்சூரில் எழுந்தருளியுள்ள ஸ்ரீமேக நாதரையோ, திருவருணையில் உள்ள வருணலிங்கத்தையோ வழிபட்டால் இன்னல்கள் எல்லாம் நீங்கி இன்பமுறுவர்.

பூரட்டாதி : முதல் மூன்று பாதங்கள் சிறிதளவே தோஷமுள்ளது. நான்காவது பாதத்தில் முதல் எட்டு நாழிகைக்குள் பிறந்தால் சிசுவின் தாய்க்குக் கண்டம். அதுவும் முதல் குழந்தை எனின் தோஷமதிகம். பொன் தானம் கொடுக்க வேண்டும். இந்த நட்சத்திரத்ததில் பிறந்தோர் , செல்வத்தில் சிறந்தோங்க லக்ஷ்மி குபேர பூஜையை மேற்கொள்ள வேண்டும். திருவண்ணாமலை கிரிவலப்பாதையிலுள்ள குபேரலிங்கத்தையும் சீர்காழி அருகிலுள்ள ஸ்ரீலக்ஷ்மிபுரீஸ்வரரையும் வழிபடுவது சாலச்சிறந்தது.

உத்திரட்டாதி : தோஷமற்றது. இந்த நட்சத்திரத்தில் பிறந்தோர் காமதேனுவை பூஜித்தாலும், பட்டீஸ்வரத்திலுள்ள தேனுபுரீஸ்வரரை வழிபட்டாலும் நல்லனவெல்லாம் இடையூறின்றி வெற்றியுடன் நடைபெறும்.

ரேவதி : முதல் மூன்று பாதத்தில் பிறந்தால் சிறிதளவு தோஷமுண்டாகும். நான்காம் பாதத்தில் பிறந்தால் குழந்தையின் தந்தைக்குத் தோஷமுண்டு. மூன்று மாதமிருக்கும். இத்தோஷம் விலக, பொன்னாலான பசு உருவம் மற்றும் பசும் நெய் தானமளித்திடல் வேண்டும். பன்னிரண்டு ஆதித்யர்களில் ஒருவரான பூஷா என்பவரையோ சூரியனார் கோவிலில் எழுந்தருளியுள்ள சூரிய நாராயணமூர்த்தியையோ அல்லது திருவண்ணாமலை கிரிவலப்பாதையில் உள்ள சூரிய லிங்கத்தையோ வழிபட்டாலும் நல்ல உடல் ஆரோக்கியம் பெற்று சிறந்தமுறையில் புகழுடன் வாழலாம்.

ஏகவிம்சதி (21) மஹா தோஷங்களும் அவற்றின் பரிகாரங்களும்

1. பஞ்சாங்க சுத்தி : துஷ்ட கிரகங்களின் வேதை, (அந்த நட்சத்திரத்திலிருப்பது) கிராந்தி போன்ற தோஷமுள்ள நாட்களாயின், புத, குரு பலத்தினால் நீங்கும். திதி – வாரம் – நட்சத்திரம் – யோகம் – கரணம் ஆகிய ஐந்தும் சுபமாக இருத்தல் பஞ்சாங்க சுத்தியாகும்.

2. ரவி சங்க்ரமணம் : சூரியன் ராசி ப்ரவேசம் செய்யும் நாள் சங்க்ரமண தோஷமுள்ள நாளாகக் கருதப்படும். எனினும் ஸங்க்ரமணத்திற்கு முன்பும் பின்பும் முப்பது நாழிகை அல்லது 12 மணி நேரமே தோஷமுள்ள காலமாகும். மற்றவை தோஷமில்லை.

3. பாபஷட்வர்க்கம் : லக்னம், ஹோரா, த்ரேக்காணம், நவாம்ஸம், திரிம்ஸாம்ஸம் என்று சொல்லக்கூடிய ஆறு வர்க்கங்களிலும், லக்னத்தில் பாப கிரகங்கள் இருப்பது பாபஷட்வர்க்கமாகும். லக்னத்தில் புதன்-குரு-சுக்கிரன் இருப்பது பரிகாரமாகும்.

4. குஜாஷ்டகம் : முகூர்த்த லக்கனத்திற்கு எட்டில் செவ்வாய் இருப்பது தோஷமாகும். எனினும் செவ்வாய் தனது சொந்த வீடான மேஷ விருச்சிகத்திலும் உச்ச நீச வீடுகளான மகர – கடகத்திலும் இருந்தாலும், சூரியனுடன் அஸ்தங்கதம் அடைந்திருந்தாலும், இத்தோஷம் விலகும். லக்னத்தைச் சுபகிரகங்களாகிய குரு, சுக்ரன் பார்த்தாலும் இத்தோஷமில்லை.

5. ப்ருகு ஷட்கம் : முகூர்த்த லக்கனத்திற்கு ஆறாம் வீட்டில் சுக்ரன் இருந்தால் ப்ருகு ஷட்க தோஷமாகும். சுக்ரன் தனது சத்ருஸ்தானமாகிய கடக – சிம்மத்திலிருந்தாலும், தனது நீச ஸ்தானமாகிய கன்னியிலிருந்தாலும் இத்தோஷம் இல்லை. லக்னத்தை குரு பார்த்தாலும் – சுக்ரனுக்குக் குரு வீக்ஷண்யமிருந்தாலும் இது விலகும்.

6. கண்டாந்தம் : இது திதி கண்டாந்தம், நட்சத்திர கண்டாந்தம் என இரு வகைப்படும். பிரதமை – பௌர்ணமி, பஞ்சமி-சஷ்டி, தசமி-ஏகாதசி ஆகிய இவற்றிற்கிடையில் 4 நாழிகை அல்லது 1 மணி 36 நிமிட காலம் திதி தண்டாந்தம். இதுபோன்று ஆயில்யம் – மகம், கேட்டை-மூலம், ரேவதி- அஸ்வினி ஆகிய நட்சத்திரங்களுக்கிடையில் நான்கு நாழிகை அல்லது 1 மணி 36 நிமிடம் நட்சத்திர கண்டாந்தத் தோஷமாகும். லக்னத்தில் சுபகிரகம் இருப்பது சுபகிரகம் லக்னத்தைப் பார்ப்பது. லக்ன கேந்திர-திரிகோணங்களில் பலமான சுபகிரகம் இருப்பது சுபகிரகம் லக்னத்தைப் பார்ப்பது லக்னாதிபதிக்கும் இவ்வாறு சுபகிரக பார்வை, சேர்க்கை போன்ற தொடர்பு இருப்பது இத்தோஷத்தைப் போக்கும்.

7. இராசி கண்டாந்தம் : மீனம் – மேஷம், கடகம் – சிம்மம், விருச்சிகம்-தனுசு ஆகிய இராசிகளின் சந்திப்புகளிடையே உள்ள ஒரு நாழிகை அல்லது 24 நிமிட நேரம் தோஷ காலமாகும். குரு அல்லது சந்திரன் லக்னத்திற்கு சுபர்களாகி பலம் பெற்றாலும் லக்னத்திற்கு கேந்திர – திரிகோணத்திலிருந்தாலும் இத்தோஷம் விலகும்.

8. கத்தரி : முகூர்த்த லக்னத்திற்கு இரண்டு பன்னிரண்டில் பாபக்கிரக வேதை இருந்தாலும் இரண்டில் வக்ரமடைந்த கிரகமும், பன்னிரண்டில் வக்ரநிவர்த்தியான கிரகமும் இருந்தாலும் கத்தரி தோஷமேற்படும். எனினும் புதன்-குரு-சுக்ரன் பலமாக அமையப் பெற்றிருந்தால் இத்தோஷம் நீங்கும்.

9. ஷஷ்டாஷ்டக – ரிபு ஸங்க்ரஹ சந்திரன் : சந்திரன் முகூர்த்த லக்னத்திற்கு 6-8-12 ஆகிய துஸ்தானாங்களில் ஏதாவது ஒன்றிலிருந்தாலும் பாபக்கிரகத்துடன் கூடியிருந்தாலும் தோஷமாகும். ஆனால் சந்திரன் தனது உச்சஸ்தானமாகிய ரிஷபத்திலிருந்தாலும், சொந்த வீடான கடகத்திலிருந்தாலும் குருவுடன் கூடினாலும், பார்க்கப்பட்டாலும் இத்தோஷமில்லை.

10. லக்னாதஷ்டமம் : லக்னாதிபதி எட்டில் உலவுவது. முகூர்த்த லக்னத்திற்கு அல்லது சந்திர லக்னத்திற்கு எட்டாவதாக இருப்பது சந்திரன் முகூர்த்த லக்னத்திற்கு எட்டிலிருந்தாலும், எட்டிற்குரியவர் முகூர்த்த லக்னத்திலிருந்தாலும் இத்தோஷம் உண்டு. சுபகிரகப்பார்வை இருப்பின் விலகும்.

11. பாபக்கிரக நவாம்ஸகம் : முகூர்த்த லக்னம் பாபக்கிரக நாவாம்ஸத்தில் விழுந்தால் இத்தோஷமுண்டு. புத-குரு-சுக்ரர்கள் பலம் பெற்றிருப்பின் இது விலகும்.

12. துர்முகூர்த்தம் : ஒவ்வொரு நாளுக்கும் இராகுகாலம், எமகண்டம் போன்று முகூர்த்த காலமும் உண்டு. (இதனை இப்பஞ்சாங்கத்தின் வேறொரு பக்கத்தில் காண்க) கிரக பலம் நன்றாக அமையப்பெற்றிருந்தால் இத்தோஷம் பார்க்க வேண்டியதில்லை.

13. கர்ஜூரிகாஸமாங்க்ரீகம் : பஞ்சஸலாகா, ஸப்த ஸலாகா, கர்ஜூர சக்கரம் போன்றவற்றில் வேதை ஏற்படலாம். அவ்வேதையில்லையெனின் சுபகரமானது.

14. கிரஹண தோஷம் : கிரகணம் ஏற்பட்ட நாளுக்கு முன்பும் பின்பும் ஏழு நாட்கள் கிரகண தோஷ காலமாகும். கிரகணம் எந்த நட்சத்திரத்தில் ஏற்பட்டதோ அந்த நட்சத்திரத்தில் ஆறு மாத காலத்திற்கு முகூர்த்தம் செய்தல் கூடாது.

15. உத்பாதம் : பூகம்பம், வால்நட்சத்திரம் (தூமகேது) போன்றவை ஏற்பட்ட நாட்கள் விலக்கத்தக்கன.

16. பாபக்கிரக வேதை : பாபக்கிரகம் பிரவேசித்த அல்லது உலவிடும் இராசி-லக்னம் பயன்படாது எனினும் அந்த லக்னத்திற்கு சுபகிரகப் பார்வை உண்டானால் ஏற்றுக்கொள்ளலாம்.

17. பாபக்கிரகம் சஞ்சரிக்கும் நட்சத்திரம் : குருட்டு நட்சத்திரம் - ஜீவனற்ற நட்சத்திரம் போன்றவைகளை விலக்க வேண்டும்.

18. விஷ கடிகை : ஒவ்வொரு நாளிலும் த்யாஜ்யம் என்று சொல்லக்கூடிய விஷகடிகை நேரமுள்ள லக்னத்தைத் தவிர்க்க வேண்டும். எனினும் சுபக்கிரகச் சேர்க்கைப் பார்வை இலக்கனத்திற்குண்டானால் இத்தோஷம் விலகும்.

19. லக்னாஸ்தம் : முகூர்த்த லக்னத்திற்குரிய நவாம்ஸம் நிர்ணயிக்கும் போது அது எத்தனையாவது நவாம்ஸமாகுமோ அதற்கு லக்னாதிபதியின் தொடர்பு ஏற்படின் சுபம். அந்த நவாம்ஸ லக்னத்திற்கு ஏழாவது வீடு லக்னாஸ்தம் என்று பெயர். இதில் பாபக்கிரகங்கள் இருந்தாலும், பார்த்தாலும் லக்னாஸ்த தோஷம் என்பர். இதற்கு சுபகிரகச்சேர்கை பலமான பார்வை தொடர்பு ஏற்படின் விலகும்.

20. வியதீபாதம் - வைத்ருதி : வியதீபாதம் - வைத்தருதியோகம் உள்ள நாட்கள் பித்ரு ஆராதனைக்குரிய புண்ணிய நாட்களாகும். சுபமுகூர்த்தத்திற்குப் பயன்படாது. மேலும் ஸாத்ய, ஹர்ஷ, ஸூல, கண்ட, வைத்ருதி, வியதீபாதம் ஆகிய யோகங்களின் இறுதி பாகத்திற்குச் சூரிய சந்திர கிராந்தி ஏற்படினும் இத்தோஷமாகும்.

21. ஏகார்களம் : வியாகாதம் - புனர்வசு, ஸூல மிருக சீர்ஷம், பரிக-மகம், வ்யதீபாதம், ஆயில்யம், விஷ்கம்பம், அஸ்வினி, கண்டம்-மூலா, அதிகண்ட-அனுஷம், வஜ்ர-பூசம், வைத்ருதி - சித்திரை ஆகிய சேர்க்கைகள் உள்ள நாட்களை ஏகார்கள தோஷமுள்ள நாளென்பர்.

பொதுவாகக் கூறுமிடத்து சுபகிரகங்கள் கேந்திர திரிகோணங்களிலும், பாபக்கிரகங்கள் 3-6-11 ஆகிய இடங்களிலும் இருப்பது மிகவும் நல்லது. செவ்வாய் ஆறிலும் சனி பதினொன்றிலுமிருந்து லக்னத்தைப் பார்ப்பது நல்லது. மேலும் எல்லாவற்றிலும் லக்னாதிபதியின் பலம் மிக மிக முக்கியமானது. மற்ற கிரகங்கள் பலம் பெற்று லக்னாதிபதி பலமற்று சஞ்சரிக்கும் லக்னமும் சிலாக்கியமில்லை. பாபக்கிரங்களாகிய சூரியன், செவ்வாய், சனி, இராகு, கேது-3-6-11 ஆகிய இடங்களிலும், சுபக்கிரகங்களாகிய சந்திரன், புதன், குரு, சுக்ரன் 1,2,4,5,7,9,10,11 ஆகிய இடங்களிலும் உலவிடம் லக்னம் மிகவும் பலம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

விவசாயிகளின் கவனத்திற்கு

ஏர்உழ :

அனுஷம், அஸ்தம், சித்திரை, சுவாதி, ரோகிணி, அவிட்டம், மகம், அஸ்வினி, உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, ரேவதி, மூலம் ஆகிய நட்சத்திரங்கள் ஞாயிறு, செவ்வாய், புதன், வெள்ளி ஆகிய கிழமைகளில் பூமியில் ஏர் உழுவதற்கு ஆரம்பம் செய்ய உத்தமம், திங்கள்-மத்திமம், ரிக்த திதிகள், தக்த திதிகள், பிரதமை அமாவசியை, வைத்ருதி, வ்யாகாதம், வ்யதீபாதம் ஆகிய யோகங்கள் பத்ரகரணம் ஆகியவற்றைத் தவிர்த்து மற்றைய சுபதினங்களில் ஏர்உழ ஆரம்பித்தல் நலம்.

பயிர்ச் செய்ய :

விசாகம், அஸ்த்தம், மிருக சீர்ஷம், மகம், புனர்வசு, ரோகிணி, அஸ்வினி, திருவோணம், அவிட்டம், சதயம், உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, மூலா, ரேவதி, சுவாதி, அனுஷம், பூசம் ஆகிய இந்த 18 நட்சத்திரங்களில் செவ்வாய், வியாழன், ஞாயிறு ஆகிய கிழமைகளில் ரிஷபம், மீனம், மிதுனம், கன்னி, தனுசு, விருச்சிகம் ஆகிய லக்னங்களில் பயிர்செய்ய ஆரம்பித்தால் எல்லா நன்மைகளையும் பெறலாம். துலா லக்னத்தில் ஆரம்பித்தால் உயிராபத்து உண்டாகலாம். மகர லக்னத்தில் செய்ய ஆரம்பித்தால் பயிர்களழியும். கும்பத்தில் ஆரம்பித்தால் திருட்டுப்பயமுண்டாகும். மேஷத்தில் ஆரம்பித்தால் உழவு மாட்டிற்கும் பசுவிற்கும் கெடுதி. கடகத்தில் பயிர்ச்செய்ய ஆரம்பம் செய்தால் நெருப்புப் பற்றிக் கொள்ளும். சிம்மத்தில் ஆரம்பித்தால் பாம்பு போன்ற விஷ ஜந்துக்களினால் மனிதர்களுக்கும் பயமுண்டாகும்.

கரும்பு-வாழை-மா-பயிரிட :

ரேவதி, உத்திரம், ரோகிணி, பூசம், அஸ்த்தம், புனர்வசு, மூலா, சுவாதி, சதயம், அஸ்வினி, இந்த 10 நட்சத்திரங்களிலும் வியாழன், புதன், திங்கள் ஆகிய கிழமைகளிலும், கன்னி, கடகம், மிதுனம், ரிஷபம், மீனம், மகரம் ஆகிய லக்னங்களில் விதை விதைக்க மேலே சொன்னவற்றைப் பயிரிடச் செய்தால் முழுமையான நல்ல பலன்களைப் பெறலாம்.

இஞ்சி, மஞ்சள், பூண்டு, வெங்காயம், மிளகாய் ஆகிய தோட்டப்பயிர்ச்செய்ய :

ரேவதி, அஸ்வினி, அனுஷம், சுவாதி, சதயம், புனர்வசு, பூசம், உத்திரம், அஸ்தம், கேட்டை, திருவோணம், மூலா, மிருகசீர்ஷம் ஆகிய இந்த 13 நட்சத்திரங்களிலும், ஞாயிறு, வியாழன், திங்கள் ஆகிய நாட்களில் செய்வது உத்தமம். பஞ்சமி, தசமி, பூர்ணமி திதிகளில் மகரம்-மீனம், விருச்சிகம், தனுசு, கும்பம், ஆகிய இந்த லக்னங்களில் இஞ்சி, மஞ்சள், பூண்டு, வெங்காயம் பயிர்செய்வது நடுவது போன்றவற்றிற்கு மிகவும் நல்லது என வஸிஷ்டாதி மகரிஷிகள் கூறியதாக அறியப்படுகிறது.

மணிலா (வேர்கடலை) கோதுமை விதைக்கப் பயிர்ச்செய்ய :

மூலா, உத்தரம், உத்திராடம், உத்திரட்டாதி, திருவோணம், மிருகசீர்ஷம், புனர்வசு அவிட்டம், ரேவதி, ரோகிணி, அனுஷம், சுவாதி ஆகிய 12 நட்சத்திரங்களில், கடகம், தனுசு, துலாம், ரிஷபம், சிம்மம், விருச்சிகம், கும்பம் இந்த லக்னங்களில், புதன், வியாழன், வெள்ளி ஆகிய கிழமைகளில் வேர்க்கடலை, கோதுமை, துவரை ஆகியன விதைக்க ஆரம்பித்தால் அதிக மகசூல் காணலாம். மேலும் மூலா, உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, அனுஷம், விசாகம், மகம், திருவோணம், ரேவதி, பூசம் இந்த 10 நட்சத்திரங்களில் எல்லாவகையான விதைகளை சேகரித்து மூட்டைகளாகக் கட்ட எல்லாவித நன்மைகளையும் பெறலாம்.

தான்யங்களை நிலத்திலிருந்து வீட்டிற்குக் கொண்டுச்செல்ல :

தாராபலம், சந்திரபலம் தேவை. சுபகிரக ஹோரையில், துர்முகூர்த்தம், இராகுகாலம், எமகண்டம், விஷகடிகை போன்ற காலங்களைத் தவிர்த்து மற்றைய நல்லநேரங்களில் கொண்டுச் செல்ல உத்தமம்.

பருத்தி-புகையிலைப் பயிர்ச்செய்ய :

அஸ்வினி, பரணி, மிருகசீர்ஷம், பூசம், திருவாதிரை, அஸ்தம், சுவாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்களில் ஞாயிறு, புதன், வியாழன், வெள்ளி ஆகிய நாட்களிலும் அந்த ஆண்டு ஸஸ்யாதிபதி வந்த வாரத்திலும் பயிர்செய்வது உத்தமம். இவ்வாறு பயிர்ச்செய்யின் பயிர்கள் செழித்து வளர்வதுடன் மகசூலும் அதிகமாகக் காணும். பயிரை நாசம் செய்யும். பூச்சிகளின் தொல்லையும் இராது. அதிக ஆதாயம் பெறலாம்.

கம்பு-சோளம்-கேழ்வரகு பயிர்ச்செய்ய :

துவிதியை, பஞ்சமி, சப்தமி, நவமி, தசமி, ஏகாதசி, திரயோதசி, பௌர்ணமி, திதிகள், ஞாயிறு, திங்கள், புதன், வியாழன், வெள்ளி ஆகிய கிழமைகள் அஸ்வினி, பரணி, ரோகிணி, திருவாதிரை, பூசம், அஸ்தம், சுவாதி, மகம், அனுஷம், உத்திரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்கள் மேஷம், ரிஷபம், கடகம், துலாம், தனுசு, மீன லக்னங்களில் விவசாயம் செய்ய நல்ல ஆதாயம் கிடைக்கும்.

கத்தரி, வெண்டை, தக்காளி ஆகியன பயிரிட :

அஸ்வினி, பரணி, கிருத்திகை, ரோகிணி, உத்திரம், திருவோணம், அவிட்டம், சதயம், உத்திரட்டாதி, ரேவதி, மகம், மூலம், பூரம், பூராடம், உத்திரட்டாதி ஆகிய நட்சத்திரங்கள் மிகுந்த ஆதாயத்தைத் தரும்.

அவரை, பாகற்காய், வெள்ளரி, பூசணி, பீர்க்கங்காய் முதலியன :

புதன்-வியாழன்-வெள்ளி-அஸ்வினி, பரணி, பூரம், விசாகம், ரோகிணி, மிருகசீர்ஷம், புனர்வசு, அஸ்தம், சித்திரை, சுவாதி, அனுஷம், பூராடம், உத்திராடம், திருவோணம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி ஆகியவைகள் நல்லவை.

துவரை, மொச்சை, பச்சைப்பயிறு, கடலைப் பருப்பு உளுந்து ஆகியவற்றிற்கு :

துவிதியை, திருதியை, பஞ்சமி, சப்தமி, தசமி, ஏகாதசி, திரயோதசி, பௌர்ணமி, புதன், வியாழன், வெள்ளி, ரோகிணி, மிருகசீர்ஷம், புனர்வசு, உத்திரம், சுவாதி, அனுஷம், மூலா, உத்திராடம், திருவோணம், அவிட்டம், உத்திரட்டாதி, ரேவதி-ரிஷபம், கடகம், சிம்மம், துலாம், விருச்சிகம், தனுசு, கும்பம் ஆகிய லக்னங்களிலும் விதை விதைக்க உத்தமம்.

பேரீட்சை, திராக்ஷை, சீதாப்பழம், எலந்தப்பழம் ஆகியவற்றிற்கு :

புதன், வியாழன், வெள்ளி, சுபதிதிகள், அஸ்வினி, மிருகசீர்ஷம், பூசம், அஸ்தம், அனுஷம், மூலா ஆகிய நட்சத்திரங்களில் நடுவது மிகுந்த நன்மைப்பயக்கும்.

கொய்யா, எலுமிச்சை, மாதுளம், சாத்துக்குடி, ஆரஞ்சு ஆகியவற்றிற்கு :

புதன், வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு, சுபதிதிகள், அஸ்வினி, பரணி, திருவாதிரை, புனர்வசு, ஆயில்யம், பூரம், உத்திரம், அஸ்தம், சித்திரை, சுவாதி, அனுஷம், பூராடம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்கள் சிறந்தவை.

கறிவேப்பிலை, பப்பாளி, முருங்கை :

ஆகியவற்றிற்கு துவிதியை, திருதியை, பஞ்சமி, சப்தமி, தசமி, ஏகாதசி, பௌர்ணமி ஆகிய திதிகள், மேஷம், ரிஷபம், கடகம், சிம்மம், துலாம், கும்பம், மீன லக்னங்கள், அஸ்வினி, மகம், மூலா, பரணி, பூரம், பூராடம், புனர்வசு, விசாகம், பூரட்டாதி, ஆயில்யம், கேட்டை, ரேவதி ஆகிய நட்சத்திரங்கள், திங்கள், புதன், வியாழன், வெள்ளி, ஆகியன மிகுந்த நன்மைப்பயக்கும்.

பசு கொட்டகையமைக்க :

துவிதியை, திருதியை, பஞ்சமி, தசமி, ஏகாதசி., திரயோதசி ஆகிய திதிகள், அஸ்வினி, மிருகசீர்ஷம், பூசம், அஸ்தம், மூலா, பூரட்டாதி, நட்சத்திரங்களும், திங்கள், புதன், வியாழன், வெள்ளி ஆகிய கிழமைகளும் கோசாலையமைக்க மிகவும் உத்தமம். வியாழக்கிழமை, பூசம் நட்சத்திரம், ரிஷப லக்னம், ரிஷப நவாம்ஸம் கூடிய சுபவேளையில் அமைத்தால் திருட்டுப்பயம் இன்றி க்ஷேமமாக இருக்கும். "வாயவ்யாம் பசு மந்திரம்" என்பர். வாயு(வடமேற்கு)வில் அமைக்க வேண்டும்.

பசுக்களை வாங்க :

ஞாயிறு, வியாழன், வெள்ளி – அஸ்வினி, மிருகசீர்ஷம், பூசம், பூரம், மூலா, ரேவதி ஆகியன நல்லவை.

பசுக்களை விற்க :

திங்கள், புதன், வியாழன் – அஸ்வினி, மிருகசீர்ஷம், ஆயில்யம், மகம், அஸ்தம், விசாகம், கேட்டை, பூராடம், அவிட்டம், பூரட்டாதி ஆகியன நல்லவை.

வியாபாரிகள் கவனத்திற்கு :

பொன்-வெள்ளி-ஆபரணம்-இரத்தினங்கள் :

துவிதியை, திருதியை, பஞ்சமி, சப்தமி, தசமி, ஏகாதசி, திதிகளில் அஸ்வினி, ரோகிணி, புனர்வசு, பூசம், உத்திரம், அஸ்தம், சுவாதி, சித்திரை, அனுஷம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம், உத்திரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்களில் திங்கள், புதன், வியாழன், வெள்ளி ஆகிய கிழமைகளில் செய்ய மிகுந்த ஆதாயமுண்டு.

ஆடை (ஜவுளி) ரெடிமேட் வகைகள் :

அஸ்வினி, ரோகிணி, புனர்வசு, உத்திரம், அஸ்தம், சித்திரை, சுவாதி, அனுஷம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம், உத்திரட்டாதி, ரேவதி-துவிதியை, திருதியை, பஞ்சமி, சப்தமி, ஏகாதசி, திரயோதசி-திங்கள், புதன், வியாழன், வெள்ளி.

மளிகை :

துவிதியை, திருதியை, பஞ்சமி, சப்தமி, தசமி ஆகிய திதிகளில், அஸ்வினி, ரோகிணி, மிருகசீர்ஷம், பூசம், அனுஷம், உத்திரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்களில் ஞாயிறு, திங்கள், புதன், வியாழன், வெள்ளி ஆகிய நாட்களில் துவக்க மிகுந்த லாபகரமாக இருக்கும்.

மின்சார சாதனங்கள், மின்னணு, கணினி :

துவிதியை, திருதியை, பஞ்சமி, சப்தமி, தசமி, பௌர்ணமி திதிகளில், செவ்வாய், புதன், வெள்ளி ஆகிய கிழமைகளில் ரோகிணி, மிருகசீர்ஷம், பூசம், அஸ்தம், அனுஷம், உத்திரட்டாதி ஆகிய நாட்களில் துவக்கநன்று.

இரும்பு-ஸ்டீல் :

துவிதியை, திருதியை, பஞ்சமி, சப்தமி, ஏகாதசி, திரயோதசி (வளர்பிறை சதுர்த்தசியும் ஏற்றது) சனி, திங்கள், புதன், அஸ்வினி, ரோகினி, மிருக சீர்ஷம், பூசம், அனுஷம், சுவாதி, உத்திரட்டாதி.

பேன்ஸி ஷாப் மற்றும் பிளாஸ்டிக் பொருட்கள் :

துவிதியை, திருதியை,பஞ்சமி, சப்தமி-திங்கள், புதன், வியாழன், வெள்ளிக்கிழமைகளில் ரோகிணி, மிருகசீர்ஷம், உத்திரம், சித்திரை, சுவாதி, அனுஷம். உத்திராடம், அவிட்டம் ஆகிய நட்சத்திரங்களில் செய்வது நல்லது.

புகைப்படம் - சினிமா மற்றும் அதன் விநியோகம் ஆகியவற்றிற்கு :

திங்கள், புதன், வியாழன், வெள்ளி – துவிதியை, திருதியை, பஞ்சமி, சப்தமி, தசமி, ஏகாதசி, திரியோதசி, பௌர்ணமி – அஸ்வினி, ரோகிணி, மிருகசீர்ஷம், புனர்வசு, பூசம், உத்திரம், சுவாதி, அனுஷம், உத்திரட்டாதி, ரேவதி-சப்தமி சுத்தி மற்றும் சுக்ரன் பலமாக இருத்தல் அவசியம்.

மலர் வியாபாரம் :

திங்கள், வியாழன், வெள்ளி-ரோகிணி, மிருகசீர்ஷம், பூசம், அஸ்தம், சித்திரை, சுவாதி, உத்திராடம், திருவோணம், சதயம், உத்திரட்டாதி-ரேவதி, சுபதிதிகள்.

உணவு விடுதி (ஹோட்டல்) :

துவிதியை, திருதியை, பஞ்சமி, சப்தமி, தசமி – திங்கள், புதன், வியாழன், வெள்ளி – அஸ்வினி, ரோகிணி, மிருகசீர்ஷம், புனர்வசு, பூசம், மகம், உத்திரம், அஸ்தம், சுவாதி, அனுஷம், மூலா, உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம், உத்திரட்டாதி, ரேவதி.

மருந்து வியாபாரம் :

துவிதியை, திருதியை, பஞ்சமி, சப்தமி, தசமி, ஏகாதசி, திரயோதசி, திங்கள், புதன், வியாழன், வெள்ளி, ரோகிணி, மிருகசீர்ஷம், புனர்வசு, பூசம், உத்திரம், அஸ்தம், சித்திரை, சுவாதி, பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி.

அடகு-வட்டி வியாபாரம் :

எட்டாமிடம் சுத்தமாக இருக்கும். லக்னம் தேர்ந்தெடுக்க வேண்டும். புனர்வசு, பூசம், சுவாதி, திருவோணம், அவிட்டம், சதயம்-மேஷம், கடகம், துலாம், மகரம், ஆகிய லக்னங்களில் ஐந்து - ஒன்பது ஆகிய இடங்களில் சுபக்கிரக சம்மந்தம் ஆகியன பணம் கொடுக்க நன்று. செவ்வாய்க்கிழமை, மாதப்பிறப்பு (ஸங்கரமணம்) அஸ்தம் நட்சத்திரத்துடன் கூடிய ஞாயிறு கடன் வாங்கக்கூடாது.

பழ வியாபாரம் :

துவிதியை, திருதியை, பஞ்சமி, சப்தமி, தசமி, ஏகாதசி, திரயோதசி, திங்கள், புதன், வியாழன், வெள்ளி, ரோகிணி, மிருகசீர்ஷம், புனர்வசு, பூசம், உத்திரம், அஸ்தம், சித்திரை, சுவாதி, பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி ஆகியன சிறந்தவை.

நாற்காலி, மேஜை, கட்டில் மற்றும் மரச்சாமான்கள் :

துவிதியை, திருதியை, பஞ்சமி, சப்தமி, தசமி, திங்கள், புதன், வியாழன், வெள்ளி, ரோகிணி, மிருகசீர்ஷம், பூசம், உத்திரம், அஸ்தம், சித்திரை, சுவாதி, அனுஷம், உத்திராடம், திருவோணம், சதயம், உத்திரட்டாதி, ரேவதி.

காகிதம், புஸ்தகம் - ஸ்டேஷனரி :

துவிதியை, திருதியை, பஞ்சமி, சப்தமி, தசமி, ஏகாதசி, திரயோதசி, திங்கள், புதன், வியாழன், வெள்ளி, ரோகிணி, மிருகசீர்ஷம், அஸ்தம், சித்திரை, சுவாதி, அனுஷம், உத்திராடம், திருவோணம், உத்திரட்டாதி, ரேவதி ஆகியன சிறந்தவை.

அரிசி ஆலை :

துவிதியை, திருதியை, பஞ்சமி, சப்தமி, தசமி, ஏகாதசி - திங்கள், புதன், வியாழன், வெள்ளி, அஸ்வினி, ரோகிணி, மிருகசீர்ஷம், புனர்வசு, பூசம், உத்திரம், சித்திரை, சுவாதி, அனுஷம், உத்திராடம், திருவோணம், உத்திரட்டாதி, ரேவதி, ஸ்திர லக்னங்களாகிய ரிஷபம், சிம்மம், விருச்சிகம், கும்பம், நான்கு - எட்டு சுத்தமாக இருத்தலவசியம்.

சிமெண்ட்ஸ் வியாபாரம் :

துவிதியை, திருதியை, பஞ்சமி, சப்தமி, தசமி, ஏகாதசி, - புதன், வியாழன், வெள்ளி, அஸ்வினி, ரோகிணி, மிருகசீர்ஷம், உத்திரம், சுவாதி, அனுஷம், உத்திராடம், திருவோணம், உத்திரட்டாதி, ரேவதி, ரிஷபம், மிதுனம், கடகம், துலாம், தனுசு, மீனம், ஏழில் பலம் வாய்ந்த சுபக்கிரகம் இருந்து லக்னத்தைப் பார்ப்பது மிகவும் சிறந்தது. மேலும் அவற்றுள் ஏழில் குரு இருந்து லக்னத்தைப் பார்த்திடின் பெருவாரியான ஆதாயத்தை ஈட்டித்தரும்.

தொலைக்காட்சிப் பெட்டி :

பஞ்சமி, சப்தமி, தசமி ஆகிய திதிகளில் - திங்கள், புதன், வியாழன், வெள்ளி ஆகிய கிழமைகளில் ரோகிணி, மிருகசீர்ஷம், அஸ்தம், சித்திரை, சுவாதி, அனுஷம், உத்திராடம், திருவோணம், உத்திரட்டாதி ஆகிய நட்சத்திரங்களில் வியாபாரம் துவக்க நன்று.

ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிள், கார் - லாரி, பஸ் :

துவிதியை, திருதியை, பஞ்சமி, சப்தமி, தசமி, துவாதசி, திரயோதசி - செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, அஸ்வினி, ரோகிணி, மிருகசீர்ஷம், புனர்வசு, பூசம், சுவாதி, அனுஷம், உத்திரட்டாதி, ரேவதி, ரிஷபம், சிம்மம், கும்பம், பலம் வாய்ந்த மேஷம், விருச்சிகம், துலாம் நான்காம் இடம் சுத்தமாகவும் அவ்வதிபதிகளுடன் சுக்கிரனும் நல்ல நிலையில் பலம் பெற்று இருத்தலவசியம்.

மயக்க மருந்துகள் :

செவ்வாய், சனி, ஞாயிறு ஆகிய கிழமைகளில் துவிதியை, திருதியை, பஞ்சமி, சப்தமி, ஏகாதசி, துவாதசி, திரயோதசி, பௌர்ணமி - பரணி, திருவாதிரை, ஆயில்யம், மகம், பூரம், கேட்டை, மூலா, பூராடம், உத்திரட்டாதி ஆகியன மயக்க மருந்து மதுபானத்திற்கு ஏற்றது.

வெற்றி தரும் முகூர்த்தங்கள்

பகல்

கிழமை						
ஞாயிறு	7½-9	10½-12	12-1½	1½-3		
திங்கள்	6-7½	10½-12		3-4½	4½-6	
செவ்வாய்	6-7½	12-1½	3-4½	4½-6		
புதன்	7½-9	9-10½	10½-12	1½-3	3-4½	4½-6
வியாழன்	6-7½	10½-12	3-4½	4½-6		
வெள்ளி	9-10½		3-4½	4½-6		
சனி	7½-9	12-1½	1½-3	3-4½	4½-6	

இரவு

கிழமை						
ஞாயிறு	6-7½	7½-9	1½-3			
திங்கள்	7-½9	10½-12	1½-3	4½-6		
செவ்வாய்	10½-12	1½-3	3-4½			
புதன்	7½-9	1½-3	3-4½			
வியாழன்	6-7½	10½-12	12-1½	1½-3	3-4½	
வெள்ளி	6-7½	7½-9	10½-12	12-1½	1½-3	3-4½
சனி	9-10½	10½-12	3-4½	4½-6		

குறிப்பு : சூரிய உதயமும், அஸ்தமனமும் - 6-00 மணியளவில் எனக்கொள்ளப்பட்டுள்ளது. உதயாஸ்தமனத்திற்கு ஏற்ப கூட்டியும் - குறைத்தும் மாற்றிக்கொள்ளவும்.

தூர்முகூர்த்தங்கள்

(தோல்வியைத் தரும் நேரம்)

ஞாயிறு	மாலை	04-24 முதல்	05-12 வரை
திங்கள்	பகல்	12-24 முதல்	01-12 வரை
	,,	02-46 வரை	03-34 வரை
செவ்வாய்	காலை	08-24 முதல்	09-12 வரை
	இரவு	10-46 முதல்	11-34 வரை
புதன்	காலை	11-36 முதல்	12-24 வரை
வியாழன்	பகல்	10-00 முதல்	10-48 வரை
	,,	02-48 முதல்	03-36 வரை
வெள்ளி	காலை	08-24 முதல்	09-12 வரை
	பகல்	12-24 முதல்	01-12 வரை
சனி	காலை	06-00 முதல்	07-36 வரை

ஸ்ரீ சுக்ராச்சாரியார் அருளிய அஷ்ட சித்தாந்த சாரம்

ஒவ்வொரு நாளுக்குரிய சுபாசுப பலன்கள்

நேரம் (ம.நி.)

முதல்	வரை	ஞாயிறு
06-00	6-24	லாபம்-காரிய சித்தி-ஆரோக்கியம்-சுகம்
06-24	6-48	திரவிய லாபம்-விவாகம்-சுபம்
06-48	7-12	கலகம்-தொழிலில் தடை-பயம்
07-12	7-36	பகைமை, நஷ்டம், அனாரோக்கியம், கடன்
07-36	8-00	கட்டுப்படல், சோர பயம், விஷ பயம்
08-00	8-24	பயம்-துக்கம்-பகைமை
08-24	8-48	சுபம்-முன்னேற்றம்-சுபகாரியசித்தி
08-48	9-12	லாபம்-சுகம்-பயணத்தில் வெற்றி
09-12	9-36	தனப்ராப்தி-க்ஷேமம், லாபம்-திருமண யோகம்
09-36	10-00	எண்ணம் ஈடேறுதல், பயணத்தில் லாபம், நண்பர்கள் வருகை
10-00	10-24	பயணத்தில் தோல்வி, காரியத்தடை
10-24	10-48	ஆரோக்கியம், சுகம், முன்னேற்றம்
10-48	11-12	ஆரோக்கியம்-வெற்றி-சுபகாரியத்திற்கு நல்லது
11-12	11-36	காரிய சித்தி-முயற்சியில் வெற்றி, பயணத்தில் சுபம்
11-36	12-00	விஷபயம், துன்பம், விவாதம்-துக்கம்
12-00	12-24	சுபம்-தொழிலில் வெற்றி-எண்ணம் ஈடேறும்
12-24	12-48	காரியத்தடை, பயம், கலகம்-காய்ச்சல்
12-48	01-12	வெற்றி-காரிய சித்தி-ராஜசன்மானம், க்ஷேமம்
01-12	01-36	இஷ்டசித்தி, பயணத்தில் லாபம்-பகைவர் அழிவு
01-36	02-00	கலகம்-காரிய நஷ்டம், பொருளழிவு-வேதனை
02-00	02-24	துக்கம்-பணநஷ்டம்-பயம்
02-24	02-48	காய்ச்சல் பயம், கலகம் பொருள் நஷ்டம்
02-48	03-12	தனலாபம், வெற்றி, சன்மானம் நண்பர்கள் சேர்க்கை
03-12	03-36	சத்ருபாதை, மரணம், கட்டுப்படல், சுபகாரிய நாசம்
03-36	04-00	பயம், கலகம், இடமாற்றம், பகைவர்கள் வலிமை பெறல்
04-00	04-24	வியாதி-வித்யா பங்கம், மரணம்
04-24	04-48	முன்னேற்றம், ஸ்திரி ஸம்போகம், தனலாபம்
04-48	05-12	வெற்றி-வாக்ஸித்தி, பிரயாணத்திற்கு நல்லது
05-12	05-36	இடையூறுகள், துக்கம், பிராயாணத்தில் நஷ்டம்
05-36	06-00	பூமி லாபம், தனலாபம், திருமண யோகம்

நேரம் (ம.நி.)

முதல்	வரை	திங்கள்
06-00	06-24	காரிய விக்னம், பிராண ஹானி, விவாதம், விஷபயம்
06-24	06-48	காரிய சித்தி, புகழ்ச்சி, பிரயாணத்தில் லாபம்
06-48	07-12	அலங்காரம், லாபம், வாகனம்-ஆபரண ப்ராப்த்தி
07-12	07-36	சுபம்-தனலாபம்-ஸ்திரி சௌக்கியம்
07-36	8-00	பூமி லாபம், வாகன சுகம், திருமணத்திற்கு சுபம்
08-00	8-24	துக்கம், இடமாற்றம், பொருள் நஷ்டம்
08-24	8-48	வெற்றி-காரிய சித்தி, தனலாபம், மந்திர சித்தி
08-48	9-12	வெற்றி-காரிய சித்தி, விவாகாரத்தில் வெற்றி, யக்ஞத்திற்கு சுபம்
09-12	9-36	உத்தியோகம், எண்ணங்கள் நிறைவேறுதல், ராஜசன்மானம்
09-36	10-00	சுகபோஜனம், வஸ்து வாகன-ஆபரண ப்ராப்தி
10-00	10-24	எண்ணிய காரியத்தில் வெற்றி ஸ்திரி லாபம், பயணத்திற்கு சுபம்
10-24	10-48	ராஜ தரிசனம், நட்பு காரியத்தில் வெற்றி
10-48	11-12	காரிய நாசனம், சத்ரு பீடை, விவாதம்
11-12	11-36	எல்லாவிதத்திலும் தடை, வியாதி, விவாதம், காரிய நஷ்டம்
11-36	12-00	காரிய சித்தி, சத்ரு ஜயம், பந்துபிரீதி, பணவரவு
12-00	12-24	எண்ணிய எண்ணம் ஈடேறும், எதிரி-திருடர் அழிவு
12-24	12-48	தனலாபம், சுகப்ராப்தி-பசுலாபம்
12-48	01-12	பிராயணத்தில் அநுகூலம், வெற்றி, நினைத்தது நடக்கும்
01-12	01-36	ஆரோக்கியம், பொருள்வரவு, வேறு ஊர் செல்லல், சுபம்
01-36	02-00	நட்பு, காரிய சித்தி, விருந்துண்ணல்
02-00	02-24	பிரயாணத்திற்கு சுபம், காரிய சித்தி, சுகம்
02-24	02-48	கருத்து வேற்றுமை, காரிய விக்னம்
02-48	03-12	காரிய சித்தி, லாபமடைதல், விவாதத்திற்கு சுபம்
03-12	03-36	திருமண காரிய வெற்றி, காரிய சித்தி, மகிழ்ச்சி
03-36	04-00	தனலாபம், வாழைப்பயிரிட சுபம், காரிய சித்தி
04-00	04-24	வித்யாலாபம், எண்ணம் நிறைவேறும் வெற்றி
04-24	04-48	ஸ்திரமான காரியங்களில் நஷ்டம்
04-48	05-12	ராஜ சன்மானம், வேலை முயற்சிகளில் வெற்றி
05-12	05-36	பயண விஷயங்களில் சுபம், எண்ணம் நிறைவேறும்
05-36	06-00	அலைச்சல், பயணத்தில் பொருளிழப்பு, தண்டனை

நேரம் (ம.நி.)

முதல்	வரை	செவ்வாய்
06-00	06-24	தனலாபம், காரிய சித்தி, புதுமுயற்சிகளில் வெற்றி
06-24	06-48	பயணத்திற்கு சுபம், சுகம், நல்வாழ்வு
06-48	07-12	கட்டுப்படல், பயம், நஷ்டம்-துக்கம்
07-12	07-36	பயம்-நோய்-இன்னல்கள்
07-36	8-00	வாகன ப்ராப்தி, நட்பு, காரிய லாபம்
08-00	08-24	பரோபகாரம், நட்பு, காரிய லாபம்
08-24	08-48	எண்ணங்கள் ஈடேறும், அலங்கார ப்ராப்தி - சுகம்
08-48	09-12	பயணத்தில் பொருளிழப்பு, பாம்பு, குதிரைகளினால் பயம்
09-12	09-36	பயணத்தில் நோய்வாய்ப்படல் - வீண்விவாதம் -நஷ்டம்
09-36	10-00	பயணத்தில் எதிரிகளின் தொல்லை-மகாபயம்
10-00	10-24	விவாகத்திற்கு சுபம் - ஸ்திரி சௌக்கியம். சுகம்
10-24	10-48	விவகாரத்தில் கெடுதி. விவாதம்-பகைமை-காரிய நஷ்டம்
10-48	11-12	பயணத்திற்கு ஏற்றது. மற்ற விஷயத்தில் சிலாக்கியமில்லை
11-12	11-36	மனசஞ்சலம், விலங்குகளினாலும் பூச்சிகளினாலும் பயம்
11-36	12-00	நெருப்பு-ஆயுதத்தினால் பயம் - பகைமை, கஷ்டம்
12-00	12-24	பயணத்தில் பொருளிழப்பு. நஷ்டம் வியாதி
12-24	12-48	எல்லா முயற்சிகளும் வெற்றியடையும். புத்திர லாபம்
12-48	01-12	காரிய சித்தி. திருமண முயற்சிக்கு ஏற்றது. புத்திர லாபம்
01-12	01-36	மற்றவர்களினால் தொல்லை. தோல்வி பயம்
01-36	02-00	பிராயணத்திற்கு ஏற்றது. ராஜ சன்மானம்
02-00	02-24	முயற்சிகளில் தோல்வி. தவிர்க்கவும்
02-24	02-48	துக்கம்-காரிய நஷ்டம், பிரயாணத்தில் துன்பம்
02-48	03-12	பிரயாணத்தில் பொருளிழப்பு. துன்பம்-தோல்வி
03-12	03-36	எடுத்த காரியத்தில் வெற்றி. பயணத்தால் லாபம்
03-36	04-00	செய்தொழிலுக்கு நஷ்டம். இடமாற்றம். பொருளிழப்பு
04-00	04-24	சுபகாரியத்திற்கு நல்லது. வெற்றி-சுகம்
04-24	04-48	எடுத்த காரியத்தில் வெற்றி. பயணத்தில் ஆதாயம்
04-48	05-12	எண்ணங்கள் நிறைவேறும். லாபம்-சுகம்
05-12	05-36	காரிய சித்தி-சுபகாரிய முயற்சியில் வெற்றி
05-36	06-00	ஸ்திரி லாபம்-சௌக்கியம். நட்பு வலுப்படும்

நேரம் (ம.நி.)

முதல்	வரை	புதன்
06-00	06-24	துர்வார்த்தை கேட்டல், பயணத்தில் நஷ்டம், பயம்
06-24	06-48	விவாதம்-காரிய நாசம், தனநஷ்டம், மனோவியாகூலம்
06-48	07-12	சுபகாரியத்திற்கு ஏற்றது காரிய சித்தி, தனலாபம்
07-12	07-36	எடுத்த காரியத்தில் வெற்றி, பயணத்தில் ஆதாயம்
07-36	08-00	காரிய நஷ்டம், ஆபத்து
08-00	08-24	காரிய நஷ்டம், மனஸ்தாபம், பயம்
08-24	08-48	மனசஞ்சலம், பயணத்திற்கு சுமாரானது
08-48	09-12	உபத்ரவம்-விஷபயம்
09-12	09-36	எடுத்த காரியத்தில் வெற்றி, தனலாபம், நன்மை
09-36	10-00	வெற்றி, முயற்சிகளுக்கு நன்மை-பிரயாணத்திற்கு ஆகாது
10-00	10-24	பிரயாணத்திற்கு சுபம், காரிய ஸித்தி, வெகுமதி
10-24	10-48	தன-தான்ய - சுகப்ராப்தி, பயணத்திற்கு சுபம், காரிய சித்தி
10-48	11-12	நட்பு, தனலாபம், உத்யோகத்திற்கு சுபம்
11-12	11-36	காரிய சித்தி, சுபம், வெகுமதி, லாபம்
11-36	12-00	பயணத்தில் ஆபத்து, ஆனால் எடுத்த முயற்சிகளில் வெற்றி
12-00	12-24	ஸ்திரி சௌக்யம், வஸ்த்ரலாபம், பெரியவர்களின் ஆதரவு
12-24	12-48	எடுத்த காரியத்தில் வெற்றி, மகிழ்ச்சி, லாபம்
12-48	01-12	எதிரிகள் அழிவர், வெற்றி-காரிய சித்தி, க்ஷேமம்-லாபம்
01-12	01-36	குறைந்த லாபம், வெற்றி, எண்ணாங்கள் நிறைவேறும், அமைதி
01-36	02-00	பயணத்தின் போது பயம், விவாதம், பெரிய ஆபத்து
02-00	02-24	பயணத்தில் காரிய சித்தி, பகைவர் அழிவு, எண்ணம் ஈடேறும்
02-24	02-48	ஸ்திரி சௌக்கியம், புத்திர லாபம் கேளிக்கை
02-48	03-12	உத்தியோகத்திற்கு சுபம், பயணத்தில் பெரியவர்கள் சந்திப்பு
03-12	03-36	பிரியமான உரையாடல், பயணத்தில் வெற்றி
03-36	04-00	விவகாரத்தில் வெற்றி, எண்ணிய காரியங்களில் வெற்றி
04-00	04-24	திருமண சம்பந்தமான பயணத்திற்கு ஏற்றது. சுபம்
04-24	04-48	எண்ணம் ஈடேறும், காரிய சித்தி, பயணத்திற்கு க்ஷேமம்
04-48	05-12	காரிய சித்தி, வெற்றி, எதிரிகள் அழிவர். இருந்தாலும் மனவேதனை
05-12	05-36	உறவினர் வருகை, பயணத்தில் பெரியவர்கள் சந்திப்பு
05-36	06-00	திருமணத்திற்கு, பயணத்திற்கு - நல்லதல்ல

நேரம் (ம.நி.)

முதல்	வரை	வியாழன்
06-00	06-24	பயணத்தில் தனலாபம், எண்ணங்கள் ஈடேறும்
06-24	06-48	எண்ணங்கள் நிறைவேறும், க்ஷேமம், லாபம், சுபகாரியத்திற்கு நல்லது
06-48	07-12	அனாரோக்கியம், சத்ருவிருத்தி, மன உளைச்சல், பயம்
07-12	07-36	முயற்சிகளில் வெற்றி, வாகனப்ராப்தி
07-36	08-00	கல்வி, திருமணம், விவசாய காரிய ஆரம்பத்திற்கு சுபம்
08-00	08-24	மனஸ்தாபம், சுகமின்மை, கவலை, தோல்வி
08-24	08-48	உத்தியோகக் காரியத்தில் சுபம், எண்ணிய காரியத்தில் அனுகூலம்
08-48	09-12	நட்பு, வெற்றி, லாபம், இறைத்தரிசனம்
09-12	09-36	பயணத்திற்கு நஷ்டம், பேச்சு வார்த்தைகளில் விவாதம் முற்றும்
09-36	10-00	வாகன லாபம், வெற்றி, மனோவிசாரம்-காரிய சித்தி
10-00	10-24	விவசாயம், வியாபாரத்திற்கு ஏற்றது. பயணத்திற்கு சுபம்
10-24	10-48	பயணத்தில் சத்ரு நாசம், சொந்த இடத்தில் க்ஷேமம்-லாபம்
10-48	11-12	திருமணத்திற்கு சுபம், தனலாபம், வெற்றி
11-12	11-36	வியாதி உபத்திரவ நிவாரணம், அபிஷேகத்திற்கு ஏற்றது
11-36	12-00	கலகம், மனச்சஞ்சலம், செயலில் இடைஞ்சல், நஷ்டம்
12-00	12-24	விவசாயத்திற்கும், பயணத்திற்கும் நஷ்டம், தொழிலில் இன்னல்
12-24	12-48	விவாதம், கோபம், வியாதி பயம்
12-48	01-12	பேச்சு வார்த்தைகளில் சுபம், வெற்றி, காரிய சித்தி, சுபம்
01-12	01-36	இடப்பெயற்சி, துக்கம், கட்டுப்படல், பயம்
01-36	02-00	விவாதத்தில் வெற்றி, திருடர் பயம், இன்னல்
02-00	02-24	விவசாயம், யக்ஞும், விவாகம் ஆகியவற்றில் விவாதம், கலகம்
02-24	02-48	விவாதத்தில் வெற்றி, எல்லாச் செயல்களுக்கும் சுபம்
02-48	03-12	திருமணத்தை முன்னிட்டுச் செய்யும் பயணத்தில் வெற்றி-சுபம்
03-12	03-36	மனசஞ்சலம், துக்கம், தைரியமின்மை, செய்யும் செயலில் தடை
03-36	04-00	உத்யோகத்தில் கட்டுப்படல், பயணத்தில் நஷ்டம்
04-00	04-24	பயணத்திற்கு க்ஷேமம், லாபம்-நட்பு
04-24	04-48	சுபகாரியங்கள், திருமணம், பயணம் ஆகியவற்றிற்குச் சுபம்
04-48	05-12	பயணத்தில் வீண் விவாதம், காரிய நஷ்டம்-இன்னல்
05-12	05-36	பயணத்தில் மனோபீதி, காய்ச்சல், கல்வி, பேச்சு வார்த்தைகளில் துன்பம்
05-36	06-00	எண்ணம் நிறைவேறுதல், காரிய சித்தி, சுபகாரியங்களில் வெற்றி, கல்வியில் அபிவிருத்தி

நேரம் (ம.நி.)

முதல்	வரை	வெள்ளி
06-00	06-24	பயணத்தில் பணவரவு ஸ்திரி ஸௌக்யம், காரிய சித்தி
06-24	06-48	காரியத்தடை, சத்ரு-வியாதி விருத்தி - பயம்
06-48	07-12	பயணம் சிறக்கும், காரிய சித்தி, வெற்றி-தனலாபம்
07-12	07-36	நட்பு, வெகுமதி, பெரியவர்களின் ஆதரவு-சுபம்
07-36	08-00	மனக்கஷ்டம், தோல்வி, கலகம், பயம்
08-00	08-24	கிணறு தோண்ட ஏற்றது சுபம், பயணத்தில் காரிய சித்தி
08-24	08-48	பயணத்தில் மனத்துயரம், வியாதி-துக்கம்-பயம்
08-48	09-12	தலைமை ஏற்றல், தைர்யம், பயணத்தில் நட்பு
09-12	09-36	எண்ணிய காரியத்தில் தடை, துன்பம் - பயம்
09-36	10-00	பணவரவு, சுகம், தனதான்ய விருத்தி, லாபம்
10-00	10-24	நட்பு, சுகசௌக்யம், அறம் வெல்லும் நியாயத்திற்கு வெற்றி
10-24	10-48	பயணத்திற்கு சுபம், வஸ்து, வாகன, ஆபரண ப்ராப்தி
10-48	11-12	கல்வி அபிவிருத்தி, மகிழ்ச்சி, பயணத்திற்கு க்ஷேமம் லாபம்
11-12	11-36	எண்ணிய காரிய சித்தி, எண்ணங்கள் நிறைவேறும், வெற்றி
11-36	12-00	கட்டுப்படல், மரணம், ஆயுத பயம், வாகன பீதி
12-00	12-24	பகைவர் அழிவு, சுகம், புத்தாடைச் சேர்க்கை-சுபம்
12-24	12-48	எடுத்த காரியங்களில் தோல்வி - அதிக பலம்
12-48	01-12	வித்தியாரம்பத்திற்கு சுபம், காரிய ஆரம்பத்திற்குச் சுபம்
01-12	01-36	மனோபீதி, சுகமின்மை, பயணத்தில் வியாதி பயம்
01-36	02-00	தனதான்யங்களுக்குக் கெடுதி, துக்கம், மனோபீதி
02-00	02-24	வாகனப் பிராப்த்தி, பயணத்தில் வெற்றி
02-24	02-48	ஸ்தீரி சௌக்யம், விவாதத்தில் சமரஸம் காணலாம்
02-48	03-12	பிரயாணத்தில் துக்கம், காய்ச்சல்-பயம்
03-12	03-36	விஷ ஆயுதத்தால் பயம், தோல்வி, துக்கம்
03-36	04-00	மனோபீதி, நஷ்டம், பயணத்தில் கட்டுப்படல்
04-00	04-24	உத்தியோகக் காரியத்தில் தோல்வி, விலங்கு-சத்ரு பயம்
04-24	04-48	காரியத்தடை, கட்டுப்படல், அதிக பயம்
04-48	05-12	பயணத்தில் சுகம்-லாபம், வெற்றி-காரிய சித்தி
05-12	05-36	தோல்வி மனோவியாகூலம், முயற்சிகளில் நஷ்டம்
05-36	06-00	வாகன பிராப்தி, வெகுமதி, காரியசித்தி

நேரம் (ம.நி.)

முதல்	வரை	சனி
06-00	06-24	பயணத்தில் காரிய நஷ்டம், பயம்
06-24	06-48	எல்லாவற்றிலும் பயம், வெகுமதி, சௌக்யம்
06-48	07-12	எடுத்த காரியமனைத்திலும் தோல்வி, கலகம்
07-12	07-36	நட்பு, தனலாபம், பயணத்திற்கு சுபம்
07-36	08-00	பயணத்திற்கு - சுபகாரியங்களுக்கு வெற்றி, எண்ணங்கள் நிறைவேறும்
08-00	08-24	வாகன பிராப்தி, வாகன லாபம்
08-24	08-48	எண்ணங்கள் நிறைவேறும். பயணத்தில் காரிய சித்தி
08-48	09-12	பயணத்தில் காரிய சித்தி, வெகுமதி
09-12	09-36	எடுத்த காரியங்கள் அனைத்திலும் தோல்வி
09-36	10-00	கொடிய யோகம், பயணத்தில் உயிராபத்து
10-00	10-24	ஸ்தீரி சௌக்யம், அலங்கார ப்ராப்த்தி-வஸ்த்திர லாபம்
10-24	10-48	மனச்சஞ்சலம், நஷ்டம், துக்கம்-கவலை
10-48	11-12	பயணத்தில் பகைமை ஏற்படும். உபத்திரவம்
11-12	11-36	எடுத்த காரியங்கள் நிறைவேறும், நட்பு
11-36	12-00	முயற்சியில் வெற்றி, ஸ்திரி சௌக்கியம், நட்பு
12-00	12-24	பயணத்தில் வெற்றி, பொருள் வரவு வெற்றி
12-24	12-48	பயணத்தில் வெற்றி, சுபகாரியங்களுக்கு சுபமான வேளை
12-48	01-12	பயணத்தில் நஷ்டம், பொருளிழப்பு, பயம்
01-12	01-36	பிரயாணத்தில் காரிய சித்தி-க்ஷேமம்
01-36	02-00	பிரயாணத்தில் காரிய சித்தி - நானாயோகம்
02-00	02-24	எடுத்த காரியத்தில் வெற்றி, ஞானவிருத்தி வெற்றி ஏற்படும்
02-24	02-48	கல்வி அபிவிருத்தி மகிழ்ச்சி, எண்ணங்கள் நிறைவேறும். வெற்றி
02-48	03-12	பேச்சு வார்த்தைகளில் விவாதம் முற்றும். பயம்
03-12	03-36	செய்யும் தொழிலில் தோல்வி. பயணத்தில் வியாதி பயம்
03-36	04-00	முயற்சிகளில் வெற்றி, ஆயுராரோக்கிய அபிவிருத்தி
04-00	04-24	மனச் சஞ்சலம், மனஸ்தாபம், பயம், இன்னல்கள்
04-24	04-48	சத்ருநாசனம், அன்பான பேச்சுவார்த்தை, லாபம்
04-48	05-12	சுபம், காரிய சித்தி எதிரிகளின் அழிவு, அமைதி
05-12	05-36	பயணத்தில் லாபம், சுகம், எதிர்ப்பார்த்தது நிறைவேறும்
05-36	06-00	பிரியமான பேச்சு வார்த்தைகள், வெகுமதி, வெற்றி.

சுபம்.

குறிப்பு : வாரத்தில் ஒவ்வொரு நாட்களிலும் ஒவ்வொரு நாழிகையும் சுபம். அல்லது அசுப பலனைக் கொடுக்கக்கூடியதாக உள்ளன. இவற்றையறிந்து செயல்பட்டால் வெற்றியும், நன்மையும் சுகமுமுண்டு. இங்குக் கொடுத்துள்ள நேரத்தைச் சூரிய உதயத்திற்குத் தக்கவாறு கூட்டியும் கழித்தும் பலன் காண்க.

மேல்நோக்கு நாள் : ரோகிணி, திருவாதிரை, பூசம், உத்திரம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம், உத்திரட்டாதி ஆகியன. இவற்றில் நெல், ராகி, தென்னை, வாழை, மா, கரும்புப் பயிரிட, மேல்மாடி, மதில் கட்ட உத்தமம்.

கீழ்நோக்கு நாள் : பரணி, கிருத்திகை, ஆயில்யம், மகம், பூரம், விசாகம், மூலம், பூராடம், பூரட்டாதி இவைகளில் குழாய்க் கிணறு அமைக்க, மணிலா, இஞ்சி, மஞ்சள் போன்ற கிழங்கு வகைகள் பயிரிட, வேருக்குரிய செடி கொடிகள் உண்டாக்கவும் உத்தமம்.

சமநோக்கு நாள் : அஸ்வினி, மிருக சீர்ஷம், புனர்பூசம், ஹஸ்தம், சித்திரை, சுவாதி, அனுஷம், கேட்டை, ரேவதி இவைகளில் வாகனம், நாற்கால் பிராணிகள் வாங்க, உழவு செய்ய வாசற்கால் வைக்க ஸ்லாப் போட உத்தமம்.

வெள்ளி (சுக்ரன்) எதிரில் இருப்பது :

சுக்ரன் எதிரிலிருந்தால் கர்ப்பிணி பெண்களும், குழந்தைப் பெற்ற பின் கைக்குழந்தையுடனும், அத்திக்கில் பயணம் செய்யக்கூடாது. புதுமணமகள் அவ்வாறு பயணித்தால் மலடியாவாள். குழந்தையுடன் செல்லும் போது தாய் குழந்தை இருவருக்கும் கெடுதி. அதாவது சுக்ரன் மேற்கிலிருக்கும் போது கிழக்கு மற்றும் வடக்கிலும், சுக்ரன் கிழக்கிலிருக்கும் போது தெற்கு மற்றும் மேற்கிலும் பயணம் செய்யலாம். எனினும்,

ஏகக் கிராமே புரே வாபி துர்பிக்ஷே ராஷ்ட்ர விப்லவே

விவாஹே த்தீர்த்தயாத்ராயாம் ப்ரதி சுக்ரோண துஸ்யதி

ஒரே கிராமத்திற்குள்ளும், நகரத்திற்குள்ளும், விளைச்சலில்லாது வறட்சி ஏற்பட்ட போதும், அரசியல் கலகம், கொந்தளிப்பு ஏற்பட்ட போதும், திருமண சம்பந்தமான பிரயாணத்தின் போதும், புனித நீராடல் மற்றும் புண்ணிய க்ஷேத்திர தரிசனத்திற்குச் செல்லும் போதும் சுக்ரன் எதிரிலிருப்பது தோஷமில்லை என்பது ரிஷிகளின் வாக்கு.

ஆடி ஐந்தாம் தேதி பலன் : புதனாகில் அவ்வருஷம் ஒரு போகம் விளையும். வியாழனாகில் இரு போகம். செவ்வாயாகில் – கதிர் சாவி, வெள்ளியாகில் – நல்ல மழை, சனி–ஞாயிறு ஆகில் பயிர்களுக்கு விஷப் பூச்சிகளினால் அழிவு ஏற்படும் என்பர்.

சகுனம் : கருடன், வலியன், காட்டுக்காடை, கழுகு, ஆந்தை, உடும்பு, கீரி, குரங்கு இவைகள் வலமிருந்து இடமாகப் போவது நல்லது. நாரை, காக்கை, செம்போத்து, கிளி, கொக்கு, மயில், கோழி, ஓணான், புள்ளி மான், புலி, நரி இவைகள் இடமிருந்து வலமாகப் போவது நல்லது. பாம்பு, பூனை, முயல் குறிக்கிடலாகாது.

சுபசகுனம் : குடை, கொடி, கரும்பு, அக்ஷதை, தயிர்குடம், கள், மாமிசம், தேன், பொரி, எருது, யானை, குதிரை, நரி, பசுக்கள், பட்சிகளின் கூட்டம், சலவை உடைகள், மங்கள இசை, வாத்தியம், மலர்கள், மணக்கோலம், சுபவரிசை, தாசி, சுமங்கலி, கன்னி, நிறைகுடம், பழங்கள், செந்தணல், இரட்டைப் பிராமணர், சாதம், முத்து, பால், மூஞ்சூரின் ஒலி, வேத கோஷம், கழுதை–குதிரை கனைதல், நாய் உதறல், ஆந்தை கிளை கூட்டல் ஆகியன சுபமாகும்.

ரி	பகல் இரவு	சுகம் ரோக	சோர லாப	உத்தி தனம்	விஷம் சுகம்	அமிர் சோர	சோக உத்தி	லாப விஷம்
	பகல் இரவு	சோர லாப	உத்தி தனம்	விஷம் சுகம்	அமிர் சோர	சோக உத்தி	லாப விஷம்	தனம் அமிர்

நவக்கிரகங்களை வழிபட உகந்த இடங்கள்

1. சூரியன்	–	சூரியனார் கோவில்
2. சந்திரன்	–	திங்களூர்
3. செவ்வாய்	–	வைத்தீஸ்வரன் கோவில்
4. புதன்	–	திருவெண்காடு
5. குரு	–	ஆலங்குடி
6. சுக்ரன்	–	கஞ்சனூர்
7. சனி	–	திருநள்ளாறு
8. இராகு	–	திருநாகேஸ்வரம்
9. கேது	–	கீழப்பெரும்பள்ளம்

நவக்கிரகங்களுக்குரிய ஸ்தோத்திரங்கள்

சூரியன் :

ஜபாகுஸும ஸங்காசம், காஸ்யபேயம் மஹத்யுதிம் |
தமோரிம் ஸர்வ பாபக்னம் ப்ரணதோஸ்மி திவாகரம் ||
ஓம் அஸ்வத் வஜாய வித்மஹே பாஸ ஹஸ்தாய தீமஹி |
தந்நஸ்ஸூர்ய : ப்ரசோதயாத் ||
சீலமாய் வாழ சீரருள் புரியும்
ஞாலம் புகழும் ஞாயிறே போற்றி
சூரியா போற்றி சுந்தரா போற்றி
வீரியா போற்றி–வினைகள் களைவாய்

சந்த்ரன் :

ததிசங்க துஷாராபம் க்ஷீரோதார்ணவ ஸம்பவம் |
நமாமமி ஸஸினம் ஸோமம், சம்போர் மகுட பூஷணம் ||
ஓம் பத்மத்வஜாய வித்மஹே ஹேமரூபாய தீமஹி |
தந்நோ ஸோம: ப்ரசோத யாத் ||
எங்கள் குறைகள் எல்லாம் தீர்க்கும்
திங்களே போற்றி திருவருள் தருவாய்
சந்திரா போற்றி சத்குரு போற்றி
சங்கடந் தீர்ப்பாய் சதுரா போற்றி

செவ்வாய் :

தரணீகர்ப ஸம்பூதம் வித்யுத் காந்தி ஸமப்ரபம் |
குமாரம் சக்தி ஹஸ்தம் தம் மங்களம் ப்ரணமாம்யஹம் ||
ஓம் வீரத் த்வஜாய வித்மஹே விக்ன ஹஸ்தாய தீமஹி |
தந்நோ பௌம ப்ரசோதயாத் ||
சிறப்புறு மணியே செவ்வாய்த் தேவே
குறையிலா தருள்வாய் குணமுடன் வாழ
மங்கள செவ்வாய் மலரடிப் போற்றி
அங்காரகனே அவதிகள் நீக்கு ||

புதன் :

ப்ரியங்கு களிகா ஸ்யாமம் ரூபேண ப்ரதிமம் புதம் |
ஸௌம்யம் ஸௌம்ய குணோபேதம் தம் புதம் ப்ரணமாம்யஹம் ||
ஓம் கஜத்வஜாய வித்மஹே சுகஹஸ்தாயதீமஹி |
தந்நோ புத: ப்ரசோதயாத் ||
இதமுற வாழ இன்னல்கள் நீக்கு
புதபகவானே பொன்னடிப் போற்றி
பதந் தந்தாள்வாய் பண்ணொலியானே
உதவியே யருளும் உத்தமா போற்றி

குரு :

தேவானாம்ச ருஷீநாம்ச குரும் காஞ்சன ஸன்னிபம் |
புத்திபூதம் த்ரிலோகேசம் தம் நமாமமி ப்ருஹஸ் பதிம் ||
ஓம் வ்ருஷபத்வஜாய வித்மஹே க்ருணி ஹஸ்தாய தீமஹி |
தந்தோ குரு : ப்ரசோதயாத் ||
குணமிகு வியாழக் குரு பகவானே
மனமுடன் வாழ மகிழ்வுடனருள்வாய்
ப்ருகஸ்பதி வியாழப் பாதகுரு நேசா
க்ரக தோஷமின்றி கடாக்ஷித் தருள்வாய்

சுக்ரன் :

ஹிமகுந்த ம்ருணாளாபம் தைத்யானாம் பரமம் குரும் |
ஸர்வ சாஸ்த்ர ப்ரவக்தாரம் பார்கவும் ப்ரணமாம் யஹம் ||
ஓம் அஸ்வத்வஜாய வித்மஹே தனுர்ஹஸ்தாய தீமஹி |
தந்நோ சுக்ர : ப்ரசோதயாத் ||
சுக்கிரமூர்த்தி சுபமிகு யீவாய்
வக்கிரமின்றி வரமிகத் தருவாய்
வெள்ளிச் சுக்ர வித்தக வேந்தே
அள்ளிக் கொடுப்பாய் அடியார்க்கு அருளே

சனி :

நீலாஞ்ஜன ஸமாபாஸம் ரவிபுத்ரம் யமாக்ரஜம் |
ச்சாயா மார்த்தாண்ட ஸம்பூதம் தம் நமாமி சனைஸ்வரம் ||
ஓம் காகத்வஜாய வித்மஹே கட்க ஹஸ்தாய தீமஹி |
தந்நோ மந்த: ப்ரசோதயாத் ||
சங்கடம் தீர்க்கும் சனி பகவானே
மங்களம் பொங்க மனம் வைத்தருள்வாய்
சச்சரவின்றி சாகா நெறியில்
இச்சகம் வாழ இன்னருள் தாதா

இராகு :

அர்த்த காயம் மஹாவீரம் சந்த்ராதித்ய விமர்தனம் |
ஸிம்ஹிகா கர்ப்ப ஸம்பூதம் தம் ராஹூம் ப்ரணமாம் யஹம் ||
ஓம் நாகத் த்வஜாய வித்மஹே பத்ம ஹஸ்தாய தீமஹி |
தந்தோ ராஹூ : ப்ரசோதயாத் ||
அரவெனும் ராகு அய்யனே போற்றி
கரவா தருள்வாய் கஷ்டங்கள் நீக்கி
ஆக வருள்புரி அனைத்திலும் வெற்றி
ராகுக் கனியே ரம்மியா போற்றி

கேது :

பலாச புஷ்ப ஸம்காசம் தாரகாக்ரஹ மஸ்தகம்
ரௌத்ரம் ரௌத்ராத்மகம் கோரம் தம் கேதும் ப்ரணமாம்யஹம்
ஓம் அஸ்வத் த்வஜாய வித்மஹே சூல ஹஸ்த்தாய தீமஹி
தந்நோ கேது: ப்ரசோதயாத்
கேதுத் தேவே கீர்த்தித் திருவே
பாதம் போற்றி பாவம் தீர்ப்பாய்
வாதம் வம்பு வழக்குகளின்றி
கேதுத் தேவே கேண்மையாய் ரக்ஷி

வாஸ்து விஷயங்கள் :

யுத்தம், வர்த்தகம், க்ருஹம் (வீடு) புரம் (கிராமம் அல்லது நகரம்) கிராமத்தில் கட்டப்படும் கோவில் இவைகளுக்கு ஆர்ணவம் (பொருத்தம்) பார்க்கும் போது நாம நட்சத்திரமே எடுத்துக்கொள்ள வேண்டும். மேலும் முப்பது வயதிற்கு மேற்படின் நாம நட்சத்திரம் தான் பார்க்க வேண்டுமென தெய்வக்ஞசிகாமணி கூறுகிறது.

க்ராமார்ணவ நராகார சக்ரம் :

முதல்	5	நட்சத்திரங்கள்	-	தனலாபம்	அடுத்த	4	நட்சத்திரங்கள்	-	சுபம்
அடுத்த	3	நட்சத்திரங்கள்	-	தனநாசம்	அடுத்த	2	நட்சத்திரங்கள்	-	மரணம்
அடுத்த	5	நட்சத்திரங்கள்	-	தனதான்ய லாபம்	அடுத்த	1	நட்சத்திரங்கள்	-	லாபம்
அடுத்த	6	நட்சத்திரங்கள்	-	தரித்ரம்	அடுத்த	1	நட்சத்திரங்கள்	-	அசுபம்
அடுத்த	1	நட்சத்திரங்கள்	-	சரீரநாசம்					(கெடுதி)

உதாரணம் :

திருமதி. ராஜேஸ்வரி - திருச்சானூரில் வீடுகட்ட விரும்புகிறார் எனக் கொள்ளுவோம். ராஜேஸ்வரி என்ற பெயருக்கு நாம நட்சத்திரம் (ரா) சித்திரையாகும். திருச்சானூர் என்பதற்கு நாம நட்சத்திரம் (தி) விசாகமாகும். சித்திரையிலிருந்து விசாகத்திற்கு எண்ண 3 வருகிறது. இந்த விசாகம் (மூன்றாவது நட்சத்திரம்) முதல் ஐந்து நட்சத்திரங்களுக்குள் வருவதால் - இது தனலாபம் என்பதைக் குறிக்கிறது. எனவே இவர் திருச்சானூரில் வீடு கட்டி வசிக்கலாம்.

திரு. ஸ்வாமிநாதன் என்பவருக்குத் திருச்சானூர் பொருந்துமா எனக் கேட்கப்படுகிறது எனக் கொள்ளலாம். ஸ்வாமிநாதன் என்பதற்கு (ஸ்) வா எடுத்துக் கொள்ள வேண்டும். வா என்னும் பெயருக்கு ரோகிணியாகும். திருச்சானூர் விசாகமாகும். ரோகிணியிலிருந்து விசாகம் 13/வது நட்சத்திரம் இந்த 13 என்னும் எண் மூன்றாவது வரிசையில் (5+3+5) வருவதால் அது தனதான்ய லாபத்தைக் கொடுக்கும் என்பதால், அவருக்கு திருச்சானூர் பொருந்தும் எனலாம்.



வீடு கட்டுபவரின் நாம நட்சத்திர இராசியானது வீடு கட்ட நிர்ணயித்துள்ள திக்குக்குரிய இராசிக்கு 1-5-9 ஆக இருப்பின் உறவினர்களைப் போஷிப்பார். அந்த இராசியானது 3-7-11 ஆகில் அந்த இடமானது கட்டியவனை (கர்த்தாவை)ப் போஷிக்கும். 2-6-10-வது இராசியில் துக்கமுண்டாகும். 4-8-12-ஆவது இராசியில் நாசமாகும். விருத்தியில்லை.

- தெய்வக்ஞ சிகாமணி

வீட்டிற்கு நீள அகல அடி அளவின் பலன் அறிய

அடி		அடி		அடி	
6	நன்மை	38	பிசாசு குடியிருக்கும்	70	அன்னியருக்குப்பலன்
7	தரித்திரம்	39	இன்பம் சுகம்	71	பிரியம்
8	மிகுந்த பாக்கியமுண்டு	40	சலிப்பு அதிகம்	72	வெகுபாக்கியம்
9	மிக்க பீடை	41	இன்பம் செல்வம்	73	குதிரைகட்டி வாழ்வான்
10	ஆடுமாடு குறையற்ற வாழ்வு	42	லக்ஷ்மி வாசம்	74	பிரபல விருத்தி
11	பால் சாதமுண்டு	43	தீங்குண்டாகும்	75	சுகமுண்டு
12	செல்வம் அழியும்	44	கண் போகும்	76	புத்ர அற்பம்
13	பகைமை வளரும்	45	சற்புத்திரர் உண்டு	77	யானை கட்டி வாழ்வான்
14	சஞ்சலம்-மனக்கஷ்டம்	46	வீட்டை விட்டு ஓட்டும்	78	புத்ர அற்பம்
15	காரிய விக்னம்	47	வறுமை	79	கன்றுகாலி விருத்தி
16	மிகுந்த செல்வம்	48	வீடு தீப்பற்றும்	80	லக்ஷ்மி வாசம்
17	அரச வாழ்வு	49	மூதேவிவாசம்	81	இடி விழும்
18	மனை பாழாகும்	50	பால் பாக்கியம்	82	கர்த்தரிரோஷம்
19	மனைவி-மக்கள் மரணம்	51	வழக்கு வியாஜ்ஜியம்	83	மரண பயம்
20	இராஜயோகம்	52	தான்ய விருத்தி	84	சௌக்கியம்
21	பசு விருத்தி	53	வீண் செலவு	85	ஸ்ரீ மானாவான்
22	மகிழ்ச்சி	54	லாபம்	86	இம்சை அதிகம்
23	நோய் அதிகமாகும்	55	பந்து விரோதம்	87	தண்டிகையுண்டு
24	வயது குன்றும்	56	புத்திர உற்பத்தி	88	சௌக்கியம்
25	தெய்வ அருள் இல்லை	57	புத்திரர் அற்பம்	89	பலவீடுகட்டுவான்
26	இந்திர வாழ்வு	58	விரோதம் வளரும்	90	யோகபாக்கியமுண்டு
27	செல்வம் பெருகும்	59	சுபதரிசனம்	91	வித்துவாம்சமுண்டு
28	செல்வம்-தெய்வ கடாக்ஷம்	60	பொருள் விருத்தி	92	ஐஸ்வர்யம்
29	பால்பாக்கியம்-செல்வமுண்டு	61	பகையுண்டு	93	தேசாந்திரம் வாழ்வான்
30	லக்ஷிமி கடாக்ஷமுண்டு	62	வறுமையுண்டாகும்	94	அன்னியதேசம் போவான்
31	சிவகாக்ஷம் நன்மை	63	இருப்பு குலையும்	95	தனவானாவான்
32	முகுந்தனருள் உண்டு	64	வெகு சம்பத்து	96	வேறு பிரதேசம் செல்வான்
33	நன்மை	65	ஸ்திரி நாசம்	97	கப்பல் வியாபாரம் செய்வான்
34	குடிவிட்டோட்டும்	66	புத்திரபாக்யம்	98	வேறுநாட்டிற்குச் செல்வான்
35	லக்ஷ்மி கடாக்ஷம்	67	பயமுண்டாகும்	99	இராஜ்ஜியம் ஆள்வான்
36	அரச வாழ்வு	68	திரவிய லாபம்	100	க்ஷேமத்துடன் வாழ்வான்
37	இன்பம்-இலாபம்	69	அக்னி உபாதை		

குறிப்பு: மனைவி கர்ப்பிணியாக இருக்கும் போதும் - திங்கட்கிழமையன்று கடக இராசியில் சந்திரன் இருக்கும் போதும் கிரகப்பிரவேசம் செய்யக்கூடாது. ஆனி, புரட்டாசி, மார்கழி மற்றும் பங்குனி மாதங்களில் வீடு கட்ட ஆரம்பிக்கலாகாது. குரு சுக்ரமௌட்ய காலங்களும் பயன்படாது. வீட்டின் நீளம் அகலத்தை விட ஒண்ணரை மடங்கு அதிகமாக இருந்தால் மிகுந்த நன்மையை உண்டாக்கும்.

எல்லோருக்கும் புரியும்படியாக இப்பஞ்சாங்கம் மணி–நிமிடத்தில் கணிக்கப்பட்டுள்ளது.

எனினும் ஒரு சிலர் நாழிகை / வினாடியில் திதி –நட்சத்திரம் பிரமாணத்தை அறிய விரும்பினால்,

மணி நிமிடங்களை – நாழிகை வினாடியாக மாற்றிக்கொள்ள உதவும் பட்டியல்

ம	நி	நா	வி	ம	நி	நா	வி	ம	நி	நா	வி
0	1	0	2½	5	12	13	00	16	00	40	00
0	2	0	5	5	36	14	00	6	24	41	00
0	3	0	7½	6	00	15	00	16	48	42	00
0	4	0	10	6	24	16	00	17	12	43	00
0	5	0	12½	6	48	17	00	17	36	44	00
0	6	0	15	7	12	18	00	18	00	45	00
0	7	0	17½	7	36	19	00	18	24	46	00
0	8	0	20	8	00	20	00	18	48	47	00
0	9	0	22½	8	24	21	00	19	12	48	00
0	10	0	25	8	48	22	00	19	36	49	00
0	12	0	30	9	12	23	00	20	00	50	00
0	14	0	35	9	36	24	00	20	24	51	00
0	16	0	40	10	00	25	00	20	48	52	00
0	18	0	45	10	24	26	00	21	12	53	00
0	20	0	50	10	48	27	00	21	36	54	00
0	22	0	55	11	12	28	00	22	00	55	00
0	24	1	00	11	36	29	00	22	24	56	00
0	48	2	00	12	00	30	00	22	48	57	00
1	12	3	00	12	24	31	00	23	12	58	00
1	36	4	00	12	48	32	00	23	36	59	00
2	00	5	00	13	12	33	00	24	00	60	00
2	24	6	00	13	36	34	00				
2	48	7	00	14	00	35	00				
3	36	9	00	14	24	36	00				
4	00	10	00	14	48	37	00				
4	24	11	00	15	12	38	00				
4	48	12	00	15	36	39	00				



சூரிய உதயஸ்தமன - சுதேச நேரங்கள் (வடக்கு அக்ஷாம்ஸத்திற்குரியது)

ஆங். மாதம்	தேதி	7 பாகை				9 பாகை				11 பாகை				13 பாகை				15 பாகை			
		உதயம்		அஸ்தமனம்		உதயம்		அஸ்தமனம்		உதயம்		அஸ்தமனம்		உதயம்		அஸ்தமனம்		உதயம்		அஸ்தமனம்	
		ம	நி	ம	நி	ம	நி	ம	நி	ம	நி	ம	நி	ம	நி	ம	நி	ம	நி	ம	நி
ஏப்ரல்	14	5	56	6	05	5	55	6	06	5	53	6	08	5	52	6	09	5	50	6	10
,,	22	5	53	6	05	5	51	6	06	5	49	6	08	5	48	6	10	5	46	6	12
,,	30	5	50	6	05	5	48	6	07	5	46	6	09	5	44	6	11	5	42	6	13
மே	8	5	48	6	05	5	46	6	08	5	43	6	10	5	41	6	13	5	38	6	15
,,	16	5	47	6	06	5	44	6	09	5	41	6	12	5	38	6	15	5	35	6	18
,,	24	5	46	6	07	5	43	6	10	5	40	6	14	5	37	6	17	5	34	6	20
ஜூன்	1	5	46	6	09	5	43	6	12	5	40	6	16	5	36	6	19	5	33	6	23
,,	9	5	47	6	11	5	45	6	14	5	40	6	18	5	37	6	21	5	33	6	25
,,	17	5	49	6	13	5	45	6	16	5	41	6	20	5	38	6	23	5	34	6	27
,,	25	5	50	6	15	5	47	6	18	5	43	6	22	5	40	6	25	5	36	6	29
ஜூலை	3	5	52	6	16	5	49	6	19	5	45	6	23	5	42	6	26	5	38	6	30
,,	11	5	54	6	17	5	51	6	20	5	47	6	23	5	44	6	27	5	40	6	30
,,	19	5	56	6	17	5	52	6	20	5	49	6	23	5	46	6	26	5	43	6	30
,,	27	5	57	6	16	5	54	6	19	5	51	6	22	5	48	6	25	5	45	6	28
ஆகஸ்ட்	4	5	57	6	15	5	55	6	17	5	52	6	20	5	49	6	22	5	47	6	25
,,	12	5	57	6	13	5	55	6	15	5	53	6	17	5	51	6	19	5	49	6	21
,,	20	5	57	6	10	5	55	6	11	5	54	6	13	5	52	6	15	5	50	6	17
,,	28	5	56	6	06	5	55	6	07	5	54	6	09	5	52	6	10	5	51	6	12
செப்டம்பர்	5	5	55	6	02	5	54	6	03	5	54	6	04	5	52	6	05	5	51	6	06
,,	13	5	54	5	57	5	54	5	58	5	53	5	59	5	52	5	59	5	52	6	00
,,	21	5	53	5	54	5	53	5	54	5	53	5	54	5	52	5	54	5	52	5	54
,,	29	5	52	5	49	5	52	5	49	5	52	5	49	5	53	5	48	5	53	5	48
அக்டோபர்	7	5	51	5	45	5	51	5	44	5	52	5	44	5	53	5	43	5	54	5	42
,,	15	5	50	5	42	5	51	5	40	5	52	5	39	5	54	5	38	5	55	5	37
,,	23	5	50	5	39	5	52	5	37	5	53	5	36	5	55	5	34	5	57	5	32
,,	31	5	51	5	37	5	53	5	35	5	55	5	33	5	57	5	31	5	59	5	28
நவம்பர்	8	5	52	5	36	5	55	5	33	5	57	5	31	6	00	5	28	6	02	5	26
,,	16	5	54	5	35	5	57	5	33	6	00	5	30	6	03	5	27	6	05	5	24
,,	24	5	57	5	36	6	00	5	33	6	03	5	30	6	06	5	27	6	09	5	24
டிசம்பர்	2	6	01	5	38	6	04	5	35	6	07	5	31	6	10	5	28	6	14	5	25
,,	10	6	05	5	41	6	08	5	38	6	11	5	34	6	15	5	30	6	19	5	27
,,	18	6	09	5	44	6	12	5	41	6	16	5	37	6	19	5	34	6	23	5	30
,,	26	6	13	5	48	6	16	5	45	6	20	5	41	6	23	5	38	6	27	5	34
ஜனவரி	3	6	16	5	53	6	19	5	49	6	23	5	46	6	26	5	42	6	30	5	38
,,	11	6	19	5	57	6	22	5	53	6	23	5	50	6	29	5	47	6	32	5	43
,,	19	6	21	6	00	6	24	5	57	6	27	5	54	6	30	5	51	6	33	5	48
,,	27	6	22	6	03	6	25	6	01	6	28	5	58	6	31	5	55	6	33	5	52
பிப்ரவரி	4	6	22	6	06	6	25	6	04	6	27	6	01	6	29	5	58	6	32	5	56
,,	12	6	21	6	08	6	23	6	06	6	25	6	03	6	27	6	01	6	29	5	59
,,	20	6	19	6	09	6	21	6	07	6	23	6	05	6	24	6	03	6	26	6	02
,,	28	6	17	6	09	6	18	6	08	6	19	6	06	6	20	6	05	6	22	6	04
மார்ச்	8	6	14	6	09	6	14	6	08	6	15	6	07	6	16	6	06	6	17	6	06
,,	16	6	10	6	08	6	10	6	08	6	11	6	07	6	11	6	07	6	11	6	07
,,	24	6	06	6	07	6	06	6	07	6	06	6	07	6	06	6	08	6	06	6	08
ஏப்ரல்	1	6	02	6	06	6	02	6	07	6	01	6	07	6	00	6	08	6	00	6	09
,,	9	5	58	6	05	5	57	6	06	5	56	6	08	5	56	6	09	5	54	6	10
,,	17	5	55	6	05	5	53	6	06	5	51	6	08	5	50	6	09	5	49	6	11

தமிழ்நாட்டின் முக்கிய ஊர்களுக்குரிய வடக்கு அட்சரேகையும் கிழக்கு தீர்க்க ரேகையும்

ஊர்	வடக்கு அட்சரேகை		கிழக்கு தீர்க்கரேகை		ஊர்	வடக்கு அட்சரேகை		கிழக்கு தீர்க்கரேகை	
	பாகை	கலை	பாகை	கலை		பாகை	கலை	பாகை	கலை
அரக்கோணம்	13	05	79	43	திருக்கோயிலூர்	11	58	79	15
அருப்புக்கோட்டை	9	31	78	08	திருவள்ளூர்	13	09	79	57
அம்பாசமுத்திரம்	8	43	77	29	திருவாரூர்	10	44	79	38
அறந்தாங்கி	10	10	79	02	திருத்தணி	13	12	79	34
அதிராமபட்டணம்	10	21	79	25	திண்டிவனம்	11	14	79	42
ஆரணி	12	40	79	19	திருவண்ணாமலை	12	15	79	07
ஆற்காடு	12	56	77	53	திருப்பூர்	11	05	77	20
ஆத்தூர் (சேலம்)	11	36	78	39	திருமங்கலம் (மதுரை)	9	49	78	01
ஆத்தூர் (மதுரை)	10	16	78	45	திருச்செங்கோடு	11	23	77	56
ஆம்பூர்	12	50	78	45	தூத்துக்குடி	8	47	78	11
இராமேஸ்வரம்	9	17	79	22	தேவக்கோட்டை	9	57	78	53
இராமநாதபுரம்	9	22	78	52	தென்காசி	8	58	77	21
இராஜபாளையம்	9	27	77	36	தொண்டி	9	45	79	54
ஈரோடு	11	20	77	46	நாமக்கல்	11	13	78	13
உதகமண்டலம்	11	24	76	44	நாகர்கோயில்	8	11	77	29
உசிலம்பட்டி	9	57	77	46	நாகப்பட்டினம்	10	46	79	53
உடுமலைப்பேட்டை	10	38	77	17	நாங்குநேரி	8	29	77	44
உடையார்பாளையம்	11	11	79	20	நெய்வேலி	10	31	79	24
எண்ணூர்	13	14	80	22	பண்ருட்டி	11	47	79	35
ஏர்க்காடு	11	48	79	24	பரமக்குடி	9	31	78	39
கரூர்	10	58	78	07	பழனி	10	27	77	33
கடலூர்	12	50	79	45	பட்டுக்கோட்டை	10	26	79	32
கன்னியாகுமரி	8	04	77	36	பரங்கிப்பேட்டை	11	50	79	48
காஞ்சிபுரம்	11	43	79	49	பல்லடம்	10	59	77	20
காரைக்கால்	10	55	79	52	பல்லாவரம்	12	56	80	13
காயல்பட்டணம்	8	34	78	10	பத்மநாபபுரம்	9	06	76	50
கிருஷ்ணகிரி	12	32	78	16	பள்ளிவாசல்	9	55	77	00
கீழக்கரை	9	14	78	50	பாண்டிச்சேரி	11	56	79	53
கும்பகோணம்	10	58	79	25	பாளையங்கோட்டை	8	43	77	46
குடியாத்தம்	12	57	78	55	புதுக்கோட்டை	10	23	78	52
கூனூர்	11	20	76	50	பெரம்பலூர்	11	04	78	56
கொடைக்கானல்	10	13	77	52	பெரியகுளம்	10	07	77	35
கோயம்புத்தூர்	11	00	76	58	பொன்னேரி	13	20	80	01
சத்தியமங்கலம்	11	30	77	17	பொள்ளாச்சி	10	39	77	03
சங்கரன்கோயில்	9	10	77	15	போளூர்	12	31	79	10
சாத்தூர்	9	21	77	58	போடிநாயக்கனூர்	10	01	77	24
சிதம்பரம்	11	24	79	44	மகாபலிபுரம்	12	37	80	17
சிவகங்கை	9	21	78	32	மன்னார்குடி	10	40	79	29
சென்னை	13	04	80	17	மதுராந்தகம்	12	30	79	56
செங்கல்பட்டு	12	42	80	01	மதுரை	9	58	79	10
செங்கோட்டை	8	59	77	18	மாயவரம்	11	06	79	42
சேலம்	11	39	78	12	மேட்டுப்பாளையம்	11	18	79	59
தஞ்சாவூர்	10	47	79	10	மேட்டூர் அணை	11	52	77	50
தர்மபுரி	12	08	78	13	வந்தவாசி	11	32	78	33
தனுஷ்கோடி	9	10	79	28	வாணியம்பாடி	12	41	78	39
தரங்கம்பாடி	11	01	79	54	விருத்தாச்சலம்	11	32	79	14
தாராபுரம்	10	45	77	34	விருதுநகர்	9	35	77	57
திருநெல்வேலி	8	44	77	44	விழுப்புரம்	11	57	79	32
திண்டுக்கல்	10	22	78	00	வேலூர் (வ.ஆ.)	12	55	79	11
திருச்சிராப்பள்ளி	10	50	78	46	ஜோலார்பேட்டை	12	34	78	37
திருச்செந்தூர்	8	30	78	11	ஸ்ரீரங்கம்	10	52	78	44
					ஸ்ரீகாளஹஸ்தி	13	45	79	44

நால்வர், நாயன்மார்களின் குருபூஜை

குறிப்பு : இங்கு கொடுக்கப்பட்டுள்ளவை தமிழ் மாத தேதிகள்.

சித்திரை 5–விறன்மீண்டர், 12 – உமாபதி சிவாச்சாரியார், 13 – இசைஞானியார், 14 – திருக்குறுப்புத் தொண்டர், 17– குமரகுருபரர், 22 – அப்பர் சுவாமிகள், 28 – சிறுத்தொண்டர், 30 – மங்கையர்க்கரசியார்.

வைகாசி 5 – சோமாசிமாறர், 14 – திருஞானசம்பந்த சுவாமிகள், திரு நீலகண்ட யாழ்பாணர், முருகநாயனார், திரு நீல நக்கர், 24 – கழற்சிங்கர், 30 – நம்பியாண்டார் நம்பிகள், 31 – சேக்கிழார், நமிநந்தி அடிகள்.

ஆனி 18 – ஏயர்க்கோன் கலிக்காமர், 29 – மாணிக்கவாசக சுவாமிகள், 30 – அமர்நீதி நாயனார்.

ஆடி 5 – கலிய நாயனார், கோட்புலியார், 17 – மூர்த்தி நாயனார், புகழ் சோழர், 20 – கூற்றுவ நாயனார், 28 – பெருமழலை குறும்பர், 28 – சுந்தர மூர்த்தி சுவாமிகள், சேரமான் பெருமான், கழற்றரிவார்.

ஆவணி 19 – செறுத்துணை நாயனார், நீலகண்ட சிவாச்சாரியார், 20 – புகழ் துணை நாயனார், அதிபத்தர், 21 – இளையான்குடி மாறர், 23 – மறைஞான சம்பந்தர், 27 – குலச் சிறையார், 29 – குங்கிலயக் கலையர்.

புரட்டாசி 7 – ருத்ர பசுபதியார், 11 – திருநாளைப் போவார், 18 – அருணந்தி சிவாச்சாரியார், 27 – ஏநாதி நாயனார், 30 – நரஸிங்கமுனையரையர்.

ஐப்பசி 4 – திருமூலர், 5 – நின்ற சீர்நெடுமாறர், 6 – இடங்கழிநாயனார், 11 – சத்தி நாயனார், 18 – மெய்க்கண்ட சிவாச்சாரியார், 20 – பூசலார் நாயனார், 22 – ஐடிகள் காடவர்கோன்.

கார்த்திகை 3 – கணம்புல்லர், 13 – மெய்ப்பொருள் நாயனார், 14 – ஆனாய நாயனார், 19 – மூர்க்க நாயனார், 20 – சிறப்புலியார்.

மார்கழி 5 – சடைய நாயனார், 11 – இயற்பகை நாயனார், மானக்கஞ்சாரர், சாக்கிய நாயனார், 25 – வாயிலார்.

தை 9 – சண்டிகேசுரர், திலகவதியார், 13 – திரு நீலகண்டர், தாயுமான சுவாமிகள், 21 – அப்பூதி அடிகள், 24 – கலிக்காமர், 25 – ஸ்ரீ நமச்சிவாயர், கண்ணப்பர், 30 – அரிவட்டாயர்.

மாசி 6 – திருவள்ளுவர், 8 – எறிபத்தர், 14 – காரி நாயனார், 18 – கோட் செங்கோட் சோழர்.

பங்குனி 7 – காரைக்காலம்மையார், 15 – தண்டியடிகள், 23 – நேச நாயனார், 25 – கணநாதர், 27 – முனையடுவார்.



ஆழ்வார்கள் - ஆசாரியர்கள் திருநட்சத்திரம்

குறிப்பு : இங்கு கொடுக்கப்பட்டுள்ளவை தமிழ் மாத தேதிகள்.

சித்திரை 5 – ஸ்ரீராமாநுஜர் (உடையவர்) அப்புள்ளார், 6 – முதலியாண்டார், 12 – கடாம்பி ஆச்சான், தேவப்பெருமாள், 13 – மதுரகவியாழ்வார், நடாத்தூர் அம்மாள், அனந்தாழ்வான், 26 – பெரியபெருமாள், வடுகநம்பிகள், 29 – உய்யக்கொண்டார்.

வைகாசி 10 – அழகிய சிங்கர், பெரிய திருமலை நம்பி, 11 திருவாய்மொழிப் பிள்ளை, நம்மாழ்வார், பிள்ளைநம்பி, 12 – பட்டர் கோவில் கந்தாடை அண்ணன், ஸ்ரீ ராமப்பிள்ளை, 26 – திருக்கோஷ்டியூர் நம்பி.

ஆனி 6 – திருவாழியாழ்வார், 7 – பெரியாழ்வார், வடக்குத் திருவீதிப்பிள்ளை, திருவரங்கப் பெருமாளரையர், எங்களாழ்வார், 8 – ஸ்ரீமந்நாதமுனிகள், 10 – திருப்புளியாழ்வார், 28 – மாறனேரி நம்பி.

ஆடி 8 – ஆளவந்தார், ஸ்ரீ புண்டரீகாட்சி, தேர்க்காழ்வார், 22 – பிரதிவாதிபயங்கர அண்ணன், 25 – ஸ்ரீ ஆண்டாள், கந்தாடை தோழப்பர், 27 – பத்ரி நாராயணப் பெருமாள், 29 – பட்சிராஜர் (கருடாழ்வார்), பரத்வாஜ ஸ்ரீனிவாச ஜீயர்.

ஆவணி 14 – பெரியவாச்சான்பிள்ளை, நயினாராச்சாம்பிள்ளை, 16 – பரவஸ்து பட்டர் பிரான், திருக்குறுகைப் பிள்ளான்.

புரட்டாசி 14 – 1 வது வானமாமலை சுவாமி, 23 – திருமலை நம்பி, 25 – ஆதிவண்சடகோபர், 28 – வேதாந்த தேசிகர்.

ஐப்பசி 9 – கூரம் குலோத்தமதாசர், 13 – எதிராஜ ஜீயர், 22 – மணவாளமாமுனிகள், 23 – சேனைமுதலியார், திருக்குறுகைப் பிள்ளான், 25 – பொய்கையாழ்வார், பிள்ளைலோகாச்சாரியார், 26 – பூதத்தாழ்வார், திருமலையாண்டான், நடுவில் திருவீதிபட்டர், 27 – பேயாழ்வார், 29 – வேலாஞ் சோலைப் பிள்ளை, 30 – இரும்பிலி அப்பா.

கார்த்திகை 3 – திருமங்கையாழ்வார், நம்பிள்ளை, 4 – திருப்பாணாழ்வார், கிடாம்பி நாயனார், 17 – கோடிகன்னிகாதானம் தாத்தாசாரியார், 29 – ஈயுண்ணி மாதவர், அருளாளப் பெருமாள்.

மார்கழி 17 – தொண்டரடிப்பொடியாழ்வார், அழகியமணவாளப் பெருமாள் நயினார், பெரிய நம்பிகள், நல்லூர் ஆச்சாம்பிள்ளை.

தை 4 – எம்பார், 7 – திருமழிசையாழ்வார், 10 – கூரத்தாழ்வான், 13 – குரு காவலப்பன், 22 – சொட்டை நம்பி நல்லூரான், 29 – திருக்கோவிலூர் எம்பெருமானார் ஜீயர்.

மாசி 4 – பிள்ளை உறங்காவில்லிதாசர், 5 – மணக்கால் நம்பி, 22 – சிறிய கோவிந்தப் பெருமாள், 27 – திருக்கச்சி நம்பி, 29 – குலசேகராழ்வார், திருமலையாண்டார், கந்தாடையாண்டார்.

பங்குனி 4 – நம்ஜீயர், திருவரங்கத்தமுதனார், திரு நாராயணப் பெருமாள், 27 – செல்லப் பிள்ளை.

மத்வாச்சாரியார் புண்ணிய தீர்த்தங்கள்

குறிப்பு : இங்கு கொடுக்கப்பட்டுள்ளவை தமிழ் மாத தேதிகள்.

சித்திரை 8 – கரவீந்த்ர, 12 – ஸத்யவ்ரத, 16 – வாகீஸ, 26 – ஸத்ய விஜய, 31 – ஸத்யாதி ராஜ.

வைகாசி 3 – ஸ்ரீராமசந்த்ர, 29 – ஸத்யானந்த.

ஆனி 9 – ஸத்யாபிநவ, 12 – ஸத்யபூர்ண, 13 – ரகுவர்ய.

ஆடி 2 – ஸத்யாதி ராஜ, 12 – ஸ்ரீஜய, 23 – ஸத்யவர.

ஆவணி 8 – ஸ்ரீராகவேந்த்ர, 30 – ஸத்யேஷ்டகாம.

புரட்டாசி 20 – மாதவ, 26 ஸத்ய நாராயண, 27 – ஸத்ய பராக்ரம.

ஐப்பசி 27 – ஸத்யவர, 28 – வேத நிதி.

கார்த்திகை 7 – வித்யாநிதி, 17 – பத்மநாப, 27 – ஸத்யநிதி.

மார்கழி 16 – ரகுநாத.

தை 1 – ரகோத்தும, 10 – ஸத்யகாம, 11 – நரஹரி, 18 – ஸத்யாதீஸ, 27 – மத்வநவமி (அனந்த தீர்த்த)

மாசி 21 – ஸ்ரீ வாதிராஜ சுவாமிகள், 22 – வ்யாஸராய, 24 – ஸத்ய வ்ரத.

பங்குனி 20 – வேதவ்யாஸ, 27 – காவீந்த்ர.

உங்கள் இவ்வாண்டு ராசி பலன்

திரு. பராசரம் பாலசுப்ரமண்யம்,
திருச்சானூர்.

குறிப்பு :

குரு : இவ்வாண்டு குரு பகவான் தொடக்கத்தில் கும்பராசியில் சஞ்சரித்துக் கொண்டுள்ளார். ஜூன் 20 ஆம் தேதி வக்ரகதியை அடைந்து செப்டம்பர் 14 -ல் மகரத்திற்குப் பின்னோக்கிச் செல்கிறார். பின்னர் அக்டோபர் 18 -ல் வக்ர நிவர்த்தி பெற்று நவம்பர் 20 - ல் மீண்டும் கும்பராசியில் பிரவேசித்து வருடம் முடியும் வரை கும்பத்திலேயே சஞ்சரிப்பார்.

சனி : வருட ஆரம்பத்தில் மகரத்தில் சஞ்சரிக்கும் சனிபகவான் மே 23 - ல் வக்ரகதியடைந்து அக்டோபர் 11-ல் வக்ர நிவர்த்தி அடைகிறார். வருடம் முழுவதும் மகரத்திலேயே சஞ்சரிக்கிறார்.

ராகு : வருஷம் ஆரம்பம் முதல் இறுதிவரையில் ரிஷபத்திலேயே சஞ்சரிப்பார்.

கேது : வருஷம் ஆரம்பம் முதல் இறுதிவரை விருச்சிகத்திலேயே சஞ்சரிப்பார்.

(அஸ்வினி, பரணி, கார்த்திகை முதல் பாதம்)

குரு லாபஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். அதிக நல்ல பலன்களை அள்ளிக்கொடுக்கும் வருடமிது. வருமானம் பெருகும். வளர்ச்சி கூடும். வருங்கால நலன் கருதி சேமிப்புகளும், வைப்பு நிதியும் உயரும். விருப்பங்கள் யாவும் நிறைவேறும். பெருமைக்குரியவர்களின் பட்டியலில் இடம் பெறுவீர்கள். கொடுத்தவாக்கை நிறைவேற்றிக்காட்டுவீர்கள். இதுவரை தொல்லைக் கொடுத்து வந்தவர்கள் இனி ஆதரவு கரம் நீட்டுவர். பிரபலங்களின் நட்பு கிட்டும். ஆன்மீகப் பெரியோர்களின் ஆசிகள் கிடைக்கும். மனதில் உற்சாகமும் தைரியமும் நிறைந்திருக்கும். உடன் பிறப்புகள் உங்கள் கருத்துக்களுக்கு ஒத்து வருவர். பூர்வீகச் சொத்துக்களிலிருந்த தகராறுகள் சுமூகமாக முடியும். வியாபாரத்தில் பங்குதாரராக சகோதரர் இணைவார். விளையாட்டுத்துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் பதக்கமும், பாராட்டும் பெறுவர். எழுத்தாளர்கள், கவிஞர்கள் பாராட்டும், விருதும் பெறுவார்கள். கலைஞர்கள் பெரும் புகழ் பெறுவார்கள். பிள்ளைகள் வழியில் நல்ல தகவல்கள் வரும். குழந்தையில்லாத தம்பதியர்களுக்கு புத்ரபாக்கியம் உண்டாகும். நீண்டதூரப் பயணம் குறிப்பாகப் புனிதப்பயணம் மேற்கொள்வீர்கள். திருமணம் கூடிவரும். திருமணமானவர்களின் இல்லற வாழ்வில் இனிமை கூடும். சொற்பொழிவாளர்களுக்கு வருமானம் அதிகரிக்கும். அரசு கௌரவம் கிடைக்கும்.

(கார்த்திகை 2,3,4, ரோகிணி மிருகசீர்ஷம் 1,2 பாதங்கள்)

தொழில் வீடான பத்தாம் வீட்டில் சனி வலிமையாக அமர அவருடன் குரு பயணிக்கிறார். வியாதி வீட்டை குரு நோக்குகிறார். எவ்வளவோ சிகிச்சை முறைகளை மாற்றியும் நோய் குணமாகவில்லையே என்ற கவலை இனி இல்லை. இனிநோயின் உண்மையான காரணம் கண்டுபிடிக்கப்பட்டு உரிய சிகிச்சை கிடைக்கப் பெற்று முற்றிலும் நிவாரணம் பெறுவீர்கள். பணப் பெருக்கம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வீர்கள். பொன், பொருள், ஆடை, அணிமணிகள் வாங்கி மகிழ்வீர்கள், கணவன் மனைவியிடையே அன்பு, இணக்கம், பாசம் அதிகரிக்கும். செல்வாக்கும், புகழும் எவ்விதத்திலும் குறையாது. சேமிப்பு உயரும். வாயில் தேடிவந்து சம்பந்தம் பேசிச்

சென்றவர்கள் மீண்டும் வந்து உங்களை மகிழ்ச்சிக்கடலில் ஆழ்த்துவார்கள். பிள்ளைகளின் நலன் கருதி எடுத்த எல்லாச் செயல்களும் வெற்றியில் முடியும். இடமாற்றம், வீடுமாற்றம் ஏற்படக் கூடும். குடும்பத்தில் திருமணம், வளைகாப்பு போன்ற சுபநிகழ்வுகள் தொடரும். நிலம் மனை வீடு வாங்கும் யோகமும் உண்டு. அரசாங்கத்திடமிருந்து சலுகைகள் கிடைக்கப் பெறுவீர்கள். முடங்கிக் கிடந்த உங்கள் திறமை முழுமையாக வெளிப்படும். வேலையில் பதவிஉயர்வு கிட்டும். வியாபாரத்தில் புதிய ஒப்பந்தங்கள் தேடிவரும். லாபம் அதிகரிக்கும். கலைத்துறையினரின் புகழுக்குப் பங்கம் ஏற்படாது. மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்குவார்கள். ஆரோக்கியம் சீராகும். தாய்வழி உறவினர்களின் ஆதரவு கிடைக்கும்.

(மிருகசீர்ஷம் 3,4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 பாதங்கள்)

வருட ஆரம்பத்தில் ராசி நாயகன் புதன் லாபஸ்தானத்தில் சகாயஸ்தானாதிபதியுடன் சஞ்சரிக்கிறார். ஒன்பதில் உலவிடும் குருபகவான் ராசியை நோக்குகிறார். இப்பெயர்ச்சியால் பொன், பொருள் சேர்க்கை அதிகரிக்கும். புகழ் கூடும். நண்பர்களால் நல்ல தகவல் கிடைக்கப் பெறுவீர்கள். திறமை பளிச்சிடப்போகிறது. குழந்தைபாக்கியம் உண்டாகும். அவ்வப்போது உபரி வருமானம் வரும், நீண்டநாட்களாக நிலுவையில் உள்ள பழையபாக்கிகள் வசூலாகும். திருமணம் ஆகாதவர்களுக்கு இப்பெயர்ச்சியால் திருமணம் நடக்கும். பல புண்ணியக்ஷேத்திரங்களைத் தரிசிக்கும் பாக்கியமும் கிடைக்கப்போகிறது. வாழ்க்கைத் துணைவரின் வரவால் செல்வ வளம் கூடப்போகிறது. ராசியை குரு நோக்குவதால் நீண்ட நாள் படுக்கையில் கிடந்தவர்களும் உற்சாகத்துடன் நிமிர்ந்து உட்காருவார்கள், மருத்துவச் செலவுகள் குறையும். குடும்பத்தில் அமைதி நிலவும், உங்கள் மனைவி அல்லது கணவருக்கும் மனை வீடு வாங்கும் யோகம் உண்டு. குழந்தைகளுடன் உல்லாசப்பயணம் மேற்கொள்வீர்கள். பெற்றோர்வழி செல்வம், சொத்துக்கள் கிடைக்கப் பெறுவீர்கள். மனதில் உற்சாகமும் தைரியமும் நிறைந்திருக்கும். குறுகிய பயணங்களால் நல்ல ஆதாயம் கிடைக்கும். நல்ல தகவல்கள் வந்த வண்ணம் இருக்கும். பிள்ளைகளின் வழியில் பெருமையும், ஆதாயமும் கிட்டும்.

(புனர் பூசம் 4, பூசம், ஆயில்யம்)

சனிபகவான் தனது சுயவீடான ஏழில் உலவிட, குரு எட்டாமிடத்தில் சஞ்சரிக்கப்போகிறார். காரியங்கள் எதுவும் நல்லவிதமாக முடியாது என்று கூறப் பட்டாலும், பொதுவாக ஜோதிடசாஸ்திரத்தில் எந்த ஒரு வீடும் முழுகெட்டவீடாகச் செயல்படாது, குரு உங்கள் ராசிக்கு ஆறாம் வீட்டின் அதிபதி. ஆறாம் வீடும் கெட்டவீடுதான். துஸ்தானங்களுக்கு அதிபதியான கிரகங்கள் கெட்டவீடுகளில் அமர்வதும், சஞ்சரிப்பதும் நல்லதே. இதனையே "கெட்டவன் கெட்டிடில் கிட்டும் ராஜ யோகம்" என்பர். அந்த வகையில் குருவின் எட்டாமிடத்துச் சஞ்சாரம் பெருமளவில் நன்மையைத் தராதெனினும், தீயபலனைக் குறைத்துத் தரும் அமைப்பு எனலாம். தாயாருக்குப் பணவரவு பெருகும், வாழ்க்கைத் துணைவருக்கு நிரந்தரப் பணியில்லையே என்ற கவலை தீரும். அவரது வருமானம் உயரும். அல்லது வாழ்க்கைத் துணைவர் ஈடுபட்டுள்ள தொழில், வியாபாரம் நன்கு அபிவிருத்தியடையும், மேலும், வாழ்க்கைத்துணைவர் வேலை அல்லது தொழில் நிமித்தம் வெளிநாடு செல்லும் யோகமும் கூடி வரும். பிள்ளைகளுக்கு மனை, வீடு, வாகனம் வாங்கும்யோகம் இப்பெயர்ச்சியால் கிடைக்கும். ஏழில் சனி உள்ளதால் நேர்மை, நாணயம், நல்லெண்ணத்துடன்

செயல்படுவீர்கள். சொந்தங்களால் ஏற்பட்ட அவமானம் நீங்கும். குறிப்பாக பெண்களால் ஏற்பட்ட மனவேதனை குறையும். சனிபகவான் தனது சுய வீட்டில் சஞ்சரிப்பதால் பிரச்சனைகளை தொல்லைகளை ஓரளவிற்கு மாற்றி அமைப்பார். ஏழாம் வீடு பத்தாம் இடத்திற்கு பத்தாம் வீடாக அமைவதால் வேலையற்றவர்கள் சிறந்த வேலையில் அமர்வர். கூடுதல் சம்பளம் மற்றும் சலுகைகளுக்காக வேறுவேலையில் சேர விரும்புபவர்களின் எண்ணம் நிறைவேறும். வியாபாரிகள் புதிய தொழிலில் முதலீடு செய்வார்கள். ஆராய்ச்சியில் ஈடுபட்டிருப்பவர்கள் அதில் வெற்றி பெற்று பாராட்டு பெறுவார்கள். தந்தை வழியில் வரும் தகவல்கள் தனவரவைக் கொடுக்கும். கல்வி அல்லது தொழில் நிமித்தம் வெளிநாடு செல்லக்கூடும்.

(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம்)

இது ஒரு யோகமான வருடம். ஆறில் சனியும், ஏழில் குருவும் உலவிடுவது மிகவும் சிறப்பாகும். எல்லாவிதத்திலும் வளர்ச்சி கூடப்போகிறது. போட்டிகள் மறையும், பொறுப்புகள் வந்து சேரும். எதிர்ப்புகள் இராது. உங்கள் கருத்துக்களுக்கு வரவேற்பு அதிகமாகும். குடும்பத்தில் பிடிவாதமும், பிணக்குகளும் மறையும். குதூகலம் நிறைந்திருக்கும். பணவரவைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை. வைப்பு நிதியையும், மற்ற சேமிப்புகளையும் அதிகப்படுத்துவீர்கள். தடைப்பட்டுக்கொண்டிருந்த திருமணம் இப்போது நடக்கும். சீமந்தம், வளைகாப்பு போன்ற சுப நிகழ்வுகளும் இல்லத்தில் நடக்கும். சுற்றத்தாரின் உதவிகள் நிச்சயம் கிடைக்கும். பிரிந்து வாழும் கணவன் மனைவி தம்பதியர்கள் விரும்பி ஒன்று சேர்ந்து மகிழ்வர். வாழ்க்கைத் துணைவரால் செல்வம் சேரும். வெளிநாட்டிற்குச் சென்று பெயரும் புகழும் ஈட்டுவீர்கள். தொழிலில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். ஆறாம் வீட்டில் சனி வலிமையாக சஞ்சரிப்பதாலும் ஆறாம் வீடு தொழில் வீட்டிற்குப் பாக்கியஸ்தானமாக இருப்பதாலும், அலுவலகப் பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு, பதவி உயர்வு ஆகியன கிடைக்கும். செல்வாக்கும், சொல்வாக்கும் பெருகும், பெண்களால் நன்மைகள் உண்டாகும். தொழில், வியாபாரத்தில் மிகுந்தலாபம் கிடைக்கும்.

(உத்திரம் 2,3,4, ஹஸ்தம், சித்திரை 1,2 பாதங்கள்)

ஐந்தில் சனிபகவான் சுயவலிமையுடன் உலவிட உங்கள் ராசிக்குப் பகை கிரகமான குரு ஆறில் உலவிடுவதும் நல்லதே. எந்த ஒருவீட்டிற்கும் கேந்திரம் அல்லது திரிகோணத்தில் அமர்ந்திருப்பது மிகுந்த நன்மை பயக்கும். அந்த வகையில் சனிபகவான் மிகப் பெரிய அளவில் நன்மைகளைத் தரப்போகிறார். தன-குடும்பஸ்தானமாகிய இரண்டாமிடத்திற்குத் திரிகோணத்தில் சுபக்கோளான குரு சஞ்சரிப்பதால் பணப்பெருக்கத்தைத் தருவார். குடும்பத்தில் ஏற்பட்டகுழப்பங்கள் பிணக்குகள் அகலும். அமைதியும் மகிழ்ச்சியும் நிலவும். தாராளமாகச் செலவு செய்து மகிழப் போகிறீர்கள். தைரியமும், ஊக்கமும் ஒருபோதும் குறையாது. ஆற்றல் பளிச்சிடப்போகிறது. தொழிலில் நல்லமுன்னேற்றத்தை எதிர்ப்பார்க்கலாம். உத்தியோக உயர்வு பெறப்போகிறீர்கள். மருத்துவத்துறையில் உள்ளவர்கள் பெரும்பொருள் வரவைக் காண்பார்கள். நல்ல உணவுப் பழக்கத்தை மேற்கொள்வீர்கள். கடன் தொல்லை இராது. எதிரிகளின் தொல்லைகள் குறையும். வளர்ப்புப் பிராணிகளால் நல்லலாபம் பெறுவீர்கள். பாதுகாப்புப்பணிகளிலும் சேரக்கூடும். உடல் நலம் தொடர்பான துறைகளில் வேலைகிடைக்கக் கூடும். பிள்ளைகள் கல்வியில் பெரிய சாதனை படைப்பார்கள். ராசிக்கு நான்கிற்குரியவர் ஆறில் உலவிடுவதால் வீடு, மனை வாங்குபோது தகுந்த சட்டவல்லுநரைக் கலந்து ஆலோசித்தபின் வாங்குவது நல்லது. தேவைக்கு அதிகமாகவே பணம் வரும். வெளிவட்டாரத்தில் புகழ் கூடும். அரசியலில் பதவி, கௌரவம், அதிகாரம் கிடைக்கப் பெறுவீர்கள்.

(சித்திரை 3, 4, சுவாதி, விசாகம் 1,2,3 பாதங்கள்)

நான்காம் இடத்தில் யோகக்காரகன் சனியும், ஐந்தில் குருவும் உலவிட உள்ளனர். இனி அதிர்ஷ்டக் காற்று வீசப்போகிறது. ஆவல்கள்யாவும் தீரப்போகிறது. ஆதரவுக் கரம் நீட்டுவோரின் எண்ணிக்கை அதிகரிக்கும். நான்காமிடம் வங்கி இருப்பைக் குறிக்கும் வீடு எனவே, வங்கி இருப்பு கணிசமாக உயரப்போகிறது. உறவினர்களை ஆதரித்து மகிழ்வீர்கள். பொறுமையும், உறுதியும் கொண்டு எல்லாச் செயல்களிலும் வெற்றி காண்பீர்கள். மாணவர்களுக்குப் பரிசும் பாராட்டும் தொடர்ந்து கிடைக்கும். உத்தியோகஸ்தராயின் அலுவலகத் தேர்வில் சிறப்பானத் தேர்ச்சியினைப் பெறுவர். பெரிய அதிகாரியாகப் பதவி உயர்வு காணப்போகிறீர்கள். குழந்தை பாக்கியம் இல்லாதவர்களுக்கு அக்கவலை இனி இல்லை. இசை, நடனம், நாடகம், சினிமா, தொலைக்காட்சி போன்ற துறைகளில் ஈடுபட்டுப் பொருளும், புகழும் ஈட்டுவீர்கள். குடும்பத்துடன் உல்லாசப் பயணம் மேற்கொள்வீர்கள். மத, சமய, ஆசார அனுஷ்டானங்களில் ஆர்வம் மேலோங்கும். தெய்வ வழிபாடுகளில் ஈடுபாடு அதிகரிக்கும். பெரியோர்கள், தவசிகளின் ஆசிகள் கிடைக்கும். பங்குச் சந்தை போன்ற யூகவர்த்தகத்தில் ஈடுபட்டு பெரும் பொருள் ஈட்டுவீர்கள். உடன் பிறப்புகளிடையே ஏற்பட்ட மனக்கசப்புகள் மறையும். பிள்ளைகளின் கல்யாணக் கனவுகளை நனவாக்கி மகிழ்வீர்கள். சிக்கல்கள், சிரமங்கள் யாவும் ஓடி ஒளியப்போகின்றன. ஆரோக்கிய பாதிப்புகள் அறவே நீங்கும். அண்டை அயலாருடன் ஏற்பட்ட மன வேற்றுமைகள் அகலும். தந்தைவழியில் நியாயம் எதிர்ப்பார்க்கலாம். நண்பர்கள் எல்லா வகையிலும் உதவக்காத்திருப்பார்கள். வாழ்க்கைத் துணைவருக்கு ஓர் அதிர்ஷ்டவாய்ப்பு கூடிவரும்.

(விசாகம் 4, அனுஷம், கேட்டை)

மூன்றில் சனிபகவான் தன் சுயவீட்டிலும், நான்கில் குருவும் உலவிட இவ்வருடம் ஆரம்பமாகிறது. நான்காமிடம் என்பது ஒரு கேந்திரமாகும். கல்வி, சுகம், தாய் நில புலன்கள், வாகன சௌக்கியம் ஆகியவற்றைக் குறிக்கும் வீட்டில் குரு உலவிடுகிறார். அந்த வகைகளிலெல்லாம் நன்மைகள் ஏற்படப்போகின்றன. நான்கில் உலவிடும் குரு சுகங்களையும், சந்தோஷங்களையும் வாரிவழங்குவார். இதுவரையில் தொந்தரவு கொடுத்து வந்த நோய்களிலிருந்து நிவாரணம் பெற்று மகிழ்வீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். குழப்பங்கள் நீங்கி ஒற்றுமை ஏற்படும். புதிய வீடு வாங்குவீர்கள் அல்லது பழைய கட்டிடத்தைப் புதுப்பிப்பீர்கள். மாணவர்களுக்குக் கல்வியில் நல்ல ஈடுபாடு ஏற்படும். பழைய வாகனத்தை விற்றுப் புதிய வாகனம் வாங்குவீர்கள். தாயின் ஆரோக்கிய பாதிப்புகள் அகலும். இளைய உடன் பிறப்புகளின் வருமானம் பெருகும். குடும்பத்தரம் உயரும். விவசாயம் மற்றும் பண்ணை நிலங்களால் ஆதாயம் அதிகரிக்கும். கால்நடை செல்வங்களால் லாபம் பெருகும். ராசிக்கு இரண்டிற்குரியவர் நான்கில் உலவிடுவதால் பொருளாதார வளர்ச்சி கூடும். சேமிப்பும் வைப்புநிதியும் உயரும். பேச்சாற்றல் மிகும். அதன் மூலம் பெரும் வரவு உண்டாகும். தாய் மற்றும் தாய்வழி உறவினர்களின் ஆதரவு கிடைக்கும். ஆட்டோ மொபைல் சம்பந்த வியாபாரங்கள் மூலம் நல்ல லாபம் ஈட்டுவீர்கள். ஆசைகள், கோரிக்கைகள், எதிர்ப்பார்ப்புகள் யாவும் நிறைவேறும். வெற்றியும், மகிழ்ச்சியும் உண்டாகும். மூன்றாம் பாவம் முயற்சி, முயற்சியில் வெற்றி, ஆகியவற்றையும், உடன் பிறப்புகளையும் குறிக்கும். இதனை சகாயஸ்தானம் என்றும் அழைப்பர். உடன் பிறப்புகளின் உதவியும், ஆதரவும் கிடைக்கும். எழுத்து, பத்திரிகை போன்ற துறைகளில் உள்ளவர்கள் மிகுந்த மேன்மையை அடைவர். இழப்புகளை ஈடுசெய்து மகிழ்வீர்கள். பழைய பாக்கிகள் வசூலாகும். தொழில் வியாபாரத்தில் புதிய ஒப்பந்தங்கள் தேடிவரும். சம்பளபாக்கி, ஓய்வு

ஊதியம், ஆயுள் காப்பீட்டுத் தொகை ஆகியன விரைவில் கிடைக்கும். பொது நலத்தில் ஈடுபாடு அதிகரிக்கும்.

(மூலம், பூராடம், உத்திராடம் முதற்பாதம்)

ராசிக்கு இரண்டில் தன குடும்பஸ்தானத்தில் அதன் அதிபதியாகிய சனிபகவான் சஞ்சரிக்க, குரு மூன்றாமிடத்தில் உள்ள நிலையில் இவ்வருடம் ஆரம்பமாகிறது. பொருளாதாரநிலை மிகவும் உயரும் குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். சுபகாரியங்கள் நிகழும். நாவன்மை சிறக்கும். மேடைப்பேச்சாளர்கள், வழக்கறிஞர்கள், பள்ளி கல்லூரி ஆசிரியர்கள் ஆகியோரின் செல்வநிலை உயரும். குடும்பத்திற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் முதல் ஆடம்பரப் பொருட்கள் வரை வாங்கிமகிழ்வீர்கள். ஆடை அணிகலன்களின் சேர்க்கையுண்டாகும். இது நாள்வரை தொந்தரவு கொடுத்து வந்த கண் சம்பந்தமான நோய் அறவே நீங்கும். மூன்றாமிடம் வீர, பராக்ரம ஸ்தானமாகும். குருவின் சஞ்சாரத்தால் மனதில் தைரியமும், தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். செயலில் உற்சாகம் பிறக்கும். திறமைகள் யாவும் வெளிப்படும். வருமானம் பலமடங்கு பெருகும். சேமிப்பு உயரும். தொட்டகாரியங்கள் எல்லாம் வெற்றிபெறும். புகழ் பெற்றவர்களின் பட்டியலில் இடம் பெறுவீர்கள். உடன் பிறப்புகளிடையே ஏற்பட்ட மனக்கசப்புகள், பிணக்குகள், பிடிவாதங்கள் யாவும் மறையும். ஒற்றுமை ஏற்படும். தரகு, கமிஷன் ஏஜென்ஸி போன்ற வியாபாரிகள், பெரும் ஆதாயம் பெறுவார்கள். எழுத்தாளர்கள், கவிஞர்கள், பதிப்பகத்தார் ஆகியோர் பாராட்டப்படுவார்கள். உள் நாட்டு குறுகிய பயணங்கள் அதிகரிக்கும். அவற்றால் ஆதாயமும் கிடைக்கும். இசைத்துறையில் உள்ளவர்கள் நல்ல வாய்ப்பு கிடைக்கவில்லையே என்ற கவலை நீங்கப் பெற்று பொருளும், புகழும் கிடைக்கப் பெறுவார்கள். நல்ல தகவல்கள் பல இல்லம் தேடிவரப் போகின்றன. எழுத்து, பத்திரிகைத் துறையில் உள்ளவர்கள் பாராட்டப்படுவார்கள். குடியிருக்கும் வீட்டை மாற்றுவீர்கள். வளர்ச்சியைக் கூட்டும் மாற்றங்கள் பல காணப் போகிறீர்கள். பாகப் பிரிவினையிலிருந்து வந்த தகராறுகள் நீங்கும். உங்களுக்கு உரிய பங்கை முறையாகப் பெறுவீர்கள். சாகஸங்கள் நிறைந்த விளையாட்டுகளில் ஈடுபட்டுப் பாராட்டப்படுவீர்கள். கணவன் மனைவியிடையே அந்நியோன்யம் பெருகும். மாணவர்கள் விரும்பிய உயர்கல்வியில் சேர்ந்து மகிழ்வார்கள்.

(உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 பாதங்கள்)

உங்கள் ராசிநாயகன் இவ்வாண்டு முழுவதும் ராசியிலேயே சஞ்சரிக்கிறார். உடல் நலம் சிறக்கும். ராசி நாயகன் சனியே தனஸ்தானத்திற்கும் அதிபதியாவதால் இவ்வாண்டு முழுவதும் பணப் பற்றாக்குறை இராது. எல்லா வழிகளிலும் முன்னேற்றமும், நிம்மதியும் ஏற்படும். பொருளாதார எழுச்சிமிகும். ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நோயிலிருந்து முழு நிவாரணம் கிடைக்கும். துணிச்சலான காரியங்களில் ஈடுபட்டு சாதனை புரிவீர்கள். விளையாட்டுத்துறைகளில் வெற்றிவாகை சூடுவீர்கள். தகவல் - தொடர்பு, எழுத்து, பத்திரிகை போன்ற துறைகளில் பெரும் பொருள் தேடிவரும். தரகு, கமிஷன் ஏஜென்ஸி, வியாபாரம் நன்கு செழிக்கும், தொழில் வீட்டை சனிநோக்குவதால் தொழில், வியாபாரம் நல்லமுன்னேற்றமடையும், புதிய தொழில் தொடங்கவும் வாய்ப்பு கூடி வரும். இரும்பு, எஃகு, பெட்ரோல், டீசல், இயந்திரங்கள், எண்ணெய், எண்ணெய் வித்துக்கள், தோல், தோல் சம்பந்தப்பட்ட பொருட்கள், எள், உளுந்து, கம்பளி போன்ற பொருட்கள் வியாபாரம் செய்பவர்கள் பெரும் லாபம் ஈட்டுவர். விவசாயம், கால்நடை வளர்ப்பு மற்றும் அதன் பராமரிப்பு, வீட்டு வளர்ப்பு பிராணிகள் தொடர்பான தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்கள் மிகுந்த பயனடைவார்கள். எல்லாச் செயல்களிலும் முழு ஈடுபாடுடன் ஈடுபட்டு வெற்றி காணப் போகிறீர்கள். பல பிரபலங்கள் முன்னேற்றத்திற்கு ஆதரவு தருவார்கள். இரண்டில் குரு

அறிவாற்றலையும், பேச்சாற்றலையும் அதிகரிக்கச் செய்வார். மாணவர்கள் கல்வியில் மிகச் சிறந்த தேர்ச்சியினைப் பெறுவார்கள். அடுத்தவர்களின் நலனில் அக்கறைச் செலுத்துபவர்களின் பெயர் பட்டியலில் முதலிடம் பிடிப்பீர்கள். வாழ்க்கைத் தேவைகள் அனைத்தும் இப்பெயர்ச்சி காலத்தில் நிறைவேற்றிக் கொள்வீர்கள். மாற்று இனத்தவரின் ஒத்துழைப்பும் பெறுவீர்கள். அரசியலில் உள்ளவர்களின் செல்வாக்கு கூடும். குடும்பத்தில் திருமணம், வளைகாப்பு போன்ற சுப நிகழ்வுகள் தொடரும்.

(அவிட்டம் 3, 4, சதயம், பூரட்டாதி 1,2,3 பாதங்கள்)

ராசிநாயகன் சனி பன்னிரண்டில் சஞ்சரிப்பினும் அது அவருக்கு சுய வீடாகும். ஏழுக்குரிய சூரியன் மூன்றில் உச்சம் பெற்று சஞ்சரிக்க இவ்வாண்டு ஆரம்பமாகிறது. தன-குடும்பம் மற்றும் லாபஸ்தானத்திற்குரிய குருபகவான் ராசியில் சஞ்சரிக்கிறார். ஐந்திற்குரிய புதன் இரண்டிலும், நான்கு மற்றும் ஒன்பதிற்குரிய சுக்ரன் மூன்றில் உலவிடுகின்றனர். பொருளாதாரத்தில் நிறைவு உண்டாகும். உடன் பிறப்புகளும், உடன் இருப்பவர்களும் உங்கள் கருத்திற்கு ஒத்து வருவார்கள். சனிபகவான் பன்னிரண்டில் உள்ளபோதும், அவர் வக்ர கதியை அடையும்போதும், உடல் நலனில் சற்று அக்கறைச் செலுத்த வேண்டிவரும். பணப்புகழக்கம் அதிகரிக்கும். மனக்குழப்பம் அகலும். தொழில், வியாபாரம் எதுவாயினும் அதில் எதிர்ப்பார்த்த ஆதாயம் நிச்சயம் உண்டு. குருவின் பார்வை ஐந்தாம் வீட்டில் பதிவதால் குழந்தை இல்லாதவர்கள் மழலை பாக்கியம் பெறுவர். பங்குச் சந்தை போன்ற யூகவர்த்தகம் நல்ல ஆதாயத்தைத் தரும். பாக்கியஸ்தானம் வலிமை பெறுவதால் தந்தை வழி செல்வமோ, சொத்தோ பெறும் வாய்ப்பும் உண்டு. நீண்ட பயணங்கள் குறிப்பாக புனிதஸ்தல யாத்திரை மேற்கொள்வீர்கள். ஆலய வழிபாடுகளிலும் தர்மகாரியங்களிலும் ஈடுபடுவீர்கள். ஆன்மீக நூல்கள் படிப்பதில் ஆர்வம் கூடும். குழந்தைகள் உயர்கல்வியில் நல்ல தேர்ச்சி பெறுவார்கள். எதிரிகளின் தொல்லை இராது. வெளிநாடு செல்லும் யோகமும் வாய்க்கும். கணவன் மனைவியிடையே அந்நியோன்யம் நீடிக்கும். மன நிம்மதியும், மகிழ்ச்சியும் கூடும். அரசுத்துறையிலிருந்து ஆதாயமும், சலுகைகளும் பெறுவீர்கள்.

(பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி)

ராசி நாயகன் குருபன்னிரண்டில் உலவிடவும், லாபஸ்தானாதிபதி லாபஸ்தானத்திலும், சூரியன் இரண்டிலும், இரண்டு மற்றும் ஒன்பதிற்குரிய செவ்வாய் நான்கிலும் அமர்ந்த நிலையில் இவ்வாண்டு தொடங்குகிறது. தன பாக்கியாதிபதியாகிய செவ்வாய் தொழில் வீட்டை நோக்குகிறார். அற்புதமான வாழ்க்கைக்கு அஸ்திவாரமிடுவதுபோல் உள்ளது இவ்வாண்டு கிரகப் பெயர்ச்சி. குருவின் பார்வை 4,6,8 ஆகிய இடங்களில் பதிவதால் சுகம் பெருகும். மகிழ்ச்சி கூடும். ஆரோக்கிய பாதிப்புகள் முற்றிலும் நீங்கும். பணியாளர்களை மாற்றும் எண்ணம் மேலோங்கும். இழப்புகளை ஈடுசெய்யும் வாய்ப்புகள் கூடிவருகிறது. இனிவராது என கைவிட்ட பணம் எதிர்ப்பாராத வகையில் கிடைக்கப் போகிறது. கடன்கள் முழுவதுமாக பைசல் செய்வீர்கள். பொருள் வரவு அதிகரிக்கும். சேமிப்பு உயரும். இளைய உடன் பிறப்புகளுக்கு நல்ல வேலை கிடைக்கும். தாயாரின் உடல் நிலையில் நல்லமுன்னேற்றம் ஏற்படும். சொத்துக்கள் வாங்கும் எண்ணம் ஈடேறும். புதிய வீட்டிற்குக் குடிபோகும் பாக்கியம் உண்டு. உற்றார், உறவினர் மற்றும் நண்பர்களின் குடும்ப சுபகாரியங்களுக்குப் பொருளுதவி செய்து மகிழ்வீர்கள். நீதிமன்ற வழக்குகளில் வெற்றி பெறுவீர்கள். அலுவலகத்தில் சக ஊழியர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். பாக்கியாதிபதி தொழில் வீட்டைப் பார்ப்பதால் உத்தியோகத்தில் விரும்பிய உயர்வு கிடைக்கும். பேரனோ, பேத்தியோ பிறக்கும் யோகமும் கூடிவருகிறது. பன்னிரண்டில் உலவிடும் குருவால் பயணவாய்ப்புகள் அதிகரிக்கும். குடும்பத்தில் சுபச் செலவுகள் கூடும். வியாபாரம் அபிவிருத்தியடையும். சட்டம், நீதி, கல்வி, வழிபாட்டுத்துறை போன்றவற்றில் ஈடுபட்டுள்ளவர்கள் பெரும் பயன் அடைவார்கள். பொறியியல் மற்றும் மருத்துவத்துறையினருக்கு பொருள் வரவு பெருகும்.

சுபம்

உத்ஸவாதி பட்டியல்

ஆங்	தமிழ்	கிழமை	உத்ஸவாதி விவரங்கள்
2021	**பங்குனி**		
ஏப்ரல்			
9	26	வெள்ளி	ஸ்ரீ பாஷ்யகாரரின் உத்ஸவமாரம்பம்.
			ஸ்ரீ பிலவ வருஷம் சைத்ர மாஸம்
13	30	செவ்வாய்	யுகாதி, சாந்த்ரவருஷம், திருமலையப்ப ஸ்வாமி யுகாதி ஆஸ்தானம். திருமலையப்பஸ்வாமி தினசரி உத்ஸவம் ஆரம்பம். சந்த்ரோதயம். அஸ்வினீ 1 மேஷத்தில் சூரியன். விகா 4-35பிரவேசம் இன்று மேஷ சங்க்ரமணம் விஷு புண்ய காலம். அஸ்வினி கார்த்தி.
	சித்திரை		**மேஷ மாஸம்**
14	1	புதன்	ஸ்ரீமத்ஸ்ய ஜயந்தி, சௌரமாஸப் பிறப்பு. தமிழ் வருட பிறப்பு.
15	2	வியா	வாயல்பாடு ஸ்ரீபட்டாபிராமஸ்வாமி பிரம்மோத்ஸவ அங்குரார்ப்பணம்.
16	3	வெள்ளி	வாயல்பாடு ஸ்ரீபட்டாபிராமஸ்வாமி பிரம்மோத்ஸவம் ஆரம்பம், துவஜாரோகணம், நாராயணவனம் ஸ்ரீமரகதவல்லி சமேத ஸ்ரீ அகஸ்தீஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவ அங்குரார்ப்பணம்.
17	4	சனி	மதுரகவியாழ்வார் உத்ஸவம் ஆரம்பம். நாராயணவனம் ஸ்ரீமரகதவல்லி சமேத ஸ்ரீ அகஸ்தீஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம் ஆரம்பம், துவஜாரோகணம், அனந்தாழ்வான் உத்ஸவம் ஆரம்பம்.
18	5	ஞாயிறு	ஸ்ரீபாஷ்யகாரர் சாற்றுமுறை. ஸ்ரீராமானுஜ ஜயந்தி.
19	6	திங்கள்	ஸ்ரீராம ஜயந்தி, ஸ்ரீமுதலியாண்டான் திருநட்சத்திரம், திருப்பதி ஸ்ரீ கோதண்டராம ஸ்வாமி புஷ்பயாக மஹோத்ஸவம்.
20	7	செவ்வாய்	ஒன்டிமிட்டா ஸ்ரீகோதண்டராமஸ்வாமி பிரம்மோத்ஸவ அங்குரார்ப்பணம், வாயல்பாடு ஸ்ரீபட்டாபிராமஸ்வாமி கருடசேவை.
21	8	புதன்	ஸ்ரீராம நவமி, திருமலையப்பஸ்வாமி ஆஸ்தானம். ஒன்டிமிட்டா ஸ்ரீ கோதண்டராமஸ்வாமி பிரம்மோத்ஸவம் ஆரம்பம், துவஜாரோகணம். கார்வேடிநகரம் ஸ்ரீகோதண்டராமஸ்வாமி கல்யாணோத்ஸவம். வாயல்பாடு ஸ்ரீபட்டாபிராமஸ்வாமி கல்யாணோத்ஸவம்.
22	9	வியாழன்	தர்மராஜ தசமி, ஸ்ரீராம பட்டாபிஷேகம், ஆஸ்தானம், திருப்பதி ஸ்ரீ கோதண்டராமஸ்வாமி கல்யாணோத்ஸவம்.
23	10	வெள்ளி	திருப்பதி ஸ்ரீகோதண்டராமஸ்வாமி பட்டாபிஷேகம், சர்வ ஏகாதசி, வாயல்பாடு ஸ்ரீபட்டாபிராமஸ்வாமி ரதோத்ஸவம்.
24	11	சனி	திருமலையப்பஸ்வாமி வஸந்தோத்ஸவம் ஆரம்பம். திருப்பதி ஸ்ரீ கோவிந்தராஜஸ்வாமி புக்கோத்ஸவம் ஆரம்பம். திருப்பதி ஸ்ரீகோதண்டராமஸ்வாமி தெப்போத்ஸவம் ஆரம்பம், வாயல்பாடு ஸ்ரீபட்டாபிராமஸ்வாமி பிரம்மோத்ஸவம் அவப்ருதம், சக்ரஸ்நானம், துவஜாவரோகணம், பெங்களூரு ஸ்ரீவேங்கடேஸ்வரஸ்வாமி வசந்தோத்ஸவம் ஆரம்பம்.
25	12	ஞாயிறு	நாகுலாபுரம் ஸ்ரீவேதநாராயண ஸ்வாமி பிரம்மோத்ஸவ அங்குரார்ப்பணம்.
26	13	திங்கள்	ஒன்டிமிட்டா ஸ்ரீகோதண்டராமஸ்வாமி கல்யாணோத்ஸவம். திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜஸ்வாமி புக்கோத்ஸவம் நிறைவு, திருமலையப்பஸ்வாமி

ஆங்	தமிழ்	கிழமை	உத்ஸவாதி விவரங்கள்
			வஸந்தோத்ஸவம் நிறைவு, திருப்பதி ஸ்ரீ கோதண்டராமஸ்வாமி தெப்போத்ஸவம் நிறைவு. நாகுலாபுரம் ஸ்ரீ வேத நாராயணஸ்வாமி பிரம்மோத்ஸவம் ஆரம்பம், துவஜாரோகணம். ஸ்ரீமதுரகவியாழ்வார் சாற்றுமுறை. பெங்களூரு ஸ்ரீவேங்கடேஸ்வரஸ்வாமி வஸந்தோத்ஸவம் நிறைவு. நாராணவனம் ஸ்ரீமரகதவல்லி சமேத ஸ்ரீஅகஸ்தீஸ்வரஸ்வாமி பிரம்மோத்ஸவம் நிறைவு, திரிசூல ஸ்நானம். துவஜாவரோகணம். அனந்தாழ்வான் சாற்றுமுறை.
27	14	செவ்வாய்	திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி பொன்னகால்வா உத்ஸவம். பரணிகார்த்தி இ.8.44 ஒன்டிமிட்டா ஸ்ரீ கோதண்டராமஸ்வாமி ரதோத்ஸவம்.
29	16	வியாழன்	ஒன்டிமிட்டா ஸ்ரீகோதண்டராமஸ்வாமி பிரம்மோத்ஸவம் அவப்ருதம், சக்ரஸ்நானம், துவஜாவரோகணம், ஸ்ரீபராசரபட்டர் திருநட்சத்திரம்.
30	17	வெள்ளி	ஒன்டிமிட்டா ஸ்ரீ கோதண்டராமஸ்வாமி புஷ்பயாக மஹோத்ஸவம். மேற்கில் உதிக்கும் சுக்ரமௌட்யம் நிவர்த்தி. கா.11-03. நாகுலாபுரம் ஸ்ரீவேதநாராயண ஸ்வாமி கருடசேவை.
மே			
1	18	சனி	மே தினம்.
2	19	ஞாயிறு	கார்வேடிநகரம் ஸ்ரீவேணுகோபாலஸ்வாமி வஸந்தோத்ஸவம் ஆரம்பம்.
3	20	திங்கள்	நாகுலாபுரம் ஸ்ரீவேதநாராயணஸ்வாமி ரதோத்ஸவம்.
4	21	செவ்வாய்	நாகுலாபுரம் ஸ்ரீவேதநாராயணஸ்வாமி பிரம்மோத்ஸவ அவப்ருதம், சக்ரஸ்நானம், துவஜாவரோகணம். கார்வேடிநகரம் ஸ்ரீவேணுகோபாலஸ்வாமி வஸந்தோத்ஸவம் நிறைவு. கத்தரி மா.5-55.
7	24	வெள்ளி	சர்வ ஏகாதசி.
10	27	திங்கள்	மாதசிவராத்திரி.
11	28	செவ்வாய்	திருப்பதி கங்கையம்மன் சித்திரைத் திருவிழா ஆரம்பம். நிஜ கத்தரி கா.9-21.
			வைசாக மாஸம்
13	30	வியாழன்	ப்ருகு மஹரிஷி திருநட்சத்திரம், ஸ்ரீஸ்ரீநிவாச தீட்சிதர் திருநட்சத்திரம். சந்த்ரோதயம்.
14	31	வெள்ளி	அக்ஷய த்ரிதீயை, பரசுராம ஜயந்தி, சிம்மாசல க்ஷேத்திரத்தில் சந்தனக் காப்பு உத்ஸவம். கிருத்திகை 2-ல் ரிஷபத்தில் சூரியன் இ.2-45. இன்று ரிஷப சங்க்ரமணம் ஹரிபத புண்யகாலம்.
	வைகாசி		**ரிஷப மாஸம்**
16	2	ஞாயிறு	ஸ்ரீ நம்மாழ்வார் உத்ஸவமாரம்பம்.
17	3	திங்கள்	ஸ்ரீ சங்கராச்சாரியார் ஜயந்தி, திருப்பதி ஸ்ரீ கோவிந்தராஜஸ்வாமி பிரம்மோத்ஸவ அங்குரார்ப்பணம்.
18	4	செவ்வாய்	திருப்பதி கங்கையம்மன் சித்திரைத் திருவிழா நிறைவு. திருப்பதி ஸ்ரீ கோவிந்தராஜஸ்வாமி பிரம்மோத்ஸவம் ஆரம்பம், துவஜாரோகணம். கீலபட்ல ஸ்ரீகோனேடிராயஸ்வாமி பிரம்மோத்ஸவ அங்குரார்ப்பணம்.
19	5	புதன்	கீலபட்ல ஸ்ரீ கோனேடிராய ஸ்வாமி பிரம்மோத்ஸவம் ஆரம்பம், துவஜாரோகணம்.
20	6	வியாழன்	திருமலையில் ஸ்ரீபத்மாவதி ஸ்ரீநிவாச பரிணயம் ஆரம்பம்.
21	7	வெள்ளி	வாசவி ஜயந்தி.
22	8	சனி	ஸ்மார்த்த ஏகாதசி, திருமலையில் ஸ்ரீ பத்மாவதி ஸ்ரீநிவாஸ பரிணயம் நிறைவு. மெயின் வரதராஜஸ்வாமி திருநட்சத்திரம். ரிஷிகேஷ், நாராயணவனம் ஸ்ரீ கல்யாண வேங்கடேஸ்வரஸ்வாமி பிரம்மோத்ஸவ அங்குரார்ப்பணம். திருப்பதி ஸ்ரீ கோவிந்தராஜஸ்வாமி கருடசேவை. ஜம்மலமடுகு ஸ்ரீபூசமேத நாராபுர ஸ்ரீ வேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவ அங்குரார்ப்பணம்.

ஆங்	தமிழ்	கிழமை	உத்ஸவாதி விவரங்கள்
23	9	ஞாயிறு	வைஷ்ணவ மாத்வ ஏகாதசி, ரிஷிகேஷ், நாராயணவனம் ஸ்ரீகல்யாணவேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம் ஆரம்பம், துவஜாரோகணம். ஜம்மலமடுகு ஸ்ரீ பூசமேத நாராபுர ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம் ஆரம்பம், துவஜாரோகணம்.
24	10	திங்கள்	திருச்சானூர் ஸ்ரீபத்மாவதிதாயார் வஸந்தோத்ஸவம் ஆரம்பம், அங்குரார்ப்பணம். தேவுனிகடப ஸ்ரீலக்ஷ்மிவேங்கடேஸ்வர ஸ்வாமி தெப்போத்ஸவம் ஆரம்பம்.
25	11	செவ்வாய்	ஸ்ரீநரசிம்ம ஜயந்தி, மாத்ருஸ்ரீ வெங்கமாம்பா ஜயந்தி. ஸ்ரீ அன்னமய்யா ஜயந்தி, ஸ்ரீ நம்மாழ்வார் சாற்றுமுறை, திருப்பதி ஸ்ரீ கோவிந்தராஜ ஸ்வாமி ரதோத்ஸவம். ரோகிணி கார்த்தி ப.1-03.
26	12	புதன்	ஸ்ரீ கூர்ம ஜயந்தி, ஸ்ரீ கரிய மாணிக்க ஸ்வாமி கருடசேவை. கீலபட்ல ஸ்ரீகோனேடி ராய ஸ்வாமி ரதோத்ஸவம். திருப்பதி ஸ்ரீ கோவிந்தராஜஸ்வாமி பிரம்மோத்ஸவ அவப்ருதம். துவஜாவரோகணம். தேவுனிகடப ஸ்ரீ லக்ஷ்மி வேங்கடேஸ்வர ஸ்வாமி தெப்போத்ஸவம் நிறைவு. ஸ்ரீ கபிலேஸ்வர ஸ்வாமி பத்ர புஷ்பயாகம்.
27	13	வியாழன்	திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் வஸந்தோத்ஸவம் நிறைவு. ரிஷிகேஷ், நாராயணவனம் ஸ்ரீகல்யாணவேங்கடேஸ்வர ஸ்வாமி கருடசேவை. கீலபட்ல ஸ்ரீ கோனேடிராய ஸ்வாமி பிரம்மோத்ஸவ அவப்ருதம், சக்ரஸ்நானம், துவஜாவரோகணம்.
28	14	வெள்ளி	கீலபட்ல ஸ்ரீகோனேடி ராய ஸ்வாமி புஷ்பயாக மஹோத்ஸவம். கத்தரி நிறைவு இ.12-38. ஜம்மலமடுகு ஸ்ரீபூசமேத நாராபுர ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி கல்யாணோத்ஸவம்.
29	15	சனி	ஸ்ரீநிவாச மங்காபுரம் ஸ்ரீகல்யாணவேங்கடேஸ்வர ஸ்வாமி வஸந்தோத்ஸவம் ஆரம்பம். ஜம்மலமடுகு ஸ்ரீபூசமேத நாராபுர ஸ்ரீ வேங்கடேஸ்வர ஸ்வாமி ரதோத்ஸவம்.
30	16	ஞாயிறு	நாகுலாபுரம் ஸ்ரீவேதநாராயண ஸ்வாமி புஷ்பயாகம் அங்குரார்ப்பணம்.
31	17	திங்கள்	ஸ்ரீநிவாசமங்காபுரம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி வஸந்தோத்ஸவம் நிறைவு. ரிஷிகேஷ், நாராயணவனம் ஸ்ரீ கல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவ அவப்ருதம், சக்ரஸ்நானம், துவஜாவரோகணம், ஜம்மலமடுகு ஸ்ரீபூசமேத நாராபுர ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவ அவப்ருதம், சக்ரஸ்நானம், துவஜாவரோகணம். நாகுலாபுரம் ஸ்ரீவேதநாராயண ஸ்வாமி புஷ்பயாக மஹோத்ஸவம்.
ஜூன்			
1	18	செவ்வாய்	கார்வேடிநகரம் ஸ்ரீவேணுகோபால ஸ்வாமி பிரம்மோத்ஸவ அங்குரார்ப்பணம். ஜம்மலமடுகு ஸ்ரீபூசமேத நாராபுர ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி புஷ்பயாக மஹோத்ஸவம்.
2	19	புதன்	கார்வேடி நகரம் ஸ்ரீவேணுகோபால ஸ்வாமி பிரம்மோத்ஸவம் ஆரம்பம். துவஜாரோகணம்.
4	21	வெள்ளி	ஸ்ரீஹனுமத் ஜயந்தி, பாதால மண்டபத்தில் ஹனுமத் ஜயந்தி, திருப்பதி ஸ்ரீ கோதண்டராமஸ்வாமி ஹனுமத்வாகன சேவை.
5	22	சனி	ஸ்ரீமஹீ ஜயந்தி, ரிஷிகேஷ் ஸ்ரீபார்வதி தேவி சமேத சந்த்ர மௌளீஸ்வர ஸ்வாமி பாஞ்சாஹ்னிகதீக்ஷ கல்யாணோத்ஸவம், அங்குரார்ப்பணம்.
6	23	ஞாயிறு	மதத்ரய ஏகாதசி, கார்வேடிநகரம் ஸ்ரீவேணுகோபாலஸ்வாமி கருட சேவை. ரிஷிகேஷ் ஸ்ரீபார்வதி தேவி சமேத ஸ்ரீ சந்த்ரமௌளீஸ்வர ஸ்வாமி பாஞ்சாஹ்னிக கல்யாணோத்ஸவம் ஆரம்பம், துவஜாரோகணம்.
8	25	செவ்வாய்	மாத சிவராத்திரி, மிருகசிர கார்த்தி ப.12-32.

ஆங்	தமிழ்	கிழமை	உத்ஸவாதி விவரங்கள்
9	26	புதன்	கார்வேடிநகரம் ஸ்ரீ வேணுகோபால ஸ்வாமி ரதோத்ஸவம்.
10	27	வியாழன்	கார்வேடிநகரம் ஸ்ரீவேணுகோபால ஸ்வாமி பிரம்மோத்ஸவ அவப்ருதம், சக்ர ஸ்நானம், துவஜாவரோகணம். ரிஷிகேஷ் ஸ்ரீபார்வதி தேவி சமேத ஸ்ரீ சந்த்ரமௌளீஸ்வரஸ்வாமி பாஞ்சாஹ்னிக கல்யாணோத்ஸவம் நிறைவு, நாராயணவனம் ஸ்ரீ பராசரேஸ்வரஸ்வாமி பிரம்மோத்ஸவம் அங்குரார்ப்பணம்.
			ஜ்யேஷ்ட மாசம்
11	28	வெள்ளி	நாராயணவனம் ஸ்ரீபராசரேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம் ஆரம்பம், கார்வேடி நகரம் ஸ்ரீ வேணுகோபாலஸ்வாமி புஷ்பயாகம்.
12	29	சனி	ஸ்ரீபுத்த ஜயந்தி, ஸ்ரீ பெரியாழ்வார் உத்ஸவம் ஆரம்பம், சந்த்ரோதயம்.
	ஆனி		**மிதுன மாஸம்**
15	1	செவ்வாய்	மிருகசிர-3 மிதுனத்தில் சூரியன் ப.12-50. இன்று மிதுன சங்கரமணம் ஷடசீத புண்யகாலம்.
17	3	வியாழன்	திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜஸ்வாமி புஷ்பயாகம் அங்குரார்ப்பணம்.
18	4	வெள்ளி	திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜஸ்வாமி புஷ்பயாகம், அப்பளாயகுண்டா ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவ அங்குரார்ப்பணம்.
19	5	சனி	அப்பளாயகுண்டா ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம் ஆரம்பம், துவஜாரோகணம்.
20	6	ஞாயிறு	திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் தெப்போத்ஸவம் ஆரம்பம். நாராயணவனம் ஸ்ரீபராசரேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவ அவப்ருதம், திரிசூலஸ்நானம், துவஜாவரோகணம், கங்கா ஜயந்தி.
21	7	திங்கள்	மதத்ரய ஏகாதசி, ஸ்ரீ பெரியாழ்வார் சாற்றுமுறை.
22	8	செவ்வாய்	ஆருத்ரா கார்த்தி ஆரம்பம். ப 1-31, திருமலையப்ப ஸ்வாமி ஜ்யேஷ்டாபிஷேகம் ஆரம்பம்.
23	9	புதன்	ஸ்ரீ நாதமுனிகள் திருநட்சத்திரம், அப்பளாயகுண்டா ஸ்ரீபிரசன்ன வேங்கடடேஸ்வர ஸ்வாமி கருடசேவை.
24	10	வியாழன்	திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் தெப்போத்ஸவம் நிறைவு. ஏருவாக பூர்ணிமா. திருமலையப்பஸ்வாமி ஜ்யேஷ்டாபிஷேகம் நிறைவு.
27	13	ஞாயிறு	அப்பளாயகுண்டா ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவ அவப்ருதம், சக்ரஸ்நானம், துவஜாவரோகணம்.
29	15	செவ்வாய்	திருச்சானூர் ஸ்ரீசுந்தரராஜஸ்வாமி அவதாரோத்ஸவம் ஆரம்பம்.
ஜூலை			
1	17	வியாழன்	திருச்சானூர் ஸ்ரீசுந்தரராஜஸ்வாமி அவதாரோத்ஸவம் நிறைவு.
5	21	திங்கள்	சர்வ ஏகாதசி.
6	22	செவ்வாய்	புனர்வசு கார்த்தி மா.3-10.
8	24	வியாழன்	மாத சிவராத்திரி.
			ஆஷாட மாஸம்
11	27	ஞாயிறு	ஸ்ரீ ஜகந்நாத ரதயாத்திரை, சந்த்ரோதயம்.
13	29	செவ்வாய்	ஸ்ரீநிவாசமங்காபுரம் ஸ்ரீகல்யாணவேங்கடேஸ்வர ஸ்வாமி சாக்ஷாத்கார உத்ஸவம் ஆரம்பம்.
14	30	புதன்	ஸ்ரீமரீசி மஹரிஷி திருநட்சத்திரம்.
15	31	வியாழன்	ஸ்ரீநிவாசமங்காபுரம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி சாக்ஷாத்கார வைபவோத்ஸவம் நிறைவு.

ஆங்	தமிழ்	கிழமை	உத்ஸவாதி விவரங்கள்
